
நீல நிலா
மதுரா

# நீல நிலா

**மதுரா**

**தனலெட்சுமி பதிப்பகம்**

S-17, அரவிந்த் நரேன் என்கிளேவ்
8, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார், தியாகராய நகர்,
சென்னை - 600 017.

நீல நிலா
மதுரா

முதற் பதிப்பு : டிசம்பர், 2010
பக்கங்கள் : 224
**விலை : ₹ 90/-**

**NEELA NILA**
by **MATHURA**
First Edition : December, 2010
Pages : 224
*Published by:*
**DHANALAKSHMI PATHIPPAGAM**
S-17, Arvind Narain Enclave,
8, Masilamani Street,
Pondy Bazaar,
T. Nagar, Chennai - 600 017.

**Price : ₹ 90/-**

D.T.P. at : S. Asokkumar
Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166

# என்னுரை

'மீன் துரத்துகிறது -
சோழ தேசத்து நிலவை
நிலவின் நிறம் நீலம்
மீனின் முகம் வேங்கை.
மதுரையில் -
நதியை சந்திக்கும் ஆறு
தஞ்சையில் -
நாட்டியம் மிரட்டும் நான்கு
மஞ்சள் -
ஒளிந்திருக்கிறது நீலத்துக்குள்
கறுப்புக் காலின் வெண்மை
தொட -
தொடு -
நீல நிலவை.

- *வந்தியத் தேவன்*

காதல் கதைகளை கவிதைக்குள் பொதிந்து வைத்திருப்பது போல இந்த வரலாற்றுக் கதையை - மேலே உங்கள் கண்கள் தொட்ட அழகு வார்த்தைகளுக்குள் பொதிந்து

வைத்துவிட்டுத்தான் என் இதயத்துக்குள் இருந்த கதைக்கு தலைப்பு தேடினேன்.

வானத்தில் மஞ்சள் நிலவு சிரித்தது.

நிலவு நீலமாய் இருந்தால்...

தலைப்பு ஓடிவந்து காகிதத்தில் விழுந்தது.

'நீல நிலா'

எந்த வானத்தில் நிலவு நீலமாய் இருக்கிறது?

கேள்வியை வாசகர் கேட்கட்டும். பதிலை கதை சொல்லட்டும்.

எழுத ஆரம்பித்தேன் முதல் அத்தியாயத்தை.

நான் எழுத ஆரம்பித்த நீல நிலவுக்குள் ஒராயிரம் கதைகள் கிடக்கின்றன - ஆழமாய் புதைந்து. உடையார்குடி கல்வெட்டு ஆயிரம் வருடமாக ஒரே ஓர் உண்மையை மட்டும் சத்தமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது. அந்த உண்மைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் ஒராயிரம் ரகசியங்களை யார் எனக்குச் சொல்லித் தருவார்கள்? சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் வந்து, சோழ வரலாற்றில் ஒளிந்து கிடக்கும் ரகசியங்களை எனக்கு சொல்லித் தருவானா? இல்லை ரகசியங்களை கண்டறிய என்னை அழைத்துக்கொண்டு இரவோடு இரவாக குதிரையில் கங்கை கொண்டசோழபுரத்துக்குச் செல்வானா அருண்மொழி வர்மன்?

சோழ ஒற்றர்படைத்தலைவன் கம்பன் மணியன் என் கனவில் வந்தாவது இளவரசன் கொலைக்கான காரணம் சொல்வானா... மன்னர் சுந்தரச்சோழ தேவரின் கண்ணீரின் கதையை எவர் எனக்குச் சொல்வார்?



சாளரத்து வழியே இரவு வானம் பார்த்து கண் சிமிட்டும் நட்சத்திரங்களை கண் அசைத்து அழைத்துப் பார்த்தேன். மேகங்களுக்கிடையில் ஓடி காற்றுக்கு கண்ணாமூச்சு காட்டுகிற மஞ்சள் நிலவை நிறுத்த முயன்றேன்.

எவரும் என் உதவிக்கு வரவில்லை.

நானே கற்பனைக் குதிரையின் மீதேறி -

மதுரைக்கும், தஞ்சாவூருக்கும், கங்கைகொண்ட சோழபுரத்துக்கும் பறந்து சென்றேன். நகரத்து வீதிகளில் -

ஓடினேன்... தேடினேன்... பாடினேன்... ஆடினேன்...

கண்களில் பயத்துடன் ஓடிக்கொண்டிருந்தாள் அழகுப்பதுமை நீலமதி.

இடுப்பில் குறுவாளுடன் குதிரையில் பாய்ந்தாள் கட்டழகி நதிமல்ரா.

இளமையின் வெகுமதிகள் குலுங்க குலுங்க சிரித்தாள் ஆரணங்கு கயல்விழி.

கீழ் உதட்டை குறுவாளால் தடவியபடி யோசித்தாள் இளவரசி குந்தவை.

எழுதுகோலை கையில் எடுத்தேன்.

சோழ வரலாற்றையே புரட்டிப்போட்ட சம்பவத்தை தொட்டும் - தொடர்ந்தும் - நூற்று எழுபத்தைந்து நாட்கள் நீல நிலாவை எழுதி முடித்தேன்.

தேவி வார இதழில் தொடராக வந்த இருபத்தைந்து வாரங்களும் என் இதயத்துக்கு இனிப்பாய் இருந்தாள் நீலமதி.

மழை இரவுக்குள் மயங்கிக் கிடந்தன வாசகர் இதயங்கள்.

நீல நிலா - படபடவென காட்சிகள் மாறி, தடதடவென ஓட்டம் பிடிக்கிறது கதை என்று கொளத்தூர் சுசீலாவும், நீல நிலா கதையில் இருவேறு சம்பவங்களை சுவை குன்றாமல் கண்முன் நடப்பது போன்று விறுவிறுப்பாக எழுத்தில் வடித்துள்ளார் மதுரா என்று சேலம் வசந்தியும், மதுராவின் நடையில் மனதை இழந்தேன் என்று சென்னை கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தியும், அமைதி தவழும் தலைப்பாக வைத்துவிட்டு கதையை ஆக்ரோஷமாக பாய வைக்கிறாரே மதுரா என்று நாகை மாலினியும், நீல நிலா இன்பச்சாரல் வீசும் இனிமை என்று சாத்தான்குளம் பாலசுந்தரி முருகனும், வாசகர்களின் மனதில் ஒளி வீசிய நீல நிலா என்று வடலூர் லட்சுமிநாராயணனும், நீல நிலா அதிசயப் பெட்டகம் என்று கொளத்தூர் வாசகி வாசுகியும், அவினாசி வசந்தி, சேலம் சித்ரகலா, நாகர்கோயில் சந்தோஷ் உமாதேவி என்று மற்றும் பலரும் பாராட்டு என்ற பெயரில் என் இதய வீதியில் இன்ப தேரோட்டியிருக்கிறார்கள். இத்தனைக்கும் சிகரம் வைத்ததுபோல எழுத்தாளர் மகேஷ்வரன் கடிதம் எழுதியிருந்தார்.

'நானும் எனது தாயார் திருமதி ஜி. விஜயலட்சுமியும் நீல நிலாவை ஆர்வமாய் வாசித்தோம். எக்காலத்தில் வாசித்தாலும் திகட்டாத படைப்பு நீல நிலா. கதைக்களம் மழை இரவு... மஞ்சள் இரவு... மல்லிகைப் பூக்கள்... மங்கலான ஒளியில் வீதிகள்... கொட்டுகிற மழை... அம்மழையில் சொட்ட சொட்ட நனைந்தபடி ஓடுகிற உணர்வைத் தந்தது நீல நிலா. மதுராவின் இந்த வரலாற்று புதினத்தில் நானும் ஒரு கதாபாத்திரமாகவே உருமாறி உலா வந்ததாக உணர்ந்தேன். மதுரா தனது எழுதுகோலில் 'மை' ஊற்றி நீல நிலாவை எழுதினாரா இல்லை மதுவை ஊற்றி எழுதினாரா?'



இந்த பாராட்டு மழையில் நனைவதற்காக காலம் போற்றும் வரலாற்றுப் புதினம் ஒன்றை எழுத வேண்டும் என்று எழுதுகோல் துடிக்கிறது. நீல நிலாவை வழி அனுப்பி வைத்துவிட்டு என்னுரையை முடிக்கிறேன். அதற்குள் நன்றி சொல்லும் கடமை இருக்கிறது.

நீல நிலாவை எடுத்து வானில் உலவ விட்ட பெருமதிப்பிற்குரிய தேவி ஆசிரியர் பா. இராமச்சந்திர ஆதித்தன் அவர்கட்கும், எழுத்துக்குள் உற்சாகம் விதைக்கிற தேவிபாலன் அவர்கட்கும், என் எழுத்தை ஓவியமாக்கி அழகு சேர்த்த ஓவியர் பாலன் அவர்கட்கும் என் இதய நன்றி.

நீல நிலாவை உங்கள் கரத்துக்கு தந்திருக்கிற சேதமில்லாத அன்புக்குச் சொந்தக்காரர் சேது சொக்கலிங்கம் அவர்கட்கு இதய நன்றி.

என்னை எழுத வைக்கிற வாசகர்கட்கும் இதய நன்றி கூறி இந்த இமை மூடு பொழுது விடைபெறுகிறேன்.

*இதய அன்புடன்,*

மதுரா

## பதிப்புரை

**25** அத்தியாயங்களில் மாபெரும் சோழ சகாப்தத்தை சரித்திர நாவலாக அளித்துள்ளார் அருமை நண்பர் திரு. மதுரா.

ஒவ்வோர் அத்தியாயமும் 'அடுத்தது என்ன?' என்று கேட்க வைக்கும் வகையில் விறுவிறுப்பாகச் செல்வது இவரது எழுத்துக்குள்ள வசியம்!

தென்பாண்டி நாட்டிற்குச் சொந்தக்காரரான ஆசிரியரின் எழுத்து தேன்போல் சுவைத்திட இனிதாக உள்ளது.

கதையைப் படியுங்கள்; கருத்தைச் சொல்லுங்கள். ஆசிரியருக்கு இதயம் கனிந்த நன்றி.

*- தனலெட்சுமி பதிப்பகத்தார்*



## ஒன்று

வாளும் வாளும்
சந்தித்தால்
யுத்தம்.
விழியும் விழியும்
சந்தித்தால்
முத்தம்.
வாளும்
விழியும்
சந்தித்தால்....?
சரித்திரத்தில்
நடந்த
விசித்திரமே
இந்தக் கதை.

தமிழ் மண் எங்கும் புலிக்கொடி பறந்த காலம் அது.

சோழ இளவரசன் ஆதித்த கரிகாலனின் மரணம் திசை எட்டையும் திகைக்க வைத்திருந்த தருணம் அது. மகனின் மரணம் மன்னர் சுந்தரச்சோழரை படுக்கையில் தள்ளி யிருந்தது. அரியணை ஆசையில் அண்ணன் மகனை

கொலை செய்து விட்டார் மதுராந்தகச் சோழர் என்று சோழ தேசம் பேசியது. சோழ இளவலை கொலை செய்தது யார்... பாண்டிய ஆபத்துதவிகளா... இல்லை உள்நாட்டு எதிரிகளா... பாண்டிய மன்னன் அமரபுயங்கனின் சதிவேலையா... மன்னன் மகனின் ரகசிய உறவுகளா... யார்... யார்... கேள்விகள் சுழன்றது சூறாவளியாய்... சருகுகள் மிதந்தன. சதிகளைக் காணவில்லை.

'எங்கள் சிறிய தந்தை மதுராந்தகச் சோழர் ஒருநாளும் அந்தத் தவறை செய்திருக்க மாட்டார். உண்மை குற்ற வாளியை கண்டுபிடித்து எங்கள் சிறிய தந்தை உத்தமச் சோழர் என்று சோழ மண்ணுக்கு நிரூபிப்பேன்' என்று பௌர்ணமி இரவில் சபதம் செய்துவிட்டு குதிரையில் ஏறிய சோழ இளவரசன் அருண்மொழிவர்மன்* எங்கிருக்கிறான். என்ன ஆனான் என்று சோழ தேசத்து மக்களுக்குத் தெரியவில்லை. அன்றும் அதுகுறித்து பழையாறை சிவன் கோயிலில் அமர்ந்து இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரம் -

நாகப்பட்டினத்தை நெருங்கியிருந்தது இரண்டு கரும்புரவிகள். மேற்கில் நகர்ந்த சூரியன் தொலைந்து போயிருந்தான். அவசரப்பட்டு வானத்துக்கு வந்திருந்த சித்திரை மாதத்து நிலவு இமைக்க மறந்து போயிருந்தது. இடைவிடாமல் இமைத்துக் கொண்டிருந்தன இமை இல்லா நட்சத்திரங்கள். பருவக்காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது.

* *முதலாம் இராசராசன் 985-1016*



குதிரைகளின் முதுகில் - முத்து வணிகர்கள். இருவரி டையேயும் மௌனம் அமர்ந்திருந்தது.

ஊரின் தென்கோடியில் -

பழைய கட்டடம் ஒன்று நின்றது நிலவின் ஒளியில் நனைந்தபடி. அதன் முன்னால் போய் குதிரைகள் நின்றன தயக்கத்துடன். அந்தக் கட்டடம் பயணிகள் தங்கும் விடுதி. சில விநாடிகளுக்கு முன்தான் விளக்குகள் ஏற்றப்பட்டது.

குதிரைகளின் குளம்பொலி கேட்டதும் - விடுதியின் மேன்மாடத்து சாளரம் திறந்து கொண்டது. எட்டிப் பார்த்தான் விடுதிக் காப்பாளன்.

"இடம் இல்லை" என்றான் அவசர அவசரமாய்.

"நாங்கள் முத்து வணிகர்கள். கொற்கையிலிருந்து வருகிறோம். அருள் கூர்ந்து சற்று இறங்கி வருகிறீர்களா?"

சாளரத்தில் தெரிந்த தலை மறைந்தது.

"இளவரசே..."

"பேசாமல் இரு."

அதற்குள் விடுதிக் காப்பாளன் அருகில் வந்திருந்தான்.

"நாங்கள் இன்று இரவு தங்க வேண்டும்."

"மேலே இருந்தால் ஒன்றும் கீழே இருந்தால் இன்னொன்றும் பேசுவேன் என்று நினைத்தீர்களா... அறை எதுவும் இல்லை. பெருந்தரத்து அதிகாரிகள் வந்தால் தங்குகிற அறை மட்டும்தான் இருக்கிறது" என்றான் விடுதிக் காப்பாளன் எரிச்சலுடன்.

"எங்களுக்கு அந்த அறையை சுத்தம் செய்து தாருங்கள்" என்றான் முத்து வணிகர் வேடத்திலிருந்த சோழ இளவரசன்.

கோபமாய் மறுப்பு சொல்ல வாய் திறந்த விடுதிக் காப்பாளனின் வாய் அவசர அவசரமாய் மூடிக்கொண்டது. அதற்குக் காரணமிருந்தது. இடுப்புக் கச்சையிலிருந்து சிறு முத்தொன்றை எடுத்து விடுதிக் காப்பாளனின் உள்ளங் கையில் திணித்திருந்தான் சோழ இளவல் அருண்மொழி வர்மன்.

"சற்று பொறுங்கள். அறையை சுத்தப்படுத்தித் தருகிறேன்" மின்னல் வேகத்தில் விடுதிக்குள் சென்றான் காப்பாளன்.

"இளவரசே.. விடுதிக்காப்பாளன் சரியான திருடனாய் இருப்பான் போலிருக்கிறது. கொஞ்சம் ஏமாந்தால் விடுதியையே விற்றுவிடுவான் போலிருக்கிறதே..." என்றான் சோழ ஒற்றர் படைத்தலைவன் கம்பன் மணியன்.

"ஏமாந்தால்தானே... வா குதிரையை கட்டிவிட்டு வருவோம்" விடுதியின் பின்புறமிருந்த மரங்களில் குதிரைகளை கட்டிவிட்டு சற்று தள்ளியிருந்த குளத்தில் நீராடிவிட்டு திரும்பினார்கள். பசி வயிற்றைக் கிள்ளியது.

விடுதியின் மேன்மாடத்தில் தென்திசையில் அமைந்திருந்த அறை ஒன்று சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. அறையின் மூலையில் சலவைத்துணி விரிக்கப்பட்ட அழகு மஞ்சம், மண் பாண்டத்தில் புது தண்ணீர். அறைக்குள் நுழைந்தனர் அருண்மொழி வர்மனும், கம்பன் மணியனும்.



அவர்களுக்குப் பின்னால் வந்து நின்றிருந்தான் விடுதிக் காப்பாளன்.

"மஞ்சம் இந்த அறையில் மட்டும்தான். நான் பரத்தையர் வீதிக்குச் செல்கிறேன். சேர நாட்டுப் பெண்கள் கிடைப் பார்கள். ஆசையிருந்தால் என்னோடு வாருங்கள். விருப்பம் இல்லாவிட்டால் கவிழ்ந்து விழுந்து படுத்துத் தூங்குங்கள். நான் வருகிறேன்" என்றான் காப்பாளன் படபடப்பான குரலில்.

"படுத்துத் தூங்குவதா...? பசிக்கிறதய்யா பேய் பசி. உங்கள் விடுதியில் சாப்பாடு போடும் பழக்கம் கிடையாதா?" பரிதாபமாய் கேட்டான் கம்பன் மணியன்.

சோழ இளவலுக்கு பொங்கி வந்தது சிரிப்பு.

"பசி வேளையில் சிரிப்பெதற்கு? காப்பாளரே... மதிய வேளையிலும் சரியான உணவு கிடைக்கவில்லை. இரவு சாப்பிட்டாக வேண்டும்" என்றான் கம்பன் மணியன் அழுத்தமான குரலில்.

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இரவுச் சாப்பாட்டை பொழுது சாய்ந்ததும் பரிமாறிவிட்டு முடித்துக் கொள்வது என் வழக்கம். இன்றும் நீங்கள் வருவதற்கு சற்று முன்னர்தான் உணவு பரிமாறப்பட்டது. ஒரு கவளம் உணவு கூட மீதமில்லை" என்றான் காப்பாளன் பாடம் சொல்வது போல்.

"புதிதாக சமைக்க முடியாதா?"

"அரிசி தீர்ந்து விட்டது" என்றான் காப்பாளன் அலட்சியமாய்.

கம்பன் மணியன் கண்களில் பசி மயக்கம் தெரிந்தது. பரிதாபமாய் அருண்மொழிவர்மன் முகத்தை திரும்பிப் பார்த்தான். இடுப்புக் கச்சையில் இருந்து இன்னொரு முத்தை எடுத்து விடுதிக்காப்பாளன் கையில் கொடுத்தான் சோழ இளவல்.

"அரிசி வாங்குவீர்களோ, நெல்லை வாங்கி அரிசி ஆக்குவீர்களோ எனக்குத் தெரியாது இன்னும் ஒரு நாழிகை நேரத்துக்குள் - இவன் முன் இலை இருக்க வேண்டும். இலையில் சோறு இருக்க வேண்டும்" என்றான் கட்டளையிடும் குரலில்.

விளக்கொளியில் கையிலிருந்த முத்தை புரட்டிப்பார்த்த காப்பாளனின் முகத்தில் புன்னகை பிறந்திருந்தது.

"இதோ அரை நாழிகைக்குள்" என்றவன் அவசரமாய் படிகளில் தடதடத்து காணாமல் போனான்.

"இளவரசே..."

"ம்..."

"சோழ சாம்ராஜ்யத்தில் கையூட்டு பெருகி விட்டது. கையூட்டு வாங்குகிறவர்களுக்குத் தக்க தண்டனை வழங்க வேண்டும். அதை கல்வெட்டுகளில் பொறித்தும் வைக்க வேண்டும்."

"ம்..."

"மாறு வேடத்தில் வராமலிருந்தால் நல்ல வரவேற்பும் கிடைத்திருக்கும். அரசு மாளிகையில் பொரித்த மீன், தித்திக்கும் பாயசத்துடன் அறுசுவை உணவும் கிடைத்திருக்கும். இரண்டையும் கெடுத்த இந்த மாறுவேடம் எதற்கு?"



"காரணம் இருக்கிறது கம்பன் மணியா காரணம் இருக்கிறது" என்றான் அருண்மொழி வர்மன்.

"காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"தெரிந்து கொள்ளலாம் நாளைக் காலையில்..." பேச்சை முடித்துக் கொண்டவன் போல மஞ்சத்தை விட்டு எழுந்து சாளரத்தை நோக்கி நடந்தான் மன்னன் மகன்.

கம்பன் மணியன் சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

சாளரத்தின் வழியே வானம் பார்த்தான் அருண்மொழி வர்மன். வான நதியில் நிலவு ஓடம் மிதந்து கொண்டிருந்தது. அல்லிகளாய் நட்சத்திரங்கள்... பாசிகளாய் மேகத் துணுக்குகள்... மஞ்சள் நிலவை உற்றுப் பார்த்தான். நிலவில் மனிதன் குனிந்து நிற்பது போல் கண்ணுக்குத் தெரிந்தது.

'மன்னனுக்குத் தெரியாமல் சோழ வீரன் எவனாவது நிலவுக்குச் சென்று விட்டானா... அங்கு புலிக்கொடியை பறக்க விடுவதற்காக குனிந்து நிலவைத் தோண்டுகிறானா..." புன்னகை உதடுகளை அசைத்தது.

"கம்பன் மணியா..."

"சொல்லுங்கள் இளவரசே..."

"வானத்தைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?"

"சரியான பச்சோந்தி என்று. பகலில் ஒரு நிறத்திலும் இரவில் வேறு நிறத்திலும் மாறி மாறி காட்சி தருகிறதே..."

"நிலவு...?"

"சாப்பாட்டு தட்டு போல் இருக்கிறது"

"நட்சத்திரங்கள்...?"

"கோபக்கார சிறுமி ஒருத்தி அள்ளி வீசிய சோற்று பருக்கைகள்"

"அட சாப்பாட்டு ராமா..."

"பசி நேரத்தில் பிறந்த கற்பனை. வேறு எப்படி இருக்கும்...?"

"உடனே உணவு கொண்டு வரச் சொல்கிறேன்"

"இதோ உணவே தேடி வந்து விட்டது" என்றான் கம்பன் மணியன் உற்சாகமாக.

அறைக்குள் நுழைந்த விடுதிக் காப்பாளன் கையில் பெரிய வாழை இலை ஒன்று இருந்தது. வேலையாள் ஒருவன் இரண்டு பாத்திரங்களை தூக்கி வந்தான் - கோரையினால் பின்னப்பட்ட பாய் ஒன்றை காப்பாளன் - தரையில் விரிக்க - இருவரும் அமர்ந்தனர்.

வாழை இலை இரண்டாக நறுக்கப்பட்டு - இருவர் முன்னாலும் போடப்பட்டு இலை ஓரத்தில் பனை வெல்லம் வைக்கப்பட்டது. அன்னம் பரிமாறப்பட்டது.

வதக்கிய கத்தரிக்காய்,, பொரித்த பாகற்காய்,, எலுமிச்சை ஊறுகாய்,, ஒரு பாத்திரத்தில் கெட்டித் தயிர்.

"எனக்கொரு பாட்டு நினைவுக்கு வருகிறது"

"சாப்பாட்டுக்கும் பாட்டா... ம்... சொல்"



* "கத்து கடல் சூழ் நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும் - குத்தி
உலையில் இட ஊர் அடங்கும், ஓர் அகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்"

கம்பன் மணியன் பாடலை பாடி முடித்ததும் - கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தான் சோழ இளவல்.

"முத்து வணிகரே.. சாப்பிட்டு விட்டு சாவகாசமாய் சிரியுங்கள்.. சுந்தரி என்னை தேடிக் கொண்டிருப்பாள்.. நான் போக வேண்டும்"

"விடுதிக் காப்பாளரே.. நாளை முதல் முழு நேரமும் சுந்தரி வீட்டில் நீர் தங்கி இருப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றான் அருண்மொழிவர்மன் வார்த்தையில் குறும்பு மிதந்தது.

"எனக்கு ஒரு கூடை முத்து தரப் போகிறீர்களா.. உடனே தாருங்கள். சுந்தரி மடியையே மஞ்சமாக்கிக் கொள்கிறேன்" என்றான் காப்பாளன் அகலச் சிரிப்போடு. இருவரும் சாப்பிட்டு முடித்திருந்தார்கள்.

விடுதிக் காப்பாளன் விடை பெற்றுச் செல்ல சாளரத்தின் அருகில் போய் நின்று கொண்டான் அருண்மொழிவர்மன். பாயை உதறி தரையில் விரித்து படுத்துக் கொண்டான் கம்பன் மணியன்.

"கம்பன் மணியா இங்கே வா.. புதிதாய் ஒரு நட்சத்திரம் முளைத்திருக்கிறது"

---

* *தனிப்பாடல் திரட்டு - காளமேகப் புலவர். பா. 380. ப. 138.*

"இளவரசே, உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு என்பார்கள்.. இந்த குண்டனுக்கு இருக்கக் கூடாதா.. சற்று கண் மூடுகிறேன். நட்சத்திரங்களை எண்ணி முடித்ததும் என்னை எழுப்புங்கள்" என்றவன் கண்களை இறுக்கி மூடிக் கொண்டான்.

இருந்தும் கம்பன் மணியனுக்கு உறக்கம் வரவில்லை. சற்று நேரம் கழித்து கண் திறந்து பார்த்தான். சாளரத்தின் அருகே நின்று கொண்டிருந்த இளவரசனை காணவில்லை. திரும்பி மஞ்சத்தை பார்த்தான். மல்லாந்து படுத்திருந்தான் அருண்மொழிவர்மன்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான் என்பதை மார்பசைவு காட்டிக் கொடுத்தது.

"இத்தனை சீக்கிரத்தில் படுத்ததும் தூங்கி விட்டாரே.."

வியப்புடன் திரும்பிப் படுத்தான். நெடு நேரம் தூக்கம் வர மறுத்தது. புரண்டு புரண்டு படுத்தான். அப்படியே தூங்கிப் போனான். தூக்கத்தில் கனவு வந்தது. கனவில் முத்துப்பல் சிரிப்புடன் அழகிகள் வந்தனர். உதடுகள் புன்னகையில் விரிந்தது. குறுக்கே குறுவாளுடன் வந்தான் எதிரி. திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் கம்பன் மணியன் விழிகளைச் சுழற்றி மஞ்சத்தைப் பார்த்தான். அதிர்ச்சி காத்திருந்தது. அருண்மொழிவர்மனைக் காணவில்லை.

**மு**தலிரவு அறைக்குள் இருந்து காலையில் தயங்கி தயங்கி வெளியே வரும் புது மணப் பெண்ணின் உதடுகள் போல வெளுக்கத் தொடங்கியிருந்தது கீழ் வானம்.



காதலியை பிரிய மனமில்லாத காதலன் போல தயக்கமாய் நின்று கொண்டிருந்தது மஞ்சள் நிலவு மேலை வானத்தில்.

கரையோர புற்களின் மேனி தொட்டு பூபாளராகம் பாடிக் கொண்டிருந்தது வைகை ஆறு.

ஆற்றை நோக்கி தயங்கி தயங்கி வந்தாள் இளம் பெண் ஒருத்தி. வயது பதினாறை தொட்டிருக்கும்.

இளமை பதினாறை தாண்டுகிற முயற்சியில் இருந்தது.

கால் கொலுசு முணுமுணுத்தது மெல்ல.. மெல்ல.. என்று.

ஆற்றை நெருங்கியவள் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்தாள் பயத்துடன். அவள் அழகு முகத்தில் புன்னகை ஒன்று பிறந்திருந்தது. அமைதியாய் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் சற்று நேரம்.

வைகையின் முதுகில் நிலா சவாரி செய்து கொண்டிருந்தது. மஞ்சள் நிலவை உடைக்க வேண்டும் போலிருந்தது காரிகைக்கு.

குனிந்து வெண் மணலில் கிடந்த சங்கொன்றை எடுத்து வீசினாள்.

"ச் செலக்.." என்ற சத்துத்துடன் சங்கு ஆற்றில் விழுந்து நிலவை உடைத்தது. அலை அலையாய் அசைந்த ஆற்று நீரில் ஒளிந்து கொண்ட நிலவு மீண்டும் அந்த ஆரணங்கை எட்டிப் பார்த்து சிரித்தது.

'அடி கள்ளி.. கண்ணா மூச்சியா காட்டுகிறாய்.. வானத்தில் உன் தமக்கை உனக்காக காத்திருக்கிறாள். ம்.. போ.. போய் விடு.. நான் ஆற்றில் குளிக்க வேண்டும். நீ இருந்தால் எனக்கு வெட்கமாய் இருக்காதா.. ம்.. போ.. போக மாட்டாயா.. இரு.. உன்னை தூக்கி மணலில் வீசி விடுகிறேன்.'

ஆற்றில் தெரிந்த நிலவின் நிழலிடம் மானசீகமாய் பேசினாள் அந்த வனிதை.

அடுத்த இமை மூடு பொழுது -

தன் மேனியில் போர்த்தியிருந்த மெல்லிய பருத்தி ஆடையைச் சுருட்டி ஆற்றோரத்து மல்லிகை புதர் மீது வீசினாள்.

நான்கு பக்கமும் கண்களை ஓட விட்டாள். அவசரமாய் மார்பு கச்சையை அவிழ்த்து பருத்தி ஆடை மீது வீசினாள் அப்பாடா என்றது இளமையின் வெகுமதிகள்.

அடுத்த இமை மூடு பொழுது -

ஆரணங்கு ஆற்றுக்குள் குதித்திருந்தாள் இடுப்பாடை யுடன். ஆற்று நீர் ஜில்லென்று மேனி நனைத்தது. நீரில் மூழ்கியவள் தலை உயர்த்தினாள்.

நனைந்த கேச குழல்கள் தோள் வழியே வழிந்து மார்பு நனைத்தது. கரையை எட்டிப் பார்த்தவள் - உற்சாகம் வந்தவளாய் நீந்த ஆரம்பித்தாள்.

தண்ணீரை கிழித்துக் கொண்டு பாய்ந்தாள் ஆற்று சிறு மீனாய். கொஞ்ச நேரம் நிலவு வெட்கப்பட வானம் பார்த்து நீந்தினாள்.



நீருக்குள் மூச்சடக்கி மூழ்கி -

விலாங்கு மீனாய் பாய்ந்து - கரையோரம் வந்து தலை தூக்கினாள். அதிர்ந்தாள்.

காதில் வந்து மோதியது -

குதிரைகளின் குளம் பொலி.



# இரண்டு

கம்பன் மணியன் கண்களை அதிர்ச்சி தாக்கியிருந்தது. தூக்கம் தொலைந்து போயிருந்தது. உடம்பு மெலிதாய் நடுங்கவும் செய்தது. மன்னர் சுந்தரச் சோழரின் வார்த்தைகள் காதில் அறைந்தது.

'ஆதித்த கரிகாலனை இழந்து விட்டேன். அருண் மொழிவர்மனையும் இழக்கத் தயாராயில்லை. நீதான்.. நீதான் அவனோடு செல்ல வேண்டும்.. அருண்மொழி உன் உயிர் நண்பன். எனக்கோ உயிர். என் மகன் தேசம் எங்கும் சுற்றி வர வேண்டும் என்கிறான். தேசத்தை சுற்றி மட்டுமல்ல தேசத்துக்கு உள்ளும் எதிரிகள் வந்து விட்டார்கள். நீதான் என் மகனை பத்திரமாய் கொண்டு வந்து என்னிடம் சேர்க்க வேண்டும்'

கொடுத்த வாக்கை தொலைத்த பயம் வந்திருந்தது. எழுந்து அமர்ந்தான் அவசர அவசரமாய். இதயம் வேகமாகியிருந்தது. கொஞ்சம் வியர்த்திருந்தான். எழுந்து போய் சாளரம் தொட்டான்.



குளிர் காற்று முகத்தில் மோதியது. நட்சத்திரங்கள் கரைந்து போயிருந்தது. சூரியனுக்கே தயாராகும் வானத்து வெளிச்சத்தில். நிலவும் தொலைந்து போயிருந்தது.

உயர மரங்களின் தலை எங்கும், பறவைகள். கால் உரசி தலை உரசி சப்தம் போட்டன சங்கீதமாய். வேறு எதுவும் கண்களுக்குத் தெரியவில்லை. திரும்பி மஞ்சத்தை பார்த்தான். அருண்மொழி படுத்து உறங்கியதற்கான எந்த அடையாளமும் இல்லை.

'என்னிடம் சொல்லாமல் எங்கே போயிருப்பார்..'

திரும்பி - அந்த அறையின் கதவைப் பார்த்தான் வெளியே கதவு பூட்டியிருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. தயக்கத்துடன் கதவை தொட்டான். சப்தமில்லாமல் கதவு திறந்து கொண்டது.

'காலையில் எழுந்து குளிக்கப் போய் விட்டாரா..' மேன் மாடத்து படிகளில் தடதடத்து கீழே வந்தான்.

எந்த வித நடமாட்டமும் இல்லை. விடுதியின் பின் புறக் கதவு திறந்தே கிடந்தது. தோட்டத்துக்கு வந்தான்.

இருட்டு இன்னும் விலகாமல் இருந்தது. தடாகம் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான் கம்பன் மணியன்.

தடாகத்தை நெருங்க.. நெருங்க.. அந்தக் குரல் கேட்டது மெலிதாய். அந்தக் குரலை மீறி யாரோ தடாகத்தில் குளிக்கும் சத்தம் - சத்தமாய் கேட்டது.

தடாகத்தை நோக்கி நடந்தான் வேகமாய். பாடல் வரிகள் காற்றை துரத்தியது.

*"அஞ்சு கிணத்துத் தண்ணி
அரைக் கிணத்து உப்புத் தண்ணி
செம்புக் குடத்துத் தண்ணி
சேருறது எந்தக் காலம்..?
வீதியோரம் தோட்டக்காரி
மல்லியப்பூ சேலைக்காரி
நீ இறைக்கும் தண்ணியிலே
மல்லியப்பூ மணக்குதடி...."

இன்னும் சற்று வேகமாய் நடந்து தடாகத்தை தொட்டிருந்தான். அங்கே ஆச்சரியம் காத்திருந்தது.

தடாகத்தில் ஓர் உருவம் குதித்து குதித்து குளித்துக் கொண்டிருந்தது. அந்த உருவம்தான் பாடிக் கொண்டும் இருந்தது. அந்தக் குரல் காற்றை மிரட்டிக் கொண்டிருந்தது. உருவத்தின் கரங்கள் தண்ணீரை அடித்து அதட்டிக் கொண்டிருந்தது. தடாகத்தை நெருங்கி உற்றுப் பார்த்தான்.

அந்த உருவம் - விடுதி காப்பாளன். பாடல் அறுந்து போயிருந்தது.

"என்ன முத்து வணிகரே.. பேயை பார்த்தது போல் பயந்து விட்டீர்களா..?"

"பயம்.. பயந்துதான் விட்டேன்"

"நக்கன் சுந்தரியை நீர் பார்த்திருந்தால் பயம் போயிருக்கும்"

"அவள்தான் அந்த மல்லிகைப்பூ சேலைக்காரியா..?" அந்த கேள்வி விடுதிக் காப்பாளனுக்கு உற்சாகத்தை

* தமிழர் நாட்டுப் பாடல்கள் தொகுப்பாசிரியர்: நா. வானுமாமலை எம்.ஏ.,எல்.டி. பக்கம் - 135.



தந்திருந்தது. மீண்டும் பாட ஆரம்பித்தான் குரல் உயர்த்தி.

அவசரமாய் -

அந்த இடத்தை விட்டு அகன்றான் கம்பன் மணியன்.

'இனி எங்கே போய் தேடுவது..?'

மரங்களுக்கிடையில் நடந்தான் சிந்தனையை துரத்தியபடி.

'குதிரையில் எங்காவது போயிருப்பாரோ..'

குதிரைகளை கட்டிப் போட்டிருந்த இடம் நோக்கி நடந்தான். அங்கேயும் அதிர்ச்சி காத்திருந்தது. அருண்மொழி வர்மன் குதிரை மட்டுமல்ல - கம்பன் மணியனின் குதிரையையும் காணவில்லை.

ஆற்று சிறு மீனாய் - ஆனந்தமாய் குளித்துக் கொண்டிருந்த அந்த ஆரணங்கு அதிர்ந்து போனாள். அவள் அதிர்ச்சிக்கு காரணமிருந்தது. காதில் விழுந்த குதிரைகளின் குளம்பொலி அவளை அதிரச் செய்திருந்தது. குதிரைகளில் பாண்டிய வீரர்கள் வருகிறார்களோ என்ற அச்சம் இதயத்துக்குள் வந்திருந்தது. அதனால் இதயம் வேகமாயிருந்தது. அவள் பயத்துக்கு காரணம் - சமீப காலமாக சோழர் பாதுகாப்பு படைக்கு பயந்து பகலில் பாண்டிய வீரர்கள் பதுங்கிக் கொள்வதும், இரவில் கறுப்பு வெளவாலாய் வெளியே வந்து வணிகர்களிடம் தங்கள் கைவரிசையை காட்டுவதும், இளம் பெண்களிடம் வம்பு செய்வதும் வழக்கமாயிருந்தது.

சட்டென்று தாமரை மொட்டுகளுக்கு பின்னால் ஒளிந்தாள். முகத்தில் ஒட்டியிருந்த ஈர முடிக் கற்றைகளை

விலக்கி கரையை எட்டிப் பார்த்தாள். ஆற்றின் கரையில் - இரண்டு குதிரைகள் ஓடி வருவது தெரிந்தது. அந்த குதிரைகள் அந்த வனிதை குளித்து கொண்டிருக்கும் இடம் நோக்கித்தான் ஓடி வந்து கொண்டிருந்தது அவசரமில்லாமல், குதிரைகளின் முதுகில்.. முதுகில்.. இரண்டு பாண்டிய வீரர்கள். அவள் இதயம் இன்னும் வேகமாய் துடிக்க ஆரம்பித் திருந்தது.

நீருக்குள் இருந்து எழுந்த முகம் -

அந்த குளிரிலும் வியர்த்திருந்தது. கண்கள் குதிரை களின் கால்களையே கண் மறந்து கவனித்தது. இதயம் துடிக்கிற துடிப்பில் ஆற்று நீருக்குள் குதித்து விடுமோ என்று இதயத்துக்குள் பயந்து கொண்டாள் காரிகை.

அடுத்த இமை மூடு பொழுது -

மார்பு கச்சை அணியாதது நினைவுக்கு வந்து அச்சுறுத்தியது. சத்தம் வராமல் தண்ணீருக்குள் வேகமாய் நீந்தி - சற்று தள்ளி தலையை நீட்டிக் கொண்டிருந்த பாறையில் போய் தலை சாய்த்தாள். அந்த பகுதியில் நாணல்களும், தாமரை மொக்குகளும் மிதந்து காணப்பட்டன. அந்த பூங்கொடியின் மேனியில் பூத்த மொக்குகளை நீரில் மிதக்கும் தாமரை மொக்குகள் மறைத்தன தள்ளாட்டத்துடன். தண்ணீரில் விழுந்து விட்ட மஞ்சள் நிலவாய் முகத்தை தூக்கி எட்டிப் பார்த்தாள் குதிரைகள் ஓடி வந்த திசையில்.

கரும்புரவிகள் இரண்டும் தயங்கி தயங்கி வந்து கொண்டிருந்தன. அவற்றின் முதுகில் அமர்ந்திருந்த பாண்டிய வீரர்களின் கண்கள் அங்கும் இங்கும் தத்தி தத்தி



திரிந்தன. யாரையோ தேடுகின்ற பாவனை அந்த கண்களில் தெரிந்தது. அந்த காரிகைக்கு தண்ணீருக்குள் வியர்த் திருந்தது.

அந்த இளம் பெண் நின்று கொண்டிருந்த இடத்தைச் சுற்றி நிறைய தாமரை மொக்குகள் உயர்ந்து நின்றதாலும், அந்த ஏந்திழை பாதி முகத்தை ஆற்று நீருக்குள் மறைத்து கொண்டிருந்ததாலும், கரையோரம் அடுக்கடுக்காய் மல்லிகை புதர்கள் இருந்ததாலும் அவர்கள் பார்வை அவளைத் தொடவே இல்லை. குதிரைகள் நத்தை போல் நகர்ந்து அந்த இடத்தைக் கடந்திருந்தன.

அந்த இளம் பெண்ணோ முள்ளின் மேல் நிற்பதாய் உணர்ந்தாள். ரொம்ப நேரம் நீருக்குள் நின்றதால் விடிகாலை குளிர் முத்துப்பற்களை தாளம் போட வைத்தது. தென்றல் தொடாத இடங்களை கடித்துப் பார்க்க ஆசைப்பட்டன ஆற்று சிறு மீன்கள். தன் வாழைத் தண்டு கால்களை அசைத்து மீன்களை பயமுறுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள். தோல்விக்கு காரணம் - அந்த மீன்களுக்கு அந்த அழகு கால்களிடம் பயம் இல்லை. காதல் இருந்தது.

அந்த சின்னப் பெண்ணின் சங்கடம் அறியாத கரும் புரவிகளோ, பாண்டிய வீரர்களை சுமந்தபடி அசைந்து அசைந்து சென்றன பழையாறை தேராய்.

குதிரைகள் நகர.. நகர.. தங்க மேனியாள் நிம்மதி பெருமூச்சுடன் நிமிர்ந்தாள். இளமையின் வெகுமதிகள் தண்ணீருக்கு மேல் தத்தளித்தது. எங்கிருந்தோ பறந்து வந்தது கறுப்பு வண்டு ஒன்று. அந்த ஆரணங்கை மூன்று முறை சுற்றியது.

சந்திரனை பார்த்து காதலுடன் மலர்ந்து நின்ற காதல் அல்லி மலர் மதுவை உண்டு வந்திருக்க வேண்டும் அந்த வண்டு. மது தந்த மயக்கம் தண்ணீரில் மிதந்து தள்ளாடிக் கொண்டிருந்த தாமரை மொக்குகளுக்கும், அந்த வனிதை யின் இடை சுமந்து நின்ற இளமையின் வெகுமதிகளுக்கும் இருந்த வித்தியாசம் அந்த வண்டுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

'அல்லி மது உண்டு விட்டோம். தாமரை மதுவும் அருந்தி விட்டால்..'

உற்சாகமாய் மென் இடையாளின் தோளில் அமர்ந்தது அந்த வண்டு. அடுத்த விநாடி சிறகு உதறியது பொறாமையில்.

'எனக்கு போட்டியாய் இன்னும் இருவரா..' மதுவின் கிறக்கத்தில் கோபமாய் கடிக்க –

"ஆ" என்று அலறினாள் அனிச்சை செயலாய்.

அதிர்ந்து திரும்பினான் –

குதிரையின் முதுகில் அமர்ந்திருந்த பாண்டிய வீரன் ஒருவன்.

'என்ன செய்வது'

வலியில் மேனி தடவி நின்றாள் மொய் குழலாள்.

குதிரைகள் இரண்டும் ஓட்டத்தை நிறுத்தியிருந்தன. அவசர அவசரமாய் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தாள் பாவை. ஆற்றில் மிதந்த தாமரை மொட்டுகள் பயத்தில் தள்ளாடின. வளையம் வளையமாய் சென்ற நீர் அலையில்



சிக்காமல் மேனியை மட்டும் அசைத்துக் கொண்டன தாமரை இலைகள்.

அலறும் பெண் குரல் காதில் விழுந்த வீரன் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தான். அந்த வீரனின் கண்களுக்கு ஆற்றின் நீர் பரப்பும், மிதக்கும் தாமரை மொட்டுகள் மட்டுமே கண்ணில் பட்டன.

'எதுவும் இல்லையே..' சந்தேகம் விலகாமல் கரையோர மல்லிகை புதர்களை உற்றுப் பார்த்தாள்.

"எதை அப்படி உற்றுப் பார்க்கிறாய் கந்தா.. நம்மை தாக்கிய சோழ வீரன் புதரில் ஒளிந்திருப்பான் என்று நினைக்கிறாயா..?" கேள்வி வந்தது அருகிருந்த குதிரை வீரனிடமிருந்து.

"இல்லை இல்லை. ஏதோ ஒரு பெண்ணின் அலறல் சத்தம் காதில் விழுந்தது. அதனால் தான் திரும்பிப் பார்த்தேன். யாரையும் காணவில்லை. உன் காதில் விழுந்ததா..?"

"எதுவும் விழவில்லை"

"உன் காதில் கல்லைத்தான் போட வேண்டும்"

"வைரக் கல்லா..?"

"முட்டாள்.. யாரோ அங்கு இருக்கிறார்கள். அதுவும் பெண்" குரலில் கோபம் மிதந்தது.

"ம்.. நாம் வந்த வழியில் மல்லிகை செடி ஒன்றின் மீது பெண்கள் போர்த்துகின்ற துகில் ஒன்றை பார்த்தேன்"

"துகிலா..?" வியப்பு கேள்வியாய் பிறந்தது.

"துகில்தான்" என்றான் உறுதிப் படுத்தும் குரலில்.

அதே நேரம் -

தண்ணீருக்குள் மூச்சடக்கி மூழ்கியிருந்த வனிதை பயத்துடன் தலையை தூக்கி எட்டிப் பார்த்தாள். குதிரைகள் தூரமாய் நிற்பது தெரிந்தது.

மின்னல் வேகத்தில் -

தண்ணீருக்குள் இருந்து எழுந்தாள். தாமரை மொக்குகள் தள்ளாடின. மீன்கள் பயந்து ஓடின. கண்கள் மீனாய் துடிக்க.. கரையை நோக்கி ஓடினாள் மானாய்.

O



# மூன்று

விடிந்து வெகு நேரம் ஆனபின் தான் அருண்மொழி வர்மன் வீடு வந்து சேர்ந்திருந்தான். வாசலில் நின்று கொண்டிருந்த கம்பன் மணியன் முகம் மலர்ந்தது.

"எங்கே போயிருந்தீர்கள்..?"

"கடலுக்குள்"

"கடலுக்குள்ளா..?"

"ஆம். வல்லவரையர் வரச் சொல்லியிருந்தார்"

"வல்லவரையர் வந்தியத் தேவரா..?"

"ஆம். அவரேதான்"

"தங்கள் தமைக்கையார் குந்தவை பிராட்டியாருடன் வந்தியத் தேவர் பழையாறை சென்றிருப்பதாக அல்லவா கேள்விப் பட்டேன்"

"கேள்விப்பட்டது உண்மைதான். அங்கிருந்து நாகை வந்திருக்கிறார்"

"என்னுடைய குதிரை..?"

"பரமன் மழபாடி கொண்டு சென்றிருக்கிறார்."

"சேனாதிபதியாரா..?!"

"நாகப்பட்டினம் தண்ணீரைக் குடித்ததும் உனக்கு மறதி வந்து விட்டதா.. பரமன் மழபாடியைக் கூட ஞாபகம் இல்லையா உனக்கு..?"

"மதுரையில் இருந்தாரேயென்று கேட்டேன்"

"இன்று நாகையில் இருக்கிறார்"

"அவருடைய குதிரை எங்கே..?"

"இறந்து விட்டது"

"இறக்காமல் என்ன செய்யும்..? பரமன் மழபாடியை குறி வைத்து வீசிய குறுவாள் குதிரையின் கழுத்தில் பாய்த்திருக் கிறது. குறுவாள் நுனியில் விஷம் வேறு தடவியிருந் திருக்கிறது"

"குறுவாளை வீசியது யார்..?" என்று கேட்டான் கம்பன் மணியன் வியப்பாய்.

"பெண்" என்றான் அருண்மொழிவர்மன்.

"பெண்ணா..?" கேள்வியில் வியப்பு அதிகரித்திருந்தது.

"ஆம். அதுவும் இளம் பெண்" என்றான் சோழ இளவல்.

"படைத் தலைவர் பரமன் மழபாடியை குறுவாள் வீசி கொலை செய்ய முயற்சிக்கும் அளவுக்கு துணிச்சல் சோழ தேசத்து பெண்களுக்கு வந்து விட்டதா.."



"துணிச்சல் வந்திருப்பது ஈழத்தீவுப் பெண்ணுக்கு."

"என்னது.. ஈழத்துப் பெண்ணா..?"

"ஆம்"

"என்ன ஆனாள்..?"

"சிங்களத்து சின்னக் குயில் பத்திரமாய் இருக்கிறது நம் சிறையில்"

"எனக்கொரு சந்தேகம்" குரல் தாழ்த்திக் கேட்டான் கம்பன் மணியன்.

"ம்.. கேள்" என்றான் மன்னன் மகன் புன்னகையுடன்.

"அவசர அவசரமாய் வந்தியத் தேவரும் பரமன் மழபாடியும் எதற்காக நாகை வந்திருக்கிறார்கள்..?"

"தஞ்சையிலிருந்து படைப் பிரிவு ஒன்று புறப்பட்டு நாகை எல்லையில் வந்து தங்கியிருக்கிறது. அதற்கு தலைமைப் பொறுப் பேற்று பரமன் மழபாடி வந்திருக்கிறார். நாகைக்கு இரண்டு கல் தொலைவில் ரகசியமாக போர்க் கப்பல்கள் கட்டும் பணி நடக்கிறது. அந்த பணியை கண் காணிக்க வந்தியத் தேவர் வந்திருக்கிறார் - அருண்மொழி வர்மன் சொல்ல சொல்ல வியப்பின் எல்லைக்கே சென்றிருந்தான் கம்பன் மணியன்."

"எனக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன நடக்கிறது இந்த சோழ தேசத்தில்..?"

"அதிகமாய் ஒன்றும் நடக்கவில்லை. சேர தேசத்துடன் ஒரு போருக்கு தயாராகிக் கொண்டிருக்கிறோம். கடலில்

வலிமை பெற்று திகழ்கிறான் சேர மன்னன். அவனுக்கு நிகராக நம் கடல் வலிமையை உயர்த்தவே ரகசியமாக போர்க் கப்பல்கள் கட்டும் பணி. மேலும் கொள்ளையரை ஒடுக்கச் செல்லும் கப்பல்களில் வணிகர் வேடத்தில் செல்லவே தஞ்சையிலிருந்து கடல் போரில் சிறந்த வீரர்கள் பரமன் மழபாடி தலைமையில் வந்திருக்கின்றனர். அது மட்டுமல்ல நமது வணிகக் கலங்கள் நாகையில் புறப்படுவதை கொள்ளையர்களுக்கு முன்னதாக தெரிவித்து வந்த தமிழ் இனத் துரோகிகள் மூன்று பேர் சிறை செய்யப் பட்டிருக்கிறார்கள். மூன்று பேரில் ஒருவனை நாமே அனுப்பி வணிகக் கப்பல் ஒன்று நாகையில் இருந்து புறப்பட்டு வருவதாகப் பொய் தகவல் சொல்லப் போகிறோம். கப்பலில் போகப்போவது வணிகர்கள் அல்லர். வீரர்கள். ஏற்றிச் செல்வது பொருள்களையல்ல. ஆயுதங்களை." என்றான் அருண்மொழி வர்மன் புன்னகை மாறாமல் கம்பன் மணியன் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றான் அசைவற்று.

"கம்பன மணியா.."

"ம்.."

"இன்னும் சிறிது நேரத்தில் வல்லவரையர் வந்தியத் தேவர் இந்த விடுதிக்கு விஜயம் செய்யப் போகிறார்."

"ஏன் திடீரென்று..?"

"புதிய விடுதிக் காப்பாளரை நியமனம் செய்ய."

"விடுதிக் காப்பாளராய் இருப்பவன்..?"



"சிறையில் இருப்பான். செய்த குற்றம் இரண்டு. ஒன்று லஞ்சம் வாங்கியது. மன்னிக்கலாம். இரண்டாவது குற்றம் மன்னிக்க முடியாதது"

"அப்படியென்ன பெருங்குற்றம்..?"

"ராஜத் துரோகம்..?"

"என்ன செய்தான்..?"

"பாண்டிய ஆபத்துதவிகளுக்கு உணவளித்திருக் கிறான்"

"நேற்றே நினைதேன்"

"இன்று வரை சொல்லவில்லை. நல்லது. நான்தான் பாண்டிய மன்னன் என்று மதுரையைச் சுற்றி கொட்டமடித்து விட்டு காட்டுக்குள் ஓடிப் போய் ஒளிந்து கொள்ளும் அமர புஜங்கனை சந்திக்கப் போகிறேன். உன்னை மதுரையில் சந்திக்கப் போகிறேன். நான்கு நாட்கள் கரைந்ததும். அதுவரை வந்தியத் தேவருடன் இரு. வந்தியத் தேவர் கண்ணசைத்ததும் மதுரைக்கு வா" ஓடிப் போய் குதிரையில் தாவி ஏறினான் அருண்மொழிவர்மன். வாய் வார்த்தைகள் வராமல் நின்று கொண்டிருந்தான் கம்பன் மணியன்.

**அ**லறல் சத்தம் குதிரை வீரர்களை இழுத்து நிறுத்தியிருந்தது. ஆற்றுச் சிறுமீனாய் ஆனந்தமாய் குளித்துக் கொண்டிருந்த வனிதை வண்டு செய்த வாலிப சேட்டையால் அலறி ஆபத்தை வரவழைத்துக் கொண்டாள் அவளையும் அறியாமல்.

'சந்தேகம் வந்து விட்டது குதிரை வீரர்களுக்கு.. இனியும் தண்ணீருக்குள் இருந்தால் தலைக்கு வந்து விடும் கத்தி.. கரைக்கு ஓடி எங்காவது ஒளிந்து கொள்ள வேண்டியது தான்.' முடிவுக்கு வந்தவளாய் தண்ணீரை விட்டு எழுந்தாள்.

'வெட்கம்.. வெட்கம்' - என்றது தண்ணீரில் மிதந்த தாமரை மொட்டுகள். அவளோ வெட்கம் துறந்து தண்ணீரில் நனைந்த தாமரை மொட்டுகள் சிரமம் மறந்து ஓடினாள் கரையை நோக்கி.

ஓடிய வேகத்தில் மல்லிகைப் புதரில் வீசி எறிந்திருந்த துகிலையும் மார்புக் கச்சையையும் அள்ளிக் கொண்டு ஓடினாள்.

"அதோ.. அதோ.." பதற்றத்தில் கத்தினான் குதிரை வீரன்.

அவன் சுட்டு விரல் சுட்டிய இடத்தில் -

கையில் மார்பு கச்சையுடன் ஓடிக் கொண்டிருந்தாள் வனிதை. அருகில் இருந்தவன் திரும்புவதற்குள் காணாமல் போயிருந்தாள். கையில் கச்சையுடன் மல்லிகை புதர் ஒன்றுக்குள் ஒளிந்து கொண்டிருந்தாள். அவரச அவசரமாய், இதயம் துடித்தது வேக வேகமாய்.

"ஒரு பெண் ஆற்றில் இருந்து ஓடி மல்லிகை புதருக்குள் ஒளிந்து விட்டாள். அலறியவள் அவளாகத்தான் இருக்கும். ஆண் மகன் யாராவது இருக்கக் கூடும். அடுத்த இமை மூடு பொழுது திருப்பப்பட்டன குதிரைகள்.

மல்லிகை புதருக்குள் பின்னால் ஓடிச் சென்ற காரிகை முகம், கழுத்து, மார்பு பிரதேசம் துடைத்தாள் நடுக்கத்துடன்.



வண்டு கடித்த இடத்தை பார்த்தாள் வருத்தத்துடன் ஒரு முறை. பதற்றத்துடன் மார்பகத்தை கச்சையால் இறுக்கிக் கட்டி முதுகு பக்கம் முடிச்சிட்டாள். திணறியது இளமையின் வெகுமதிகள். அதற்குள் அருகில் வந்து சேர்ந்திருந்தது குதிரைகள்.

"யார் அங்கே..?" அதட்டலாய் கேள்வி கேட்ட குரலில் அதிர்ந்தாள்.

"மரியாதையாய் புதருக்கு பின்னால் ஒளிந்து கொண் டிருக்கிற இருவரும் வெளியில் வருகிறீர்களா, இல்லையா.." மிரட்டியது இன்னொரு குரல்.

"இருவரும் வெளியில் வருகிறீர்களா.. இல்லை நாங்கள் அங்கே வரட்டுமா.."

'என்ன இருவரா..' வியப்பையும் பயத்தையும் கண்களில் சுமந்தவளாய் புதர் மறைவிலிருந்து வெளியே வந்தாள் மொய் குழலாள் ஈரமாய், திமிர்ந்து பார்த்தாள்.

ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்த அரேபியக் குதிரைகளின் மீது அமர்ந்திருந்தனர் பாண்டிய வீரர்கள்.

அவர்கள் கண்களில் பொய் கோபம் - நிஜ காமம்.

"அவனை எங்கே..?"

"எவன்..?" தயக்கமாய் வந்தது எதிர் கேள்வி அந்த வாலிப நங்கையிடமிருந்து.

"என்ன, விளையாடுகிறாயா.. உன்னிடம் வம்பு செய்த சோழ காவல் நாயை எங்கே..?"

“யாரும் இங்கு வரவும் இல்லை. என்னிம் வம்பு செய்யவும் இல்லை” என்றாள் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.

“பின் எதற்காக அலறினாய்..?” கோபமாய் வந்தது கேள்வி.

“மீன் ஒன்று கடித்து விட்டது காலில்.. காலில்.” நேரம் காலம் தெரியாமல் வெட்கம் வந்து தொலைத்திருந்தது.

“நல்ல கதை. இந்த நேரத்தில் எதற்காக இங்கு வந்தாய்.. முதலில் அதைச் சொல்.”

‘களுக்’ கென்று சிரித்து விட்டாள் மொய் குழலாள்.

“ஏன் சிரித்தாய்..?” எரிச்சல் கலந்த கோபம் குரலில் மிதந்தது.

“சிரிக்கும்படியாக கேள்வி கேட்டால் சிரிப்பு வராமல் என்ன செய்யும்.. விடிகின்ற நேரம் ஆற்றங்கரைக்கு எதற்கு வருவார்கள் வீரரே.. குளிப்பதற்காகத்தான்” என்றவள் அதிகம் பேசி விட்டோமா..? என்றெண்ணி நாக்கை கடித்துக் கொண்டாள்.

‘உன்னை தொட்டுப் பார்க்காமல் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பது தவறுதான். கந்தா, புதருக்குப் பின்னால் யாராவது இருக்கிறார்களா என்று தேடிப்பார். நான் இந்த தங்கச் சிலையை தொட்டுப் பார்க்கிறேன்” குதிரையிலிருந்து குதித்து இறங்கினான் வீரன் ஒருவன் காம இளிப்புடன். தொடர்ந்து அடுத்த வீரனும் குதித்தான்.



அந்த இளம் பெண்ணின் மேனி நடுங்கியது பயத்தில். திரும்பி ஓடிவிடலாமா என்று எத்தனித்தாள். அதற்குள் அருகில் வந்திருந்தான் வீரன் ஒருவன். திகைத்துப் போய் அந்த இடத்திலேயே அசையாமல் நின்று விட்டாள். தலையிலிருந்து தண்ணீர் சொட்டு சொட்டாய் சொட்டிக் கொண்டிருந்தது கூந்தலில் இருந்து வழியும் நீர் தொடர்ந்து மார்பு கச்சையை நனைத்துக் கொண்டிருந்தது. நனைந்து போயிருந்த இடுப்பாடை உடம்போடு ஒட்டி... அவள் நின்ற கோலம் அந்த வீரனின் மனநிலையை வெகுவாய் பாதித்திருந்தது. அவளை நோக்கி கையை நீட்டினான். அவரசமாய் நகர்ந்தாள்.

அதே நேரம் –

ஆற்றங்கரையில் பெண்களின் சிரிப்பொலி கேட்டது.

○



# நான்கு

ஆற்றங்கரையில் பெண்களின் சிரிப்பொலி கேட்டதும் ஆறு கண்களும் மின்னலாய் திரும்பின. இருபது, இருபத்தைந்து இளம் பெண்கள் சிரிப்பும் கும்மாளமுமாய் ஆற்று மணல் சிதற ஓடி வருவது தெரிந்தது. அவரசமாய் அவளை விட்டு சற்று விலகி நின்றான் அந்த பாண்டிய வீரன். எதிர் பாராமல் நடந்த நிகழ்வால் திகைத்து போய் நின்றாள் இள மங்கை. ஓடி வந்த உற்சாகப் பெண்கள் திகைத்து போய் நின்ற அந்த ஆரணங்கை சூழ்ந்து கொண்டார்கள் பூவை சுற்றும் பூக்களாய்.

“ஏய்.. எங்களை விட்டுட்டு இருட்டோட இருட்டா ஓடி வந்திட்டா உன்னை விட்டுடுவோன்னு நினைச்சியா..”

“அடி கள்ளி, விடியிறதுக்குள்ள ஓடி வந்திட்டியா..”

“எங்களோட குளிச்சா உன் கற்புக்கு பங்கமா வந்திடும்..?”

“ஏய் நீலம்.. யாருக்கிட்டேயும் சொல்லாம விடிகாலை கருக்கல்ல எதுக்காக வந்தே.. விடிஞ்சிட்டா யாராவது வைகைத் தண்ணியை அள்ளிட்டு போயிடுவாங்கன்னு



பயந்திட்டியா.. இல்லை வைகைக் காற்றை தள்ளிட்டு போயிடுவாங்கன்னு நினைச்சிட்டியா.. சொல்லு தாயே கண்ணழகி.. நீல பொட்டழகி..” கேலியாய் வந்து விழுந்தன கேள்விக் கணைகள்.

“யம்மா, நீல மதி.. எந்த காதலனை பிடிக்க வைகைக் கரைக்கு இந்த ஓட்டம் ஓடி வந்தே..?” வெட்கத்தில் சிவந்து போயிருந்த காரிகையின் கன்னத்தில் இடித்தாள் பூவை ஒருத்தி. வாய் பொத்தாமல் சிரித்தது பூவையர் கூட்டம்.

“ஓ.. இவர்தான் நீலமதியின் காதலரா..?” சற்று தள்ளி நின்ற பாண்டிய வீரனை நோக்கி கை நீட்டிக் கேட்டாள் கூட்டத்திலிருந்த பாவை ஒருத்தி. அந்த இளம் பெண் நீல மதியோ - பதில் எதுவும் பேசத் தோன்றாதவளாய் நின்று கொண்டிருந்தாள் அதிர்ச்சியில். சுற்றி நின்ற அத்தனை குமரிப் பெண்களின் கண்களும் அந்த வீரனை நோக்கி திரும்பியிருந்தன. பாண்டிய வீரனோ அடுத்து என்ன செய்வது என்று தெரியமல் கைகளை பிசைந்து கொண் டிருந்தான். மல்லிகைப் புதரை சுற்றிக் கொண்டு அடுத்த வீரனும் அருகில் வந்திருந்தான். அந்த இடத்தில் கூட்டமாய் நின்று கொண்டிருந்த இளம் பெண்களில் அதிக உயரமாய் இருந்த பெண் ஒருத்தி. அந்தக் கூட்டத்தின் தலைவி போல முன்னால் வந்து அந்த இரண்டு பாண்டிய வீரர்களை நோக்கி அதட்டும் குரலில் பேசத் தொடங்கினாள்.

“நீங்கள் யார்..? பெண்கள் குளிக்கும் இடத்தில் உங்களுக்கு என்ன வேலை..?”

“நாங்கள் பாண்டிய வீரர்கள்” என்றான் இருவரில் ஒருவன் திமிராக.

"ஓ.. பாண்டிய வீரர்கள். ம்.. பாண்டிய வீரர்கள் என்றால் பெண்கள் குளிக்கும் பகுதியில் படுத்து உறங்கலாம் என்று இரவோடு இரவாய் எதாவது ஆணை பிறப்பித்து இருக் கிறார்களா.. இல்லை பெண்கள் ஆடை அவிழ்ப்பதை ஒளிந்திருந்து திருட்டுத்தனமாய் பார்க்கத்தான் லாயக்கு என்று முடிவு கட்டி விட்டீர்களா..?"

"ஏய்.. நாவை அடக்கிப் பேசு" சீறினான் பாண்டிய வீரன் ஒருவன்.

"இந்த கோபத்தை சோழ வீரர்கள் மீது காட்டினால் பாண்டிய மன்னர் அமர புயங்கர் காட்டில் வாழாமல் நாட்டில் வாழலாம்.. ம்.. என்ன செய்வது.." போலியாய் பெருமூச் சொன்றை வெளிப்படுத்தினாள் உயர பெண்.

"அறிவு கெட்டவளே.. நீ பாண்டிய மன்னரை அவமதிக்கிறாய் என்பதை மறந்து விடாதே."

"நாங்கள் மறக்கவில்லை. நீங்கள் தான் இது பெண்கள் குளிக்கும் இடம் என்பதை மறந்து விட்டீர்கள்."

"குளிக்கும் இடம் என்பது தெரிந்துதான் வந்தோம்"

"அத்தனை மோசமாய் போய் விட்டார்களா பாண்டிய வீரர்கள்.." உதடு சுளித்து சிரித்தாள் உயர மங்கை.

"ஏய்.." கோபத்தில பற்களை கடித்த அந்த பாண்டிய வீரன். இடுப்பில் இருந்து குறுவாளை கையில் எடுத்திருந் தான்.

அடுத்த இமை மூடு பொழுது -



கையிலிருந்த குறுவாளை ஓங்கவும் செய்தான். தடுத்து நிறுத்தினான் அருகில் நின்ற வீரன்.

"பெண்கள் குளிக்கும் இடத்துக்கு அனுமதி இல்லாமல் ஆண்கள் வந்தது முதல் தவறு. தனியாய் குளித்த இளம் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றது இரண்டாவது தவறு. இத்தனையும் செய்து விட்டு பெண்களிடம் கத்தியைக் காட்டி மிரட்டுகிறாரே இது தமிழன் வீரத்துக்கு வந்த மானக்கேடு"

"மாறா.. என் கையை விடு. இந்த திமிர் பிடித்தவளின் நாக்கை அறுத்து விடுகிறேன்" உறுமினான் குறுவாளை வைத்திருந்த வீரன்.

"நாக்கை நீட்டட்டுமா.." கேலியாய் கேட்டாள் உயர மங்கை.

இடையில் புகுந்தான் கறுப்பாய் இருந்த வீரன். அவன் வாயிலிருந்து வார்த்தைகள் விழுந்தன தயக்கம் இல்லாமல்.

"பெண்ணே.. கொஞ்சம் வாயை மூடு. நடந்தது தெரியாமல் எது எதோ பேசுகிறாய்.. பாண்டிய வீரன் ஒருவனை கொலை செய்த சோழ வணிகனை தேடி வந்தோம் நாங்கள் இருவரும். வந்த இடத்தில் இந்த பெண்ணின் அலறல் சத்தம் கேட்டது. ஏன் அலறினாய் என்று விசாரித்தோம். இந்த பெண் எந்த பதிலும் சரிவர சொல்லவில்லை. அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்.. நீயாவது கேட்டுச் சொல். அந்த பெண் எதற்காக அலறினாள்- என்று..?"

அத்தனை கண்களும் நீல மதியை நோக்கி திரும்பியிருந்தன.

"ஏய்.. எங்களிடமாவது சொல். எதற்காக அலறினாய்..?" என்று கேள்வி கேட்டாள் உயரமாய் இருந்த வனிதை.

"மீன் கடித்து விட்டது" என்றாள் நீலமதி மெல்லிய குரலில்.

"ம்.. மீன் கடித்து யாராவது அலறுவார்களா.. பாண்டிய வீரர்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல." கோபத்தில் கத்தினான் குறுவாள் வைத்திருந்த வீரன்.

"கடிக்க கூடாத இடத்தில் கடித்து விட்டதோ என்னவோ.." கூட்டத்திலிருந்து யாரோ ஒரு பெண் குரல் கொடுத்தாள்.

மொத்த பெண்கள் கூட்டமும் 'ஓ' வென்று சிரித்தது. சிரிப்பலை அடங்கும் வரை காத்திருந்து பேசினான் கறுப்பு வீரன். இந்த முறை குரலில் நிதானம் வந்து அமர்ந்திருந்தது.

"எங்களுக்கு சரியான பதில் தேவை. உண்மையான பதில் கிடைத்தால்தான் இந்த இடத்தை விட்டு நகருவோம். அந்த பெண் யார்..?"

"எங்களில் ஒருத்தி" என்றாள் கூட்டத்தில் நின்ற பெண் ஒருத்தி.

"நீங்கள் யார்..?" சீற்றமாய் வந்து விழுந்தன இரண்டு வார்த்தைகளும்.

"பதியிலார்" என்றாள் உயர மங்கை பாண்டிய வீரர்களை நெருங்கி வந்து. அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் தன் வலது கை புஜத்தைக் காட்டினாள்.



சிவப்பு கலந்த மஞ்சள் நிற கரத்தில் -

'பளிச்'சென்று பச்சை குத்தப் பட்டிருந்த *திரிசூல சின்னம் தெரிந்தது. உயர மங்கையின் அழகு கரத்தில் பச்சை குத்தப்பட்டிருந்த திரிசூல சின்னத்தைப் பார்த்ததும் வீரர்களின் உதடுகளில் அலட்சியம் வந்திருந்தது.

"ஓ.. நீங்கள் தேவரயடிர்களா..?" இகழ்ச்சியாய் வந்தது கேள்வி.

"ஆம். தேவரடியார்கள்தான். அதைச் சொல்ல நாங்கள் வெட்கப்படுவதில்லை" என்றாள் உயர மங்கை.

"வெட்கம் வருவதில்லை என்று சொல்" என்றான் கறுப்பு வீரன் கேலியாய்.

கோபமாய் நிமிர்ந்தாள் உயர மங்கை. இடையில் புகுந்தான் இன்னொரு வீரன்.

"பெண்ணே.. உன்னிடம் அதிகம் பேச எங்களுக்கு நேரம் இல்லை. பாண்டிய வீரனைக் கொன்ற சோழ வணிகனை தேடிப் போக வேண்டிய பணி இருக்கிறது. அந்தப் பெண் சொல்வதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சந்தேகம் வந்து விட்டது. இந்த இடத்தில் நாங்கள் நிற்பதும் அழகல்ல. அந்த பெண் பெயரைச் சொல்லுங்கள். போய் விடுகிறோம்"

"பெயரை எதற்காக சொல்ல வேண்டும்..?" கேள்வி வந்தது பெண்கள் கூட்டத்திலிருந்து.

---

* *சோழர் காலத்தில் தளிச் சேரிப் பெண்களின் கையில் சூல முத்திரை பொறிப்பது வழக்கம். தளிச் சேரிப் பெண்கள் = தேவரடியார்.*

"தவறு செய்தவன்தான் பெயரைச் சொல்ல பயப்படுவான்" கையிலிருந்த குறுவாள் ஆடியது அலட்சியமாய்.

"ஏனம்மா நேரத்தை வீணடிக்கிறாய்.. உன் பெயரைச் சொல் நாங்கள் இந்த இடத்திலிருந்து நகர்ந்து விடுகிறோம்" என்றான் இன்னொரு வீரன் குரலை தாழ்த்தி.

தண்ணீரில் நனைந்து போய் நின்று கொண்டிருந்த நீலமதியின் உடல் மட்டும் அல்ல, இதயமும் நடுங்கியது பயத்தில்.

ஒரு சில வினாடிகள் கண் மூடி யோசித்த உயர மங்கை. அருகில் ஈர ஆடையுடன் நடுங்கியபடி நின்று கொண்டிருந்த இள மங்கையை - ஒரு முறை பார்த்து விட்டு -

"பெயர் *நக்கன் சுந்தரி" என்றாள் உரத்த குரலில்.

"உன் பெயர் எனக்குத் தேவையில்லை. அவள் பெயரைச் சொல்" நீர் சொட்ட சொட்ட நின்று கொண்டிருந்த வனிதையை நோக்கி கை நீட்டிக் கேட்டான் கறுப்பு வீரன். அவனுக்கு பதில் சொல்லாமல் உதட்டோராம் அலட்சியப் புன்னகை ஒன்றை வழிய விட்டாள் உயர மங்கை.

"ம்.. சொல்" என்றான் சற்ற கோபமாய்.

"சொல்கிறேன். கேட்டுக் கொள். நக்கன் நீலமதி" பெயரைச் சொன்னதும் நீலமதியின் உடல் நடுங்கியது அச்சத்தால்.

---

* தளிச்சேரிப் பெண்கள் தங்கள் பெயர்கட்கு முன் நக்கன் என்னும் பெயரினை இணைத்துக் கொண்டனர். நக்கன் என்பது சிவனுக்குரிய பெயர்களுள் ஒன்று. பேராசிரியர் ம. இராச சேகர தங்கமணி - முதலாம் இராசேந்திர சோழன், பக்கம்-351



"ம்.. பெயரைச் சொல்லி விட்டேன். மரியாதையாய் பெண்கள் குளிக்கும் இடத்தை விட்டு நகருகிறாயா..? உயர மங்கையின் கேள்வியில் ஒரு வித மிரட்டல் இருந்தது.

"இரு.. இரு.. வருகிறேன். உன் தேவரடியார் கூட்டத்தையே மதுரையை விட்டு துரத்துகிறேன்" உறுமினான் குறுவாள் வைத்திருந்த பாண்டிய வீரன்.

"எங்களை துரத்துவது இருக்கட்டும். முதலில் சோழர்களை மதுரையிலிருந்து துரத்த முடியுமா என்று பார்." என்றாள் உயர மங்கை விரல் ஆட்டி. கைதட்டி சிரித்தது இளம் பெண்கள் கூட்டம்.

"தலைவரிடம் சொல்லி உன் நாவை அறுக்கிறேன்"

"உங்கள் தலைவனையும் அழைத்து வா எங்கள் வீதிக்கு" என்றாள் நக்கன் சுந்தரி நக்கலாய்.

கோபத்தில் முகம் சிவந்து நின்ற குறுவாள் வீரனை இழுத்துக் கொண்டு நடந்தான் கறுப்பாய் இருந்த வீரன். குதிரைகள் பின் தொடர்ந்தன. அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாதவளாய் ஓடிப்போய் ஆற்றில் குதித்தாள் உயரமாய் இருந்த நக்கன் சுந்தரி. தொடர்ந்து குதித்தனர் பெண்கள். ஆற்றில் மிதக்கும் தாமரை மொட்டுகள் குதித்தன.

அதனுடன் கைகோத்து இளமையின்.... வெட்கப்பட்ட சூரியன் தலை தூக்காமல் கிடந்தான் மேகத்துக்குள்.

நனைந்த ஆடையுடன் நின்று கொண்டிருந்த நீலமதியின் பூவுடல் நடுங்கியது குளிரால் அல்ல, பயத்தால்.



# ஐந்து

மதுரைக்கு தென் மேற்கே ஐந்துகல் தொலைவிலிருந்த திருப்பரங்குன்றத்தை மழை மேகங்கள் சூழ்ந்திருந்தன. வானம் இடி இடித்து மின்னல் வெட்டி 'மழையாய் கொட்டப் போகிறேன்' என பயமுறுத்தியது. எது குறித்தும் கவலைப்படாதவன் போல பாறை ஒன்றில் மல்லாந்து படுத்திருந்தான் சோழ இளவல் அருண்மொழிவர்மன். கண்கள் மூடிக் கிடந்தன. காதுகளோ பருவக் காற்றில் மிதந்து வந்த பாடல் வரிகளை ரசித்துக் கொண்டிருந்தது.

* "தந்தன தானானே தன தன
தந்தன தானானே
தந்தன தானோனே தன தன
தந்தன தானோனே
வாய்க்கால் கரையோரம் வள்ளியவள்
வட்டி விளக்கையிலே
கட்டெறும்பு போலே முருகன்
கழுத்திலே உளறுறாராம்

* நாகப்பா. நாச்சியப்பன், திருப்பரங்குன்றம் கோயில் வேற்கோட்டம், முதல் பதிப்பு, பக்கம் 225, 226.



தெங்காக் கம்மாயிலே வள்ளியவள்
தீர்த்தங்கள் ஆடையிலே
மின்னிட்டான் பூச்சி போல முருகன்
முன்னேயும் நடக்குறாராம்.
சந்தன மேடையிலே வள்ளியவள்
சடு குடு ஆடையிலே
தாதிப் பொண்ணு போல முருகன்
கூடவும் ஆடுறாராம்..."

இனிமையான பெண் குரல். காதலில் நனைந்த பாடல் வரிகள். பாடிய பெண்ணுக்கு வயது இருபதை தாண்டாது என்றது பாடலை தூக்கி வந்த வடகிழக்கு பருவக் காற்று.

மலையிலிருந்து மதுரைக்கு மண் சாலை வழியாய் விறகு வெட்டிச் செல்லும் சின்னப் பெண் ஒருத்தி அந்த பாடலை பாடியிருக்க வேண்டும்.

அந்தப் பெண் விறகு சுமையுடன் எதிர் திசையில் நடந்து செல்ல செல்ல - பாடலும் காது தொடாத தூரத்துக்குச் சென்று கரைந்திருந்தது. வானம் மெலிதாக தூறத் தொடங்கியது. எழுந்து வானம் பார்த்தான். எந்நேரமும் மழையாய் கொட்டுவேன் என்று பயமுறுத்தியது.

எதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் -

இடுப்புக் கச்சையை இறுக்கிக் கட்டினான் நிதானமாய். கச்சையில் செருகியிருந்த குறுவாளை ஒருமுறை தடவிப் பார்த்துக் கொண்டான்.

அடுத்த இமை மூடு பொழுது -

பாறைக்கு பாறை தாவினான் சிறுத்தைப் புலியாய். இறுதியில் செங்குத்தான பாறை ஒன்றை அடைந்தான். பாறை மறைவில் ஒளிந்திருந்தது குகை ஒன்று. தயக்கமில்லாமல் குகை வாசலை தொட்டான். குகையின் இருண்ட உள் அடுக்கில் - இளம் பெண் ஒருத்தி காத்திருந்தாள் - கையில் விஷம் சுமந்த குறுவாளுடன்.

நீலமதியின் நீள்விழிகள் நனைந்து கிடந்தன கண்ணீரில்.

அவளை சுமந்திருந்த - மதுரை மாநகரத்தின் வடக்கு தளிச்சேரி தெற்கு சிறகு பதினாறாம் எண் தேவரடியார் வீடும் நனைந்து கிடந்தது. வானத்து நிலவின் மஞ்சள் ஒளியில்.

அந்த வீட்டின் மேன் மாடத்தில் மல்லாந்து படுத்துக் கிடந்த நீலமதியின் கண்ணீருக்கு காரணம் இருந்தது. காவிரிக்கரையில் இருந்தவளை வைகைக் கரைக்கு இழுத்து வந்திருக்கும் அரசியல்.

நீலமதி - தளிச் சேரிப் பெண் இல்லை.

சோழ மண்ணில் நடந்த அரசியல் சதுரங்கத்தில் வெட்டப்பட்ட பெருந்தரத்து அதிகாரியின் செல்வ மகள். செல்ல மகள். சோழ இளவரசன் ஆதிக்க கரிகாலன் இறந்த நாளில் தலைநகரில் நடத்தப்பட்ட அரசியல் நாடகம். நீலமதியின் தாய் இரவோடு இரவாக தன் மகளை இழுத்துக் கொண்டு காவிரிக் கரையிலிருந்து வைகைக் கரைக்கு வந்து சேர்ந்து விட்டாள்.

தாயும் மகளும் அடைக்கலம் தேடி - இறுதியில் வந்து சேர்ந்த இடம் தளிச் சேரி தேவராடியார் வீடு. அந்த வீட்டின் தலைவி - நக்கன் பூங்கா.



சோழ தேசத்து வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரியாமல் தன் வீட்டில் ஒளித்து வைத்திருக்கிறாள் இருவரையும்.

தஞ்சாவூரிலிருந்து துரத்தி வந்த சோழ வீரர்கள் இன்னும் இருவரையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மதுரையில் இருக்கும் சோழ தேசத்து சிறுதரத்து அதிகாரிகளின் கண்ணில் நீலமதி சிக்கினால் உடம்பில் சூல முத்திரை பொறித்து விடுவார்கள். உடம்பில் சூல முத்திரை பதிந்து விட்டால் தளிச் சேரி பெண்கள் கூட்டத்தில் ஒருத்தி என்று கணக்கில் பதிவு செய்து விடுவார்கள். அந்த நாள் முதல் சூல முத்திரை குத்தப்பட்ட பெண் சிவனுக்கு அடிமை. பகல் முழுவதும் சிவன் கோயிலில் சிவனுக்கு தொண்டு. இரவு முழுவதும் தளிச் சேரியில் பெருந்தரத்து...

இதுவரை யார் கண்ணுக்கும் சிக்காத நீலமதி இன்று இருளோடு இருளாய் வைகைக் கரைக்கு குளிக்கப் போனவள் மது குடித்த மந்திகளாய் திரியும் பாண்டிய வீரர்கள் கண்ணில் சிக்கி விட்டாள்.. இனி என்ன ஆபத்து எந்த திசையில் இருந்து வருமோ என்ற பயத்தில் அழுது அழுது நீலமதியின் கண்கள் வீங்கிப் போயிருந்தன. தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த சங்கிலி தூங்கா விளக்கு பயத்துடன் விழித்துக் கிடந்தது கண்கள் இமைத்து காற்றுக்கு தலை ஆட்டியபடி.

கண் மூடிக் கிடந்த நீலமதி -

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அந்த விழிப்புக்கு காரணமிருந்தது. வீதியில் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. மெள்ள ஒலியமாய் எழுந்தாள். கண்களின்

கண்ணீரை துடைத்தாள் அவசர அவசரமாய். சாரளத்தின் வழியே உள்ளே நுழைந்த வடகிழக்கு பருவக் காற்று அந்த ஆரணங்கின் மேலாடையை கலைக்க பெரும் முயற்சி செய்தது கள்ளத் தனமாய். காற்றுக்கு தடை விதித்து மேலாடையை சரி செய்தாள். குதிரைகளின் குளம்பொலி அருகில் நெருங்கியிருந்தது.

தரையில் கை ஊன்றி எழுந்தவள் -

அவசரமாய் சாளரத்தை அடைந்தாள். வீதியை பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சாளரத்தின் வழியே வீதியை எட்டிப் பார்த்தாள் தயக்கத்துடன்.

அங்கே -

கண்ட காட்சி இதய துடிப்பை வேகமாக்கியிருந்தது. இரண்டு அரேபியக் குதிரைகள் நின்று கொண்டிருந்தன.

அவற்றின் முதுகில் -

இரண்டு பாண்டிய வீரர்கள். அந்த இரண்டு பாண்டிய வீரர்களும் - காலையில் ஆற்றங்கரையில் நீலமதியிடம் வம்பு செய்தவர்கள். சந்தேகம் மனதுக்குள் விழுந்ததால் தளிச் சேரிக்கு தேடி வந்திருக்கிறார்கள். எந்த சேரி - எந்த சிறகு.. எந்த வீடு என்ற குழப்பம் நிச்சயம் அவர்களுக்கு இருக்கும். குழப்பம் நீங்கி வீடு கண்டு பிடித்து வந்து விட்டால்.. நீலமதியின் மேனி ஒரு முறை நடுங்கியது பயத்தால்.

தோளில் யாரோ தொட -

குறுக்கிட்டாள் நீலமதி. அவசரமாய் திரும்பியவள் - அதிர்ந்தாள்.



எதிரில் -

நக்கன் பூங்கா. உதடுகளில் காமம் வழிந்தது. கண்களில் சந்தேகம் மிதந்தது.

"சாளரத்தில் என்ன செய்கிறாய்..?"

"நிலவைப் பார்த்தேன்"

"நிலவா.. நீலவனா.."

"வானத்து நிலவு"

"காதலனோ என்று நினைத்தேன்"

"உணவுக்கே உங்களை நம்பி இருக்கிறோம்."

"தெரிந்தால் சரி.. உனக்கும் உன் அம்மாவுக்கும் பாதுகாப்பு கொடுத்து எனக்கே ஆபத்து வந்து விடுமோ என்று பயமாய் இருக்கிறது" - நீலமதியின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"இரண்டு வார்த்தை பேசுவதற்குள் நான்கு சொட்டு கண்ணீர் வந்து விடுகிறது என்ன பெண்ணோ நீ.."

"நான்.."

"பேச வேண்டாம் உள்ளே போ.." நீல மதி தயக்கத்துடன் சாளரத்தை விட்டு அகன்றாள். சாளரத்திலிருந்து எட்டிப் பார்த்தாள் நக்கன் பூங்கா.

அதே நேரம் -

குதிரையிலிருந்து அண்ணாந்து பார்த்தான் - பாண்டிய வீரர்களில் ஒருவன்.

"நக்கன் பூங்காவா..?" உரத்த குரலில் கேள்வி வந்தது கீழேயிருந்து.

"எப்படித் தெரிகிறது..?" கேள்வி வந்தது எதிராய். நக்கன் சுந்தரி குரலில் எரிச்சல் மிதந்தது.

"பெருசு பெருசாய் தெரிகிறது" என்றான் ஒரு வீரன் கண் சிமிட்டி.

"இன்னும் உங்களுக்கு கொழுப்பு குறையவில்லை"

"வைகைத் தண்ணியாச்சே.."

"உங்களுக்கு என்ன வேண்டும்..?" இந்த முறை குரல் ஜாலம் காட்டியது.

"பூங்காவிடம் இருக்கும் எதுவும் வேண்டாம். எங்களுக்கு தெரியாமல் ஏதாவது ஒளித்து வைத்திருந்தால்.."

"காட்டட்டுமா.."

"சொன்னால் போதும். பூங்காவை நம்புகிறோம்"

"பூங்கா அறிவுக்கு எட்டும்படி பேசுங்களேன்"

"ஒரு பெண்ணைத் தேடுகிறோம். அவள் தளிச் சேரி பெண் அல்லள். ஆற்றங்கரையில் சந்தித்தோம். அவளுடன் தளிச் சேரி பெண்கள் வந்திருந்தார்கள். அவள் பெயர்.."

"எதுவும் தேவையில்லை. என் வீட்டில் மட்டுமல்ல, இந்த வீதியில் கூட தளிச்சேரி பெண்கள் தவிர வேறு எவரு மில்லை. உறுதியாக எனக்குத் தெரியும். தெற்கு தளிச் சேரியில் தேடிப் பாருங்கள்." என்றாள் நக்கன் பூங்கா இறுதியான வார்த்தைகளில்.



"பூங்கா.."

"சிவன் கோயில் பெருந்தரத்து அதிகாரி என் இல்லம் வருகிற நேரம். போய் விடுவது நல்லது"

"தேவைப்பட்டால் வருகிறோம்"

"வர வேண்டாம்" என்றாள் சாளரத்திலிருந்து விலகி. உள்ளேயிருந்து கவனித்துக் கொண்டிருந்தாள் நக்கன் சுந்தரி.

○



# ஆறு

இரவில் விழித்துக் கிடக்கிற வீதி அது.

அன்று வானத்தில் மஞ்சள் நிலவும் விழித்துக் கிடந்தது சற்று மயக்கத்துடன். அந்த தளிச் சேரி வீதியின் மாடத்து விளக்குகளும் விழித்துக் கிடந்தது தூங்கா விளக்குகளாய். அவற்றுடன் சேர்ந்து வானத்து நட்சத்திரங்களும் விழித்துக் கிடந்தன தூங்க அனுமதி இல்லாததால்.

அன்று அந்த இரவில் - காவல் பணி வீரர்கள் வராத ஜாமத்தின் இடைப் பகுதியில் அரேபியக் குதிரைகளின் குளம்பொலி கேட்டதால் வீதியோர வீடுகளின் மேன் மாடத்து சாளரங்கள் திறந்து கொண்டன சத்தமில்லாமல். நீலமதியும் சாளரம் திறந்து பார்க்க - குறுக்கே வந்தாள் நக்கன் பூங்கா. அவளைக் கவனித்த பாண்டிய வீரர்கள் தாங்கள் ஆற்றங்கரையில் சந்தித்த பெண் ஒருத்தியை தேடி வந்ததாக கூறவும். அப்படி யாரும் இந்த வீதியில் இல்லை என்று பொய் சொன்னாள் நக்கன் பூங்கா. அவர்கள் காதுகள் நம்ப மறுக்க - பெருந்தரத்து அதிகாரிகள் வருகிற நேரம் இது என்று மிரட்டவும் செய்தாள்.



தூண் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தாள் நக்கன் சுந்தரி.

அதே நேரம் -

வீதியின் இன்னொரு கோடியில் குதிரைகளின் குளம்பொலி கோடையில் திடீரென்று வரும் மழையாய் பயமுறுத்திற்று. நான்கைந்து குதிரைகளாவது வீதிக்குள் நுழைந்திருக்க வேண்டும்.

"வந்து தொலைந்து விட்டார்கள்" என்றாள் நக்கன் பூங்கா சற்று பயத்துடன்.

அடுத்த இமை மூடு பொழுது -

யாரோ விரட்டியடித்தது போல் அரேபியக் குதிரைகள் ஓட ஆரம்பித்தன எதிர்த் திசையில் பாண்டிய வீரர்களைச் சுமந்து கொண்டு. தொடர்ந்து புழுதிச் சூறாவளி வீதிக்குள் நுழைந்தது. இமைகள் நடுங்க திரும்பிப் பார்த்தாள் நக்கன் பூங்கா. ஆறு குதிரைகள் வீதியில் பாய்ந்து ஓடி வந்தன அதி வேகமாய். பூங்கா திகைத்து போய் நின்ற நடுக்கமான அந்த விநாடிகளில் - சுந்தரி தூண் மறைவிலிருந்து வெளிப்பட்டு.. பயந்து நின்ற நீலமதியை இழுத்துக் கொண்டு கீழ்தளம் சென்றாள் அவசர அவசரமாய். அதற்குள் பூங்கா இல்லத்தை நெருங்கியிருந்தன குதிரைகள்.

"அம்மா தாயே.. திசும்பசூதனி" சோழ குல தெய்வத்தை வேண்டிக் கொண்டாள் பூங்கா.

வீதியோரத்து கம்பங்களில் விழித்திருந்த தீப்பந்தங்கள் பயத்துடன் நடுங்கின் ஒருமுறை. எங்கிருந்தோ நாய் ஒன்று

ஊளையிட்டது. வீதிக்குள் நுழைந்திருந்த சோழ காவல் வீரர்களின் கண்களில் பாண்டிய வீரர்களை சுமந்து கொண்டு ஓடும் குதிரைகள் தெரிந்து விட்டது.

வீதிக்குள் ஓடி வந்த ஆறு குதிரைகளில் -

இரண்டு குதிரைகள் நக்கன் பூங்கா வீட்டைத் தொட்டதும் நின்றுவிட நான்கு குதிரைகள் துரத்திக் கொண்டு ஓடின. தொடர்ந்து காதில் விழுந்த குதிரைகளின் குளம் பொலியில் - அத்தனை மாடங்களின் சாளரங்களும் திறந்து கொண்டன. நக்கன் பூங்கா தன் கனத்த மேனியை சிரமப்பட்டு மேன் மாடத்து படிகளில் தடதடத்து இறங்கி - நிலா முற்றம் தாண்டி ஓடி முன் கதவை திறந்திருந்தாள் அவசரமாய். கச்சையை மீறி துடித்தன இளமையின் வெகுமதிகள்.

"ஓடி வந்தால் இன்னும் அழகாய் இருக்கிறாய்" என்றான் குதிரையிலிருந்து குதித்த சிவன் கோயில் அதிகாரி. அவசரமாய் அவன் கரம் பிடித்து இழுத்தாள் பூங்கா.

"பொறு. கருமுத்து.. பாண்டிய வீரர்கள் பிடிபட்டாலும் என்னை தொந்தரவு செய்ய வேண்டாம். விடிந்ததும் சந்திப்போம்." அடுத்த வார்த்தை பேசுவதற்குள் சிவன் கோயில் அதிகாரியின் கரம் மீண்டும் பிடித்து வெட்டி இழுக்கப்பட்டது. வெட்கம் துறந்து பூங்காவின் மேனி மீது மோதி அதிர்ந்தார். கதவு அதே வேகத்தில் இழுத்து பூட்டப்பட்டது.

குதிரை மீது அமர்ந்திருந்த கரு முத்து தலையில் அடித்துக் கொண்டான். வாசலில் இருந்த வெளிச்சம்



தொலைந்து போயிருந்தது. குதிரையைத் திருப்பினான் நிதானமாய். மாடத்து சாளரங்கள் மீண்டும் அடைத்துக் கொண்டன தயக்கமாய். உள்ளே நுழைந்த சிவன் கோயில் பெருந்தரத்து அதிகாரியின் வலது கை பூங்காவின் இடுப்பை வளைத்துக் கொண்டது மலைப் பாம்பாய்.

நிலா முற்றம் கடந்து -

இருவரும் மேன் மாடத்து படிகளில் ஏறினார்கள் பேசிக் கொண்டே. நிலா முற்றத்தை தொட்டுக் கொண்டிருக்கும் அறையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தனர் சுந்தரியும் நீலமதியும்.

"பூங்கா.. பாண்டிய வீரர்கள் ஏன் வந்தார்கள்..?" கேள்வி வந்தது காமத்தை விலக்கி விட்டு.

"தேவரடியார் வீதிக்கு எதற்காக வருவார்கள்." இடக்காய் வந்தது பதில்.

"இல்லை. யாரையோ தேடுகிறார்களாம். பூங்கா கவனமாய் இரு. அரசாங்க காரியம். கழுத்துக்கு கத்தி வந்து விடும்" அதற்கு மேல் இருவரும் ஒரு வார்த்தை பேசவில்லை சத்தமாய் தூங்கா விளக்குக்கு தூங்கச் சொல்லி உத்தரவிட்டிருந்தார்கள் நிலவும் பயந்த இருட்டு அறைக்குள் ஓடி வந்திருந்தது.

மதுரை நகரத்தின் அல்லங்காடிகள் தங்கள் விளக்கு கண்களை இமைக்க மறந்தது போல விழித்துக் கிடந்தன. மஞ்சள் நிலவோ மேகத் துணுக்குகளை துரத்துவதிலேயே குறியாய் இருந்தது. நட்சத்திரங்கள் தங்கள் அழகை காட்ட ஆள் அழைக்கும் முயற்சியில் கண் இமைத்துக்

கொண்டிருந்தன. இரவு ஆரம்பித்த இருள் விநாடியில் இருந்து, தங்களை முகத்தை துணியால் மறைத்துக் கொண்டிருந்த இரண்டு பெண்கள் சமையலுக்கு வேண்டிய பொருள்களை அவசர அவசரமாய் வாங்கி கையில் வைத்திருந்த மூங்கில் கூடையில் நிரப்பிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இதயத்துடிப்பு வழக்கத்துக்கு விரோதமாய் அதிகரித்திருந்தது. விரல்கள் மெலிதாக நடுங்குவதை உணர்ந்திருந்தார்கள். அந்தப் பெண்கள் இருவரும் பயந்தது போலவே வீதியின் இரண்டு பக்கங்களில் இருந்தும் அவர்களை நோக்கி ஓடி வந்தது ஆபத்து. குதிரைகளின் குளம்பொலி காதில் மோதியது. அவசரமாய் திரும்பினாள் இருவரில் இளையவள். அவள் கண்கள் பயத்தால் அகலம் காட்டியது. நெற்றியில் அவசரமாய் பிறந்தன வியர்வை பூக்கள்.

அவள் பார்வை தொட்ட இடத்தில் -

மூன்று குதிரைகள் ஓடி வந்து நின்று கொண்டிருந்தன மூச்சிறைக்க. அவற்றின் முதுகில் அமர்ந்திருந்தவர்கள் முகத்தில் கொலை வெறி தெரிந்தது. கண்கள் மினுக்கின காமமாய். அந்த ஆறு கண்களின் பார்வை - அந்த இரண்டு பெண்கள் மீதும் அசையாமல் இருந்தது ஆடாமல் அசையாமல். ஆபத்து முன்னால் வந்து நிற்பதைக் கண்டு அதிராமல் - தன் அருகில் நின்றவளின் - கரத்தை பிடித்து இழுத்துக் கொண்டு எதிர் திசையில் நடந்தாள். ஓட்டமாய் நடந்த கால்களை இழுத்து நிறுத்தியது. கண்ணில் விழுந்த காட்சி.



எதிரில் -

நான்கு குதிரைகள் நடந்து வந்து கொண்டிருந்தன முரடர்களை சுமந்தபடி.

'என்ன செய்வது' என்று தெரியாமல் அந்த இடத்திலேயே திகைத்துப் போய் நின்று விட்டனர் இரண்டு ஆரணங்குகளும். பயந்து போய் எதிர் திசையில் நடந்து வந்திருந்த அந்த பெண்கள் அல்லங்காடிகளை விட்டு சற்று தூரமாய் வந்து விட்டதாலும், வீதியில் அவர்கள் நின்று கெண்டிருந்த பகுதியில் கம்பங்களில் செருகியிருந்த தீப்பந்தங்கள் பணியாளர்களின் கவனிப்பின்றி அணைந்து போயிருந்ததாலும் - அந்த இடத்தை இருட்டு பூரணமாய் ஆக்கிரமித்திருந்தது.

திகைத்துப் போய் நின்று கொண்டிருந்த இரண்டு பெண்களையும் இரு மருங்கிலுமிருந்து நெருக்கியிருந்தன ஏழு குதிரைகளும். ஏதோ அவசர முடிவெடுத்த இருவரில் இளையவள் அருகில் நின்றவளின் கரத்தை பிடித்து இழுத்துக் கொண்டு குதிரைகளுக்கிடையில் புகுந்து ஓடத் தலைப்பட்டாள். ஓட முயன்ற சேயிழைகளை இழுத்து நிறுத்தியது கண் முன் நீட்டப்பட்ட மினுக்கும் குறுவாள்.

கைகளில் குறுவாளையும், முகத்தில் விகாரச் சிரிப்பையும் ஏந்தியபடி குதிரையில் அமர்ந்திருந்தான் உயரமான முரடன் ஒருவன். அவன் வாயிலிருந்து வந்து விழுந்தன - கரடு முரடான வார்த்தைகள் கட்டளையாய்.

"தீப்பந்தம் ஒன்றை கொண்டு வாருங்கள்" நெருப்பு சுமந்த கட்டை ஒன்று வேகமாய் வந்து சேர்ந்திருந்தது.

தீப்பந்தத்தை வலது கையில் வாங்கிக் கொண்டான். இடது கையால் பயத்தால் நடுங்கியபடி நின்று கொண்டிருந்த பெண்களில் ஒருத்தியின் முக்காடை பிடித்து வேகமாய் இழுத்தான். இழுத்த இழுப்பில் முக்காடிட்டிருந்த துணி கிழிந்து, வாலிப நங்கையின் முகம் தெரிந்தது. மேகத்துக்குள் இருந்து வெளி வந்த நிலவாய்.

அந்த மஞ்சள் நிலவு முகத்தின் மீது -

தீப்பந்த மஞ்சள் வெளிச்சத்தை விழச் செய்தான் குதிரை முரடன். இளமங்கையின் கண்கள் மிரண்டன மானாய்.

"நீலமதி" என்றான் வியப்பு தடவிய குரலில்.

"நீலமதி" இம்முறை வியப்பு அழைப்பாய் மாறி யிருந்தது. அந்த பருவ மங்கையிடம் பதில் இல்லை.

"ம்.. நீலமதி.. கொடியாய் வளர்ந்து விட்டாய்.. இருக் கிறாய் முழு மதியாம். சடுதியில் இறந்து போவதற்கா இத்தனை அழகுகளை உனக்கு அளித்திருக்கிறான் இறைவன்..?" கேள்வியை வீசி விட்டு கட கடவென்று சிரித்தவன், இன்னும் முக்காட்டு துணியை அகற்றாமல் நின்று கொண்டிருந்த பெண்ணை நெருங்கி எகத்தாளமாய் பேசத் தொடங்கினான்.

"இன்னும் முக்காடு எதற்கு இன்பவல்லி.. முக்காட்டை எடுத்து வீதியில் போடு. நீ காட்டிக் கொடுக்க வந்தாய். காலன் உன் பின்னால் ஓடி வந்திருக்கிறான். தீக்கு தப்பிய நீ, தீ பாவியிடம் வந்து சிக்கிக் கொண்டாய். ம்.. பேசிக் கொண்டிருக்க நேரம் அதிகமில்லை. எந்த நிமிடமும் சோழ காவல் நாய்கள் வந்து விடக் கூடும். ம்.. வா போகலாம்"



என்றவன் முக்காடிட்டிருந்த பெண்ணின் கரம் பிடித்து இழுத்தான். அவள் முழு பலத்தை பிரயோகித்து திமிறினாள்.

"விடு என் கையை. நான் உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன். எங்களை வாழ விடு. ம்.. போய் விடுகிறோம்" வார்த்தைகளில் கெஞ்சினாள் - மன்றாடினாள்.

"உங்கள் இருவரையும் வழி அனுப்பி வைப்பதற் காகவா இத்தனை வருடமாய் தேடிக் கொண்டிருக்கிறோம். ஆதித்த கரிகாலனை அனுப்பி வைத்த இடத்திற்கு உன்னை அனுப்பி வைப்பதற்காகத்தான் கண் உறங்காமல் இன்று வரை காத்திருந்தேன்...ம்.. இந்த இருவரையும் அடுத்த சந்து வழியாய் இழுத்துச் செல்லுங்கள். மீன் மாளிகையின் நிலவறைக்கு. நம்மை தொடர்ந்து சந்துக்குள் சோழ காவல் நாய்கள் நுழைந்து விடாமல் தடுக்க இந்த இடத்தில் இரண்டு பேர் மட்டும் காவல் இருங்கள்" உயரமானவன் கட்டளைக்கு இரண்டு முரடர்கள் குதிரையிலிருந்து குதித்து இறங்கி னார்கள். ஒரு முரடன் அவசரமாய் இறங்கி, நீலமதியை நெருங்கி கரம் பிடித்து இழுத்தான் வேகமாய்.

அடுத்த இமை மூடு பொழுது -

"ஆ" என்று அலறினான் வலி தாங்காமல்.

○



# ஏழு

நீலமதியின் கரம் தொட்டவன், தொட்ட இமை மூடு பொழுதே ஆவென்று பெருங் குரலெடுத்து அலறியிருந் தான் வலி பொறுக்க முடியாமல். அந்த அலறலுக்கு காரணம் - அந்த முரடனின் - முன் கையில் சிறிய கத்தி ஒன்று குத்தி நின்றது தான். வெளியே பாய்ந்து வந்தது இள ரத்தம். சுண்டு விரல் சுண்டி இழுக்கவும் செய்தது. அந்த அலறல் அந்த இடத்தில் பதற்றத்தை உற்பத்தி செய்திருந்தது. அத்தனை கண்களும் கத்தி பாய்ந்து வந்த திசை நோக்கி திரும்பி யிருந்தது.

கண்கள் தொட்ட இடத்தில் -

அரேபிய கரும் புரவி ஒன்று கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. அதன் முதுகில் அமர்ந்திருந்தான் வாலிப வீரன் ஒருவன். இருட்டில் முகம் பார்க்க முடியவில்லை.

"யாரடா நீ" அதட்டலாய் கேள்வி வந்தது ஒரு முரடனிடமிருந்து.

"அடேய் பேடிகளா.. பெண்களிடமா வீரத்தை காட்டுகிறீர்கள்.." எதிர் கேள்வி கேட்டான் வாலிப வீரன்



கோபமான குரலில். அந்த குரல் சுற்றி நின்ற முரடர்களுக்கு பயத்தை ஏற்படுத்தியிருந்தது. இருந்தும் பயத்தை வெளிப் படுத்தாமல் நின்று கொண்டிருந்தார்கள் உத்தரவுக்காய்.

"சோழ காவல் நாய் போலிருக்கிறது கொன்று விடுங்கள் அவனை." கனத்த குரலில் உத்தரவு வந்தது முரடர்களில் உயரமாய் இருந்தவனிடமிருந்து ஒரே நேரத்தில் நான்கு வாட்கள் நீண்டன - குதிரை மேல் அமர்ந்திருந்த வாலிப வீரனின் மார்பை குறி வைத்து. அடுத்த கண் இமை மூடு பொழுதுக்குள் - வாலிப வீரனின் நீண்ட மெல்லிய வாள் தடுத்து நிறுத்தியது நான்கு வாட்களையும். அடுத்த வினாடி அலட்சியமாய் ஒதுக்கித் தள்ளவும் செய்தது.

அதே வேகத்தில் -

குதிரையிலிருந்து குதித்து இறங்கினான் வாலிப வீரன். அவசர அவசரமாய் சூழ்ந்து கொண்டன ஆறு வாட்கள். அந்த இளைஞனின் கை வாள் லாகவமாய் சுழன்றது. வேங்கையாய் பதுங்கி பாய்ந்தது. அதே வேகத்தில் பின் வாங்கியது. சுற்றி நின்று தாக்குதல் தொடுத்தவர்களின் கண்களுக்கு முன்னால் மின்னலாய் ஜாலம் காட்டியது. இடை இடையே வேகம் காட்டியது.

தாக்குதல் தொடுத்த ஆறு முரடர்களும் -

தங்கள் முழு பலத்தை பிரயோகித்து வாளை வீசினர்.

வாள் வீச்சில் கோபமும். முரட்டுத் தனமும் கலந்து கிடந்தது.

வாலிப வீரனின் மார்பைக் குறி வைத்தும். தலையை குறி வைத்தும் வீசப்பட்ட வாட்கள் மின்னல் வேகத்தில் தடுத்து நிறுத்தப்பட்டன பலமாய்.

அந்த வாலிப வீரனின் கைவாள் மந்திரவாளோ என்ற சந்தேகம் முளைத்திருந்தது முரடர்களுக்கு. நிமிடங்கள் கரைய... கரைய... நாம் ஒரு மாவீரனிடம் போரிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை கொஞ்சம் கொஞ்சமாய் உணர - ஆரம்பித்திருந்தார்கள் அந்த முரடர்கள்.

அந்த வாலிபனின் வாள் வீச்சில் வேகம் இருந்தது. கோபம் இல்லை.

பரதம் அறிந்த இளம் பெண்ணின் நாட்டியம் போல இருந்தது அவனுடைய அசைவுகள். அந்த வீரனின் இளமேனி அதிகமாய் ஆடவில்லை. அசையவில்லை. அதிரவில்லை. வலது கையின் மணிக்கட்டு பகுதி மட்டுமே வேகமாய் இடமும் வலமுமாய் சுழன்றது. எதிரியை மிரட்டுவது போல.

சற்றுத் தள்ளி குதிரையில் அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த உயர வீரன் முகம் கோபத்தில் சிவந்து கிடந்தது. பற்கள் கடிபட்டன மிதமிஞ்சிய எரிச்சலில்.

'முட்டாள்கள்... ஒரு சோழ வீரனை சமாளிக்க முடியவில்லை' இடுப்பிலிருந்த குறுவாள் கைக்கு வந்திருந்தது.

கொஞ்ச நேரத்துக்குள் சோர்ந்து போயிருந்தது முரடர்களின் உள்ளமும் உடலும். இதுவரை வாள் வீச்சை விளையாட்டாய் விளையாடிக் கொண்டிருந்த வாலிப வீரனின் வாள் சித்து வேலை காட்ட ஆரம்பித்திருந்து. எதிரிகளின் வாட்கள் இரண்டை அந்தரத்தில் பறக்க விட்டு, வீதியின் இருட்டோரங்களில் விழ வைத்திருந்தது. அடுத்த சில இமை மூடு பொழுதுகளில் முரடர்களின் மேனியில் இரத்தம் கொட்ட ஆரம்பித்து. கை வாளுடன் குறுக்கு சந்துகளில் புகுந்து ஓடி ஆரம்பித்தனர் உயிர் பயத்துடன்.



அந்த வாலிப வீரன் வாள் சுழற்றிய நளினத்திலும் முன் நெற்றியில் கேசம் புரண்டாடும் சுந்தர வதனத்திலும் மனதை பறிகொடுத்தவளாய், கண் இமைக்க மறந்தவளாய் நின்று கொண்டிருந்தாள் கயல் விழியாள் நீலமதி. கோபத்தில் பல் கடித்து, குதிரையில் அமர்ந்திருந்த உயர வீரன் கையிலிருந்த குறுவாளை குறி வைத்து வீசினான் நீலமதியை நோக்கி.

மன்னர் சுந்தரச் சோழ தேவரின் கண்களில் கவலை மிதந்தது. அவருடைய கவலைக்கு காரணம் இருந்தது. இன்று இரவு - நிலவை வானத்துக்குள் அனுமதித்த நேரத்தில் - கிழக்கு கடற்கரையில் இருந்து தலைநகர் தஞ்சைக்கு வந்து சேர்ந்திருந்த ஓலை. ஒற்றர் படை தலைவன் கம்பன் மணியன் மன்னருக்கு எழுதிய ஓலை. அந்த ஓலைதான் மன்னரை இரவு உணவு மறுக்கச் செய்திருந்தது. அவசரமாய் அந்தப்புரம் துறந்து - வசந்த மண்டபம் கடந்து - அரசியல் ஆலோசனை மாளிகை மறுத்து - பேரமைச்சர் அநிருத்த பிரமாதி ராயரின் மாளிகையில் அமர்ந்திருக்கிறார் மௌனமாய்.

மன்னர் அமர்ந்திருக்கிற இடம் - மாளிகையின் மேன் மாடம்.

அந்த மாடத்தில் மன்னர் மட்டுமே விழித்திருந்தார்.

மெய்க் காவல் படை வீரர்கள் மேன் மாடத்து படிகளிலும் - மாடத்தின் நிலா அரங்கங்களிலும் கண் இமைக்காமல் காத்திருந்தனர். மாளிகையைச் சுற்றி சோழ

காவல் வீரர்கள் அலட்சியமாய் சுற்றி திரிந்தனர் சற்றும் அலட்சியம் இல்லாமல்.

அந்த மேன் மாடத்தில் மன்னருடன் சேர்ந்து விளக்கு ஒன்றும் விழித்திருந்தது. விழித்திருந்த அந்த விளக்கும், யாரோ தண்டித்து விட்டது போல தலை கீழாய் தொங்கிக் கொண்டிருந்தது பயமில்லாமல்.

பேரமைச்சர் வீட்டுக்கு மன்னர் வந்து சேர்ந்து விட்டார். அமைச்சரைத்தான் இன்னும் காணவில்லை.

சோழ காவல் வீரர்களுக்கும் அமைச்சர் வந்து சேராததும், அமைச்சருக்காய் மன்னர் காத்திருப்பதும் ஒரு வசதி சங்கடத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

வீரர்களின் பார்வை அடிக்கடி வழியைத் தடவிக் கொண்டிருந்தது.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் -

மூன்று அரேபியக் குதிரைகள் ஓடி வந்தன மாளிகையை நோக்கி.

ஓட்டத்தில் ஒருவித அவசரம் தெரிந்தது.

குதிரைகள் மாளிகையை நெருங்கியதும் சட்டென்று நின்றன. நடுவில் நின்ற குதிரையிலிருந்தவர் மட்டும் இறங்கினார் பதட்டமாய்.

அடுத்த இமை மூடு பொழுது -

அருகிலிருந்தவர்களிடம் எதுவும் பேசாமல் விடுவிடு வென்று நடந்து மாளிகையைத் தொட்டார். அவர் -



பேரமைச்சர். மற்ற இரண்டு குதிரைகளும் எதிர்த் திசையில் ஓடி இருட்டுக்குள் தொலைந்து போயியிருந்தன ஏற்கனவே திட்டமிட்டது போல். அநிருத்த பிரமராயர் மாளிகைக்குள் நுழைந்ததும் - அவர் கேட்காமலேயே பதில் கிடைத்தது.

“மன்னர் மேன் மாடத்தில்...” காது தொடுவதற்குள் படிகளில் தடதடத்து ஏறிக் கொண்டிருந்தார். மெய்க் காவல் படை வீரர்கள் கடந்து செல்லும் அமைச்சரை விழி அசைக் காமல் பார்த்துக் கொண்டு நின்றனர் மண் பொம்மைகளாய்.

விளக்கின் மஞ்சள் ஒளியில் -

நிலவு தடவிய பூமியாய் காட்சி தந்தது மேன் மாடம். காலடி எடுத்த வைத்தவர் திகைத்தார்.

மஞ்சத்தில் மன்னரைக் காணவில்லை. விளக்கு மட்டும் தனித்திருந்தது தலை கீழாய்.

நீள்விழியாளின் கண்கள் படபடத்தன காதலாய்.

கண்டதும் காதல் வருமோ... கம்பனிடத்தில் தான் கேட்க வேண்டும். ம்..

நீல மதியின் கண்களுக்குள் காதல் வந்து விட்டது அவளுடைய அனுமதியை கேட்காமல். ம்... அனுமதி கேட்டால் காதல் வருமா...

அந்த வாலிப வீரனின் வாள் வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் தன்னுடன் வந்த வீரர்கள் ஓடி விட்டதாலும், நீல மதியின் பார்வை அந்த வீரன் மீது மொய்த்து கிடந்ததாலும் கோபத்தின் உச்சத்தை தொட்டிருந்தான் குதிரையில் அமர்ந்திருந்த உயர வீரன்.

எதோ நோக்கத்தோடு இடுப்பிலிருந்த குறுவாளை கரத்துக்கு கொண்டு வந்திருந்தவன் - எதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல - நீலமதியை குறி வைத்து குறுவாளை வீசினான்.

பறந்து வந்தது குறுவாள் -

அந்த பருவ மங்கையின் உயிர் குடிக்க.

சட்டென்று மின்னலாய் குறுக்கே பாய்ந்தான் வாலிப வீரன்.

இளையவளை இழுத்துக் கொண்டு மண்ணில் சரிந்தான்.

உயிர் குடிக்கும் ஆசையில் பறந்து வந்த குறுவாள் இருவரின் தலைக்கு மேல் பயணித்து இருட்டில் விழுந்து தொலைந்து போயிற்று.

உயர வீரன் அவரசமாய் குதிரையை திருப்பினான் சுண்டி இழுத்து. அவனை சுமந்து கொண்டு ஓட ஆரம்பித்தது குதிரை.

அந்த வாலிப வீரனோ இன்ப வேதனையில் சிக்கியிருந்தான். அவன் மார்பில் பூக்குவியலாய் விழுந்து கிடந்தாள் நீலமதி. வாலிப மேனியோடு வாலிப மேனி தொட்டு அழுத்திக் கிடந்தாலும் எழுந்திருக்க வேண்டு மென்று வாலிப வீரன் செய்த முயற்சியால் ஏற்பட்ட உரசல்களாலும். வாலிப நங்கையின் கன்னப் பரப்பில். அந்த ஆண் மகனின் மூச்சுக் காறறு பட்டதாலும் அந்த பருவ மங்கை செயல் இழந்து. செயல் மறந்தே கிடந்தாள்.



இதுவரை வாழ்க்கையில் அனுபவித்தறியாத ஆண் ஸ்பரிசத்தால் மயங்கிக் கிடந்தவளைக் கலைத்தது சீற்றமான பெண் குரல்.

"நீலமதி"

"ம்..." என்றாள் கனவுக்குள் இருந்து எழுந்தவள் போல்.

"ஏய்... நீலமதி" இம் முறை அதிர்ந்திருந்தாள்.

"ம்... எழுந்திரு" கோபமாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

அந்த பெண் குரலுக்கு சொந்தக்காரி -

நீலமதியோடு முக்காடு போட்டு வந்த பெண்.

வார்த்தைகளை உதிர்த்தவள் -

அதே வேகத்தில் கையை நீட்டவும் செய்தாள்.

நீட்டிய கரத்தைப் பிடித்து அவசரமாய் எழுந்தாள் நீலமதி.

வாலிப நங்கையின் கன்னங்கள் வெட்கத்தில் சிவந்து போயிற்று. இருந்தும் அந்த ஆரணங்கின் நீள் விழிகளின் ஓரம் அந்த வாலிப வீரன் படுகின்ற அவஸ்தையை எட்டிப் பார்த்தது தயக்கத்துடன்.

கீழே விழுந்து கிடந்த வீரன் துள்ளிக் குதித்து எழுந்தான்.

தன் ஆடையில் ஒட்டியிருந்த மணல் துகள்களை தட்டி சரிப்படுத்திக் கொண்டான் சற்று வெட்கத்துடன்.

அந்த வீரனிடம் எதோ சொல்ல வாய் திறந்தாள் நீலமதி. குறுக்கே வந்தாள் அருகிருந்த பெண்.

"வா. போகலாம்" கடுமையாய் இரண்டு வார்த்தைகளை உதிர்த்ததோடு நில்லாமல் நீலமதியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேக நடை நடந்தாள். முரடனின் குறுவாளில் இருந்து தன் உயிரை காப்பாற்றியவனுக்கு 'நன்றி' என்று ஒரு வார்த்தையைக் கூட சொல்ல இதயம் இல்லாமல் தன்னுடன் வந்த பெண்ணுடன் வேகமாய் சென்று கொண்டிருக்கும் நீலமதியை நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான் அந்த இளங்காளை. அவன் கண்களோ, அந்த வனிதையின் நீண்ட கருங் கூந்தல் அவள் நடையின் வேகத்திற்கேற்ப பின்புற எழில்களில் மோதி மிருதங்கம் வாசிக்கிற அழகை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது கலைத்தது ஆண் குரல் ஒன்று.

"இளவரசரின் மனக் குதிரை எதிரியை விட்டு விட்டு ஏந்திழையின் பின்னால் ஓட ஆரம்பித்து விட்டதா...?"

"கம்பன் மணியா... வனிதைக்கும் வஞ்சகர்களுக்கும் தொடர்பிருக்கிறது. வா என்பின்னால்"

என்று சொல்லி விட்டு அரேபிய கரும் புரவியின் முதுகில் தாவி ஏறினான் இளவரசன் அருண்மொழிவர்மன்.

மறைவிலிருந்து வெளியே வந்தான் கம்பன் மணியன்.

○



# எட்டு

பேரமைச்சர் அநிருத்த பிரம்மராயர் மேன் மாடத்தில் காலடி எடுத்து - வைத்ததும் ஒரு நிமிடம் திகைத்துப் போனார். அந்த திகைப்புக்கு காரணம் இருந்தது. தன் வீட்டுக்கே வந்து காத்திருந்து தன்னை வரவழைத்த மன்னரை காணவில்லை என்றால் திகைப்பாய் இருக்காதா என்ன... தலை கீழாய் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கின் தீபங்கள் தலையை குறுக்கே அசைத்து 'எனக்கு எதுவும் தெரியாது' என்றது. மன்னர் தொடாத மஞ்சம் கசங்காமல் இருந்தது. நடு நாயகமாய் கிடந்த மர ஆசனங்கள் வெறுமையாய் கண்ணுக்குத் தெரிந்தன. தயக்கத்துடன் அறைக்குள் நுழைந்தார் அநிருத்தர்.

"வாருங்கள் பேரமைச்சரே.."

- உற்சாகம் இழந்த குரல் தூணுக்கு பின்னாலிருந்து அழைத்தது. அவசரமாய் குரல் வந்த திசை நோக்கி கால்கள் விரைந்தன. தூண் மறைவிலிருந்து சாளரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார் சோழப் பேரரசர் சுந்தரச் சோழ தேவர். அவரது கண்கள் அடிவானத்து நட்சத்திரங்களை வருடிக் கொண்டிருந்தன.

"மன்னர் மன்னருக்கு வணக்கம்"

"வணக்கம் இருக்கட்டும்"

– திரும்பி பேரமைச்சரின் முகம் பார்த்தார் சோழ மன்னர்.

"வந்து கொண்டிருக்கும் செய்திகள் எதுவும் மகிழ்ச்சி தருவதாக இல்லை. அருண்மொழிவர்மன் ஒரு நாள் நாகையில் இருக்கிறான். இன்னொரு நாள் திருப்பரங் குன்றத்தில் இருக்கிறான். நேற்று இரவு மதுரையில் இருந்திருக்கிறான். இன்று எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லை. விளையாடுகிற நேரமா இது.."

"இளவரசர் ஒன்றும் விளையாட்டுப் பிள்ளை இல்லை. அவருடைய ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு அர்த்தம் இருக்கும்" என்றார் அநிருத்தர் அழுத்தம் திருத்தமாய்.

"இப்படித்தான் என் மகன் ஆதித்த கரிகாலன் என் பேச்சை கேட்காமல் சுற்றித் திரிந்த போதும் சொன்னீர்கள். இன்று என்ன ஆயிற்று. இன்று அவன் நம்மோடு இல்லை" பெரும் மூச்சொன்று மன்னரின் மார்பை தாலாட்டியது.

பதில் சொல்லத் தோன்றாது நின்று கொண்டிருந்தார் சோழ பேரமைச்சர்.

"சோழ தேசத்தில்... சோழ தேசத்து சேனாதிபதி பரமன் மழபாடியைக் கொல்ல முயற்சி நடந்திருக்கிறது."

"முயற்சி தோற்றுப் போயிருக்கலாம். முயற்சித்தவர்கள் உயிரோடுதானே இருக்கிறார்கள்"

"முயற்சிதான் தோற்றுப் போய்விட்டதே?"



"உயிரோடு இருந்தால் என்ன... நம் கண் பார்வையில் நமது சிறையில்தானே இருக்கிறார்கள்..?"

"சிறையில் இருப்பது ஒரே ஒருத்தி. கடல் கடந்து வந்திருக்கும் சிங்களத்துப் பெண். இதுவரை தன் பெயரைக் கூட சொல்லவில்லை" என்றார் சுந்தரச் சோழர் தூங்கா விளக்கை பார்த்துக் கொண்டே. அவர் நோக்கம் அறிந்தவர் போல பேசினார் பேரமைச்சர்.

"இரண்டு இரவு ஒரு பகல் தூங்கவிடாமல் சித்திரவதை செய்தால் உண்மை காலடியில் வந்து விழுந்து விடாதா என்ன..."

"இரண்டாயிரம் இரவு அவள் நம்மை உறங்கவிடாமல் செய்தால் போதாதா சோழ பேரமைச்சர் அநிருத்த பிரமாதிராயரே..." குரல் கவலை மிதந்தது.

"அந்த சின்னப் பெண் சோழ தேசத்தை உறங்க விட மாட்டாளா...?" வார்த்தைகளை ஆச்சர்யம் பிடித்து இழுக்க கேள்வி வந்தது.

"வயதில் சின்னப் பெண்தான். சாமர்த்தியத்தில் சின்னப் பெண்ணாய் தெரியவில்லை. ஒரு விநாடி கவனம் பிசகியிருந்தாலும் சேனாதிபதி பரமன் மழபாடி இன்று உயிருடன் இருக்க மாட்டார்."

"ஆம். உயிருடன் இருக்க மாட்டார்." என்றார் பேரமைச்சர் தன்னையும் அறியாமல்.

"அந்த சின்னப் பெண் மட்டும் கடல் கடந்து தமிழ் மண்ணுக்கு வரவில்லை. அவளுடன் ஆறு பேர் வந்திருக்கிறார்கள்" என்றார் மன்னர் பேச்சை சற்று நிறுத்தி.

"என்ன... ஆறு பேரா...?" ஆச்சர்யம் குரலில் குதித்தது.

"ஆறு பேர்தான். சிங்கள அரசின் தலைசிறந்த தளகர்த்தர்கள். எதோ ஒரு உள்நோக்கத்தோடுதான் வந்திருக்க வேண்டும்." சுந்தரச் சோழ தேவரின் குரலில் ஒருவித நடுக்கம் தெரிந்தது.

"உள் நோக்கமா...?"

"நோக்கம் பாண்டிய மன்னன் அமர புயங்கனுக்கு உதவுவது... உள் நோக்கம் வந்திருக்கும் சிங்களனுக்குத்தான் தெரியும். ஆறு பேர் தமிழ் மண்ணை தொடுவதற்கு முன்னால் ஆறு பேரின் செயலுக்கு தமிழ் மண்ணில் உதவி செய்ய ஆறு நூறு பேர் கடல் கடந்து வந்திருக்க வாய்ப்பு இருக்கிறது என்று ஒற்றர் படை அஞ்சுகிறது. நானும் அஞ்சுகிறேன். நானும் அஞ்சுகிறேன்" என்றார் சோழ மன்னர் இருமுறை.

"மன்னர் வாயிலிருந்து அஞ்சுகிறேன் வார்த்தையா...?"

"அஞ்சத்தான் செய்கிறேன். அரசியல் என் தலைமகன் ஆதித்த கரிகாலனை இரத்தம் சொட்ட சொட்ட கொன்று போட்டு விட்டது. அதே அரசியல் என் இளைய மகன் அருண்மொழிவர்மன் உயிரையும் குடித்து விடுமோ என்று அஞ்சுகிறேன்" என்றார் சோழச் சக்கரவர்த்தி சுந்தரச் சோழர். குரல் தடுமாறியது.

"நாங்கள் இருக்கிறோம் மன்னா" பேரமைச்சர் குரலில் பயம் வந்து அமர்ந்திருந்தது.

"அதிகாரிகள் நேற்றும் இருந்தீர்கள். இன்றும் இருக்கிறீர்கள்... நாளையும் இருப்பீர்கள்... மன்னர்களும் அப்படித்தான். என் மகன் ஆதித்த கரிகாலன் நேற்று இருந்தான் இன்று இல்லை. என் மகன் அருண்மொழிவர்மன் இன்று இருக்கிறான். நாளை இருக்க வேண்டுமே..." மன்னரின் கண்களை கண்ணீர் நிரப்பியிருந்தது. இமைகள் நனைந்திருந்தன கண்ணீராய். குரலும் நனைந்திருந்தது கண்ணீராய். அருகில் நெருங்கி சுந்தரச் சோழரின் வாயைப் பொத்தினார் அநிருத்தர்.



"அருண்மொழிவர்மன் ஆட்சி செய்வான் சோழ சாம்ராஜ்யத்தை ராஜராஜனாய். அவன் வம்சம் ஆளும் ராஜாதி ராஜனாய்" பேரமைச்சரின் வார்த்தைகள் கனவுலகில் சஞ்சரிக்கும் தேவதையின் வார்த்தைகளால் மன்னவன் காதில் விழுந்தத ரகசியம் போல. மன்னர் சற்று விலகி சாளரத்தை தொட்டார்.

வடகிழக்கு பருவக் காற்று கண்கள் தொட்டு கண்ணீர் துடைத்தது.

"மன்னர் மன்னா.."

"ம்.."

"என்னை அழைத்தது.."

"சிங்களத்து சின்னப் பெண்.."

"யாரென்று தெரிந்தாக வேண்டும். கடற்கரையை அனுப்பி வைக்கிறேன் கடற்கரைக்கு. ஈழம் சென்று உண்மை கொண்டு வரட்டும்."

"கடல் கடந்து வர தாமதமாகும்."

"கடற்கரையின் செய்தி காற்றில் வரும்."

"ஒரே செய்தி மூன்று புறாவில் வரட்டும்"

"ஒன்று மன்னருக்கு.. இரண்டு மன்னன் மகனுக்கு.. மூன்று கம்பன் மணியனுக்கு."

"காத்திருப்பேன்." ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு. வேறு எந்த வித பதிலையும் எதிர்பார்க்காமல் மேன் மாடத்து படிகளில் தடதடத்து நிதானமாய் கீழே இறங்கினார் சோழ மன்னர் சுந்தரச் சோழ தேவர். தட தடத்து பின்னால் ஓடினர் மெய் காவல் படை வீரர்கள்.

எதிர் திசையில் -

வேகமாய் ஓடி வந்தது கரும்புரவி ஒன்று.

பேரமைச்சர் மாளிகையை நெருங்குவதற்குள் - கால்களைப் பிடித்து இழுத்தது போல் சட்டென்று நின்றது புரவி.

சுந்தரச சோழர் கண்களில் -

அந்தக் குதிரை விழுந்திருந்தது.

சுற்றி நின்ற மெய்க் காவல் படை வீரர்களின் கண்கள் குத்தீட்டியாகியிருந்தன.

சற்று தள்ளி நின்ற -

சோழ காவல் படை வீரர்களின் கவனமும் ஒரு முகப்பட்டிருந்தது.

அவசரமாய் இருட்டுக்குள் நின்று கொண்ட கரும்புரவி யின் முதுகில் அமர்ந்திருந்தவன் - குதித்து இறங்கினான்.



காவல் வீரர்கள் கரங்களுக்கு தீப்பந்தம் வந்திருந்தது. குதிரையிலிருந்து குதித்து இறங்கியவன் - அந்த இடத்திலேயே தலை வணங்கி நின்றான்.

தீப்பந்தத்தின் மஞ்சள் வெளிச்சத்தில் - வணங்கி நின்றவன் சோழ ஒற்றர் படை வீரன் என்பது தெரிந்தது. அவன் இடுப்பில் ஓலை நறுக்கு இருந்தது. ஓலை நறுக்கில் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

கையசைத்து அழைத்தார் சோழ மன்னர்.

அழைத்த இமைமூடு பொழுதே விடு விடுவென்று நடந்து அருகில் வந்தவன், மீண்டும் ஒரு முறை தலை தாழ்த்தி வணங்கி விட்டு இடுப்பிலிருந்த ஓலையை எடுத்து மன்னர் கையில் கொடுத்தான்.

ஓலையை வாங்கியவர் கரங்கள் மெலிதாக நடுங்கியது.

தீப்பந்தம் ஒன்று அருகே வந்திருந்தது - மன்னரின் எண்ணத்தை புரிந்து கொண்டது போல.

ஓலை நறுக்கை பிரித்து படித்தார்.

அந்த ஓலையில் கிறுக்கலாய் ஓடியிருந்தது தமிழ்.

அந்த வார்த்தைகள் உதடுகளை நடுங்கச் செய்தது.

அந்த செய்தி பொய்யாய் இருக்கக் கூடாதா என்றது இதயம்.

மீண்டும் ஒரு முறை படித்தார் ஓலையை தீயின் வெளிச்சத்தில். இதயத்துக்குள் தீ பிடித்தது.

"ம்... நீ போகலாம்." தலை வணங்கி காணாமல் போனான் ஒற்றர் படை வீரன்.

முதுகுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த பேரமைச் சருக்கு ஓலையின் செய்தியை அறிந்து கொள்ளும் துடிப்பு இருந்தது.

மன்னரின் விரல்களுக்குள் சிக்கிய ஓலை முனகியது.

கால்கள் அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தன.

காந்திருந்தது குதிரை. காத்திருந்தது பல்லக்கு. காத்திருக்கவில்லை காலம்.

அதே நேரம் -

அருண்மொழிவர்மனை தேடி -

வீதி வீதியாய் ஓடிக் கொண்டிருந்தது ஓலை நறுக்கு.

மன்னர் சந்தித்த செய்திதான் அந்த ஓலை நறுக்கும் சுமந்திருந்தது. அதிர்ச்சி சுமந்த எழுத்துக்களை சுமந்த ஓலை நறுக்கை சுமந்த ஒற்றர் படை வீரனை சுமந்த அரேபியக் குதிரை கவலைகளைச் சுமந்து கொண்டு ஓடியது மதுரை வீதிகளில்.

அதே நேரம்

கவலையை கண்களில் சுமந்தபடி -

மல்லாந்து படுத்திருந்தாள் நீலமதி.

அவள் இருக்கும் இடத்தையும் ஆபத்து தேடி வந்திருந்தது.

○



## ஒன்பது

நிலவு சுமந்த வானம் அழுது கொண்டிருந்தது மழையாய்.

மழையை மண்ணில் விழ விடாமல் சிதறடித்து தோல்வியை தழுவிக் கொண்டிருந்தது கோபக் காற்று. வானத்து நிலவையும் நட்சத்திரங்களும் மேகச் சேற்றுக்குள் சிக்கிக் கிடந்ததால் வெளிச்சம் தொலைந்து போயிருந்தது. வீதியோர கம்பங்களில் செருகியிருந்த தீப்பந்தங்களும் மழையில் நனைந்து கண்களை இறுக மூடிக் கொண்டதால் மதுரை வீதிகள் இருட்டின் பிடியில் சிக்கியிருந்தன. காற்றும் மழையும் கைகோத்து களம் இறங்கியிருந்ததால் மதுரை மக்கள் தங்கள் இல்லங்களில் முடங்கிக் கிடந்தார்கள். சேவூர் போரில் பாண்டிய மன்னன் வீரபாண்டியன் மரணம் அடைந்த பின்னர் பாண்டிய தலைநகரம் மதுரை சோழர் களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது. இருந்தும் பாண்டிய வீரர்கள் இரவில் வந்து கண்ணில் தென்படுகிற வர்களிடம் வம்பு செய்வது வழக்கமாய் இருந்தது வந்தது. சில தினங்களுக்கு முன்னால் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் மர்மமாய் கொலை செய்யப்பட்ட பின்னர்

பாண்டிய வீரர்களின் அட்டகாசம் அதிகரித்திருந்தது. இருள் இரவு மழை இரவாகவும் மாறிப் போயிருந்ததால் வீதிகள் வெறிச் சோடிக் கிடந்தன.

கொட்டுகின்ற மழையைப் பற்றி சிறிதும் கவலைப் படாமல் அரேபிய கரும்புரவிகள் இரண்டு நடந்து கொண்டிருந்தன. அவற்றின் முதுகில் அமர்ந்திருந்தனர் இரண்டு வாலிப வீரர்கள். அவர்களிடம் மழை பெய்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் சிறிதளவும் இருப்பதாகத் தெரியவில்லை இரண்டு குதிரைகளும் ஒரே திசையில் பயணித்தாலும், குதிரையில் அமர்ந்திருந்த இரண்டு வாலிப இதயங்களும் இரு வேறு திசைகளில் பயணித்துக் கொண்டிருந்தன. இருட்டு இறுக்கமாய் இருந்ததால் இருவர் முகத்தையும் தெளிவாய் கவனிக்க முடியவில்லை. உணர்வுகளையும் படிக்க முடியவில்லை. திடீரென்று வானத்து மேகங்கள் மோதிக் கொண்டன இடி இடித்தது.

வானம் மின்னலாய் கோடு கிழித்தது.

மின்னல் வெளிச்சத்தில் -

அந்த வாலிப வீரர்களின் முகம் தெரிந்தது.

சோழ தேசத்தவர்கள் பார்த்திருந்தால் அதிர்ந்து போயிருப்பார்கள்.

ஒருவன் - மன்னன் மகன் - அருண்மொழிவர்மன். சோழ இளவரசன்.

இன்னொருவன் - சோழ ஒற்றர் படை தலைவன் கம்பன் மணியன்.



இருவரும் இருள் இரவில் -

மழை நீர் சொட்ட சொட்ட... ஆளுக்கொரு சிந்த னையில் விழுந்து கிடந்தார்கள்.

கம்பன் மணியன் சிந்தனைக் குதிரை தமிழ் மண் எங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

'வல்லவரையர் வந்தியத் தேவன் உண்மை சொல்ல மறுக்கிறார்... யார் அந்த சிங்களப் பெண்... அவளுடன் படகில் வந்த ஆறு பேரும் எங்கிருக்கிறார்கள்... என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்... அவர்கள் வந்த நோக்கம் என்ன... பரமன் மழபாடி... அநிருத்த பிரமாதிராயர்... வல்லவரையர்... என்று குறி வைக்கிறார்களா... அவர்கள் குறியில் கம்பன் மணியன் உண்டா...' எதிர் திசையில் ஓடிக் கொண்டிருந்தது அருண்மொழிவர்மன் எண்ணங்கள்.

'நீலமதி... எத்தனை அழகான பெயர்... பெயர் மட்டுமா அழகு... மேனி எங்கும் பூப்பூக்கும் அழகு... ஆனால் ஆபத்தான அழகு... நீலமதி... நிலவு எங்காவது நீலமாய் இருக்குமா... தமிழில் இப்படி ஒரு பெயரா... நீலமதி... தமிழுக்கு இளமை பூசுகிற பெயர்... நீல நிலவை தங்க அம்மியில் அரைத்து முகத்தில்... அதுவும் உதட்டில் பூசிக் கொள்ளலாமா... நீலமதி... கயலாய் துள்ளும் கண்களில் கத்தியை வைத்திருக்கிறாய்... குறும்பாய் பேசும் குறுநகையில் குறுவாளை ஒளித்து வைத்திருக்கிறாள்... நிலவுக்கு யார் பகை... நிலவின் மீது குறுவாள் வீசியவன் யார்... நீலமதி யார்... வனிதைக்கும் வஞ்சகர்களுக்கும் என்ன தொடர்பு...' சிந்தனையை அறுத்தது கம்பன் மணியன் குரல்.

"அந்த பெண்ணின் பெயர் என்ன...?" மழையின் சலசலப்பை மீறி ஓங்கி ஒலித்தது கேள்வி.

"நீலமதி" என்றான் அருண்மொழிவர்மன் தூவானம் சிதறியது போல.

"என்ன சொன்னாய்...?"

"நீலமதி" என்றான் காற்றுக்கு வலிக்காமல்.

"என்னது. நீலமதியா...? தமிழ் பெயர் போல் அல்லவா தெரிகிறது"

"நீலமதி ஒன்றும் கன்னடத்து பெண் அல்லள். தமிழ்ப் பெண்"

"என்னது தமிழ்ப் பெண்ணா... நாளுக்கு ஒன்று உளறுகிறீர்கள். அன்று சிங்களத்துப் பெண் என்கிறீர்கள். சிறையில் அடைத்து விட்டேன் என்றும் சொன்னீர்கள். அவளோடு ஆறு பேர் வந்திருப்பதாகவும்..."

"ஓ... நீ அவளைக் கேட்டாயா...?"

"நீங்கள் எவளை நினைத்தீர்கள் இளவரசே..."

"நேற்று இரவு..."

"குறுவாளில் இருந்து காப்பாற்றிய அந்த குமரியின் பெயரா அது"

"ஆம்." என்றான் சோழ இளவல் சற்று வெட்கத்துடன்.

"நீல மதி பெயர்தான் பொருத்தமாய் இல்லை. மஞ்சள் மதி என்று வைத்திருந்தால் சரியாய் இருக்கும். அவள் தந்தை குடிகாரனாயிருக்கும்."



"எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்...?"

"இரவில் குடித்து விட்டு நிலவை பார்த்திருப்பான். மஞ்சள் நிலவு கண்ணுக்கு நீலமாய் தெரிந்திருக்கும். பிறந்த குழந்தைக்கு நீல மதி என்று..."

"நீ கவிதை எழுத போயிருக்கலாம்."

"அதுவும் சரிதான். என் வேலையைத்தான் யார் யாரோ பார்க்கிறார்கள்..."

"கம்பன் மணியனுக்கு அந்த கோபம் வேறு இருக்கிறதா...?"

"பின்னே இருக்காதா... நீங்கள் சிறையில் அடைக்கச் சொல்லியிருக்கும் சிங்களப் பெண்ணின் பெயர் கூட என் காதுக்கு வரவில்லை."

"இதோ காது குளிரச் சொல்கிறேன். ஒற்றர் படைத் தலைவர் கோபம் நாட்டுக்கல்லவா ஆபத்து. ம்... அவள் பெயர் நதிமல்ரா."

"சிங்களப் பெண்ணுக்கு சிக்கலான பெயர் நதிமல்ரா."

"சிக்கலான பெயர் மட்டுமல்ல. தேசத்தில் சிக்கல்களை உருவாக்க வந்த பெண். பத்து ஆண்களுக்கு தலைமை தாங்கி கடல் கடந்து வந்த நதி. அழகான நரி. நம் வலையில் சிக்கியிருக்கிறது."

"யார் அந்த பத்து பேர்...?" ஆவலில் சத்தம் அதிகரித்திருந்தது.

"இரவு நேரம்" அருண்மொழிவர்மன் குரல் எச்சரித்தது.

"யார் அந்த பத்து பேர்" குரல் கிசுகிசுத்தது.

"அவளோடு வந்த சிங்களர் ஆறு பேர்."

"மற்ற நான்கு பேர்."

"அடுத்த அமாவாசைக்கு சொல்கிறேன்."

"பொறுமை இல்லை இளவரசே."

"நீயெல்லாம் ஒரு தேசத்துக்கு ஒற்றர் படைத் தலைவன். உனக்கு நான் ரகசியங்களை சொல்லித்தர வேண்டியதிருக் கிறது."

"உங்களைப் பார்த்துக் கொள்ளவே எனக்கு நேரம் போதவில்லை. என் கண்ணுக்கு தப்பி ஒற்று வேலை நீங்கள் பார்க்கிறீர்கள். எனக்கு தெரியாமல் உங்களுக்கு ஒரு ஒற்றர் படை. உங்கள் தந்தைக்கு ஒரு ஒற்றர் படை. பேசாமல் கவிதை எழுதுவதுதான் நல்லது."

"கம்பன் மணியா..."

"ம்..."

"ஒரு முறை சிறையில் போய் நதிமல்ராவை பாரேன்."

"எதற்காக...?"

"கவிதை எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டாயே..."

"இளவரசர்களுக்கும் கவிதை எழுதுகிற ஆசை வருவதுண்டே..."

"வருகிறது வருகிறது கவிதை எழுத ஆசை வருகிறது."

"நதிமல்ரா வேண்டுமா...?"



"நதி வேண்டாம். நிலவு வேண்டும்."

"நிலவு மஞ்சளாய் இருக்கலாமா..."

"நீலமாய்..." இருவரையும் கலைத்துப் போட்டது - முதுகுக்கு பின்னால் கேட்ட குதிரையின் குளம்பொலி.

அருண்மொழிவர்மன் திரும்பிப் பார்த்தான்.

இருட்டோடு இருட்டாய்...

குதிரை ஒன்று ஓடி வருவது தெரிந்தது.

"யாரோ நம்மை பின் தொடர்கிறார்கள்."

"யாராயிருக்கும்...?"

"யாராய் இருந்தால் என்ன..." எஜமானனின் சமிக்ஞையை புரிந்து கொண்ட குதிரையை மின்னல் வேகத்தில் ஓட ஆரம்பித்தது. அதே வேகத்தில் பின் தொடர்ந்தது கம்பன் மணியனின் குதிரையும். வீதியில் தேங்கியிருந்த மழை நீர் குதிரைகளின் குளம்பு பட்டு நான்கு திசைக்கும் சிதறியது.

அடுத்த சில நிமிடங்களில் -

இரண்டு வீதிகளைக் கடந்து மூன்றாவது வீதிக்குள் நுழைந்திருந்தது.

எட்டாவது இல்லத்தை கடப்பதற்குள் குதித்து இறங்கி யிருந்தான் சோழ இளவல் அருண்மொழிவர்மன். குதித்த வேகத்தில் ஓடிப் போய் ஒன்பது எண் பொறித்த கதவில் நான்கு முறை சுட்டு விரலால் தட்டினான். அந்த பெருங்கதவு அவசர அவசரமாய் திறந்தும் கொண்டது. அதற்குள்

குதிரையிலிருந்து குதித்து ஓடி வந்து சேர்ந்திருந்தான் கம்பன் மணியன். இருவரும் மின்னல் வேகத்தில் வீட்டுக்குள் நுழைய - அந்த இரண்டு அரேபியக் குதிரைகளும் எதோ தெரிந்து கொண்டது போல வேக வேகமாய் வீட்டுக்குள் நுழைந்தன. காத்திருந்தது போல அடைத்துக் கொண்டது அந்த பெருங் கதவு.

அதே நேரம் -

அந்த வீதிக்குள் நுழைந்திருந்தது அந்த ஒற்றைப் புரவி.

அருண்மொழி வர்மன் எண்ணியது போல - அந்தப் புரவி அவர்களை துரத்திக் கொண்டு வரவில்லை.

அடுத்த கரும் புரவியைத்தான் -

நான்கைந்து புரவிகள் துரத்திக் கொண்டு வந்தன அதி வேகமாய். கரும் புரவி வீரன் இடுப்பை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டான். மழை இன்றும் தூறிக் கொண்டுதான் இருந்தது. துரத்திய புரவி ஒன்றின் மீது அமர்ந்திருந்த முரடனின் கையில் முளைத்திருந்தது விஷம் தடவிய குறுவாள்.

அடுத்த இமை மூடு பொழுது -

குறி வைத்து வீசப்பட்டது குறுவாள்.

''க்ஹாக்கக்'' அந்த கரும்புரவி கோரமாய் கனைத்தது.

துள்ளிக் குதித்து - துடித்து - தரையில் சரிந்தது.

அதன் கழுத்துக்கு சற்று கீழே ஆழமாய் பாய்ந்திருந்தது குறுவாள்.

குதிரையிலிருந்து தலை குப்புற விழுந்திருந்தான் - புரவியில் அமர்ந்திருந்த வீரன்.



அவன் இடுப்பில் செய்தி ஒன்று இருந்தது.

அந்த அதிர்ச்சி தரும் செய்தியை ஓலை நறுக்கு ஒன்று சுமந்திருந்தது. அந்த ஓலை நறுக்கு தொலை தூரத்திலிருந்து சோழ இளவரசன் - அருண்மொழிவர்மனை தேடி வந்திருக்கிறது.

விழுந்தவன் அடுத்த இமை மூடு பொழுதே சுதாரித்து எழுந்து ஓடி ஆரம்பித்தான் ஒன்பதாம் எண் இல்லம் நோக்கி.

மீண்டும் வானம் இடி இடித்தது. மின்னல் வெட்டியது.

மின்னல் வெளிச்சத்தில் -

மீண்டும் ஒரு குறுவாள் வீசப்பட்டது. இம் முறையும் குறிதப்பவில்லை.

''ஆ'' என்று அலறினான் ஓடிக் கொண்டிருந்த வீரன்.

நடு முதுகில் - ஆழமாய் பாய்ந்திருந்தது குறுவாள்.

வலி பொறுத்து ஓடி -

ஒன்பதாம் எண் பொறித்த கதவை ஓங்கி குத்தினான். கதவு அசைந்து கொடுக்கவில்லை. கொலைகாரர்களை சுமந்த புரவிகள் நெருங்கியிருந்தன. மீண்டும் கதவை குத்தினான் பதற்றமாய்.

முதுகிலிருந்து வழிந்த இரத்தம் மழை நீருடன் கலந்தது. இடுப்பிலிருந்த ஓலை நறுக்கை எடுத்து வாயில் திணித்தான் அவசரமாய். மீண்டும் கதவை தட்ட முயன்று - மண்ணில் சரிந்தான்.

○



# பத்து

மழை மேகத்துக்குள் சிக்கி மயங்கிக் கிடந்தது மஞ்சள் நிலவு. நடக்கப் போகும் விபரீதம் அறிந்து கண்களைக் மூடிக் கிடந்தன பயத்துடன். பருவக் காற்று கூட வீசச அச்சப்பட்டது போல எங்கோ ஒளிந்து கொண்டிருந்தது. மதுரை வீதியில் மழையில் நனைந்தபடி ஓடிய இரண்டு குதிரைகளின் முதுகில் அமர்ந்திருந்தனர் கம்பன் மணியனும் அருண்மொழி வர்மனும். இருவரையும் துரத்துவது போல ஓடி வந்தது ஒரு ஒற்றைப் புரவி.

மின்னல் வேகத்தில் குதிரையிலிருந்து குதித்து ஓடி வீதியோர வீடு ஒன்றின் கதவை தட்ட, கதவு அவசர கதியில் திறந்து கொள்ள - இருவரும் உள்ளே நுழைய - இரண்டு குதிரைகளும் பின்னால் ஓட கதவு பூட்டிக் கொண்டது. துரத்தி வந்ததாய் நினைத்த ஒற்றைப் புரவியை துரத்திக் கொண்டு வந்தன, நான்கைந்து புரவிகள். அந்த ஒற்றைப் புரவியை குறிவைத்து வீசப்பட்டது குறுவாள். குறி தப்பவில்லை. குதிரையிலிருந்து விழுந்த மனிதன் சோழ இளவல் புகுந்த வீட்டை குறி வைத்து ஓடினான். குறி வைத்து வீசப்பட்டது இம்முறையும் குறி தப்பவில்லை. முதுகில் பாய்ந்த கத்தியுடன் பாய்ந்து ஓடி கதவை தட்டினான். கதவு திறக்க மறுத்தது.



தூரத்திலிருந்து வீசப்பட்டிருந்தாலும், அந்த மனிதனின் முதுகில் ஆழப் பதிந்திருந்தது கத்தி. வலி உயிர் இழுத்தது. அந்த மனிதனோ உயிரை பிடித்துக் கொண்டு, உடலை இழுத்து நிறுத்தி கதவை தட்டினான் ஓங்கி ஓங்கி. அந்த பெருங்கதவோ அசைந்து கொடுக்க மறுத்தது.

அந்த மனிதன் - சோழ ஒற்றர் படையைச் சேர்ந்த வீரன். அவன் இடுப்பில் ஓலை நறுக்கு ஒன்று பத்திரப்படுத்தப் பட்டிருந்தது. அந்த நறுக்கில் அதிர்ச்சியான செய்தி ஒன்று காத்துக் கிடந்தது. யாரோ - அரசாங்கத்தின் உயர்ந்த இடத்தில் இருக்கும் சக்தி மிகுந்த மனிதர் சோழ இளவரசன் அருண்மொழி வர்மனிடம் சேர்ப்பிக்கச் சொல்லி ஓலை நறுக்கு ஒன்றை கொடுத்து அனுப்பியிருந்தார். அந்த வீரன் ஓலை நறுக்கை எந்த இமை மூடுபொழுது கையில் வாங்கினானோ, அந்த இமை மூடு பொழுதே துரத்த ஆரம்பித்து விட்டது மரணம். துரத்திய மரணம் மதுரை வீதி வரை துரத்தி வந்து இறுக்கமாய் பிடித்துக் கொண்டது. வீசப்பட்ட குறுவாள் முதுகில் ஆழமாய் பதிந்து கிடந்தாலும் - அந்த குறுவாள் விஷம் தடவிய குறுவாளாகத்தான் இருக்கும் என்பதை அறிந்திருந்ததாலும், பின்னால் துரத்தி வருகிற எதிரிகள் மிச்சமிருக்கிற உயிரை அடித்துப் போடுவார்கள் என்பதாலும், அவசர அவசரமாய் இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஓலை நறுக்கை கையில் எடுத்து வாயில் திணித்துக் கொண்டான்.

மீண்டும் ஒருமுறை கதவை ஓங்கி தட்ட முயன்று... மண்ணில் சரிந்தான் இரத்தமாய்.

அந்த வீரனின் முதுகிலிருந்து வழிந்த இரத்தம் - மழை நீருடன் கலந்து... அதற்குள் நெருங்கியிருந்தார்கள் குதிரை

வீரர்கள். வீரன் குறுவாள் குத்தி நிற்க, இரத்த் வெள்ளத்தில் கவிழ்ந்து கிடக்க - பூட்டிக் கிடந்த ஒன்பதாம் எண் பொறித்த பெருங்கதவு பெரும் அச்சத்தை அந்த இரவில் ஏற்படுத் தியது உற்றுப் பார்த்த வீரர்களுக்கு. அந்த புரவி வீரர்களின் தலைவன் போல் கம்பீரமாய் அமர்ந்திருந்தவன் தன் சுட்டு விரல் அசைத்தான் கவிழ்ந்து கிடந்தவனை நோக்கி.

"ம்... பாருங்கள்." என்று கட்டளை பிறப்பித்தன மழையில் நனைந்த உதடுகள்.

கட்டளைக்கு கட்டுப்பட்டது போல் வீரன் ஒருவன் குதித்து இறங்கினான். தேங்கிக் கிடந்த மழை நீர் சிதறியது நான்கு திசைக்கும். மழைநீர் கீழே கிடந்த வீரனின் முகத்தில் ஓங்கி அடித்தது - அவனோ அசைவற்றுக் கிடந்தான்.

குதிரையிலிருந்து குதித்த வீரன் இரத்தமாய் கிடந்த வனை நெருங்கி, தொட்டும், தட்டியும் பார்த்தான் இருமுறை. சங்கடத்துடன் நிமிர்ந்தான்.

"இறந்து விட்டான்" என்றான் ஏதோ செய்தி சொல்வது போல.

"ம்... பார்க்க வேண்டியதை பார்" என்றது குரல் சற்று கடுமையாக.

வீரன் மீண்டும் குனிந்து இறந்து கிடந்தவன் உடலை தடவினான் ஒரு விரல் இடைவெளி விடாமல், இருந்தும் ஏமாற்றமே மிஞ்சியது.

"எதுவும் இல்லை" என்றான் உதட்டை பிதுக்கி.

"ம். இவன் சோழ ஒற்றன். ஒன்றுமில்லாததற்கா இந்த ஓட்டம் ஓடி வந்தான் நாகப்பட்டினத்திலிருந்து. இருக்காது.



இருக்கவே இருக்காது" என்றான் கட்டளையிட்டவன் முணுமுணுப்பாய் வீதியில் கீழே நின்ற வீரன் கைகளில் இரத்த பிசுபிசுப்பு உணர்ந்து தேங்கிக் கிடந்த மழை நீரில் கைகளை கழுவினான் நிதானமாய். குதிரை வீரர்களின் தலைவன் கட்டளை ஒன்று பிறப்பித்தான் - முகத்தில் வழிந்த மழை நீரை துடைத்தபடி.

"ஓலை நறுக்கு நழுவி மண்ணில் விழுந்து விட்டதா என்று தேடி பாருங்கள். சோழ ஒற்றன் என்ன செய்தி கொண்டு வந்தான் என்று நமக்கு தெரிந்தாக வேண்டும். ம்... தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் ஆபத்து" ஆபத்து என்ற வார்த்தை வாயிலிருந்து உதிர்வதற்குள் குதிரைகளிலிருந்து குதித்து இறங்கியிருந்தனர் அந்த வீரர்கள்.

சோழ ஒற்றனின் இரத்தம் கலந்து சிவப்புச் சேறாய் மாறிப் போயிருந்த வீதியோரங்களை விரல்களால் துழாவி துழாவி தேடினர். மழை சற்று கோபமாய் பெய்யத் தொடங்கியிருந்தது.

"என்ன ஆயிற்று...?" சீற்றமாய் வந்தது கேள்வி.

"எதுவும் இல்லை" என்றான் கீழே நின்ற வீரன்.

"எதுவும் இல்லாமல் இருக்காது" என்றான் கோப முணு முணுப்பாய்.

"யாரோ உங்களுக்கு தவறான தகவல் தந்திருக் கிறார்கள்" என்றான் அதே வீரன்.

'யாரோ அல்ல. நதிமல்ரா. ஒரு நாளும் வராது தவறு. இடையில் தான் ஏதோ தவறு நடந்திருக்கிறது."

"என்னவாயிருக்கும்...?

"முட்டாள். அது தெரிந்தால் உன்னிடம் ஏன் கேட்கப் போகிறேன். மதுரையில் எந்த உண்மையும் நம் கண்ணுக்கு தப்ப முடியாது."

"தப்பியிருக்கிறது."

"என்ன சொல்கிறாய்...?" சீற்றமாய் வந்தது கேள்வி.

"கோபம் வேண்டாம்... இந்த வீதி...?"

"வெளி தேசத்திலிருந்து மதுரைக்கு வரும் வணிகர்கள் தங்கும் மாளிகைகள் அதிகம் இருக்கும் வீதி."

"இங்கு ஏன் வர வேண்டும்...? குதிரை வீரர்களின் தலைவன் மீண்டும் அந்த கேள்வியை உதடுகளில் தவழ விட்டான் பலத்த சிந்தனையுடன்.

"சோழ ஒற்றனுக்கு வணிகர் வீதியில் என்ன வேலை...?"

'அதுதானே... சோழ ஒற்றனுக்கு வணிகர் வீதியில் என்ன வேலை... யாரை சந்திக்க இந்த ஒட்டம் ஓடி வந்தான்... ம்...' அந்த கேள்வி இதயத்துக்குள் தீயை கொளுத்திப் போட்டிருந்தது.

கண் இமைகளில் சொட்டிய மழை நீரை சுட்டு விரலால் சுண்டி விட்டு குறுவாளை முதுகில் சுமந்தபடி கவிழ்ந்து கிடந்த சோழ ஒற்றர் படையைச் சேர்ந்த வீரனையும். அவன் கை வலிக்க வலிக்கத் தட்டியும் திறக்க மறுத்த பெருங் கதவையும் கண் இமைக்காமல் பார்த்தான். அந்தக் கதவில் பொறித்திருந்த வெள்ளை நிறத்து எண் எனக்குள் நிழல்



கறுப்பாய் உண்மை ஒன்று ஒளிந்திருக்கிறது என்று மிரட்டியது.

"உள்ளே போய் பார்த்து விடலாமா?" என்று கேட்டான் வீரன் ஒருவன்.

"மதுரை இன்று இருக்கும் நிலையில் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது போலாகி விடும்" என்றான் இன்னொரு வீரன்.

"யாராவது வருவதற்குள் போய் விடுவது நல்லது" குனிந்து தரையைத் தடவிக் கொண்டிருந்த வீரன்.

"யாருக்கு நல்லது முத்து வீரா... பெயரில் மட்டும் வீரத்தை வைத்துக் கொண்டிருந்தால் போதாது."

"இந்த வீரம் எனக்கு போதும் தலைவரே..." என்றவன் மீண்டும் ஒரு முறை இறந்து கிடந்த சோழ ஒற்றனின் ஆடைகளை பரிசோதித்து பார்த்தான் அவசரமாய்.

விஷம் தடவிய குறுவாளுக்கு உயிரை விட்டிருந்த அந்த ஒற்றனின் கடை வாயில் நீட்டிக் கொண்டிருந்தது ஓலை நறுக்கின் நுனி. அதை கவனிக்கத் தவறி விட்டான் அந்த வீரன்.

"முத்து வீரா... குதிரையில் ஏறு" இது முத்து வீரனுக்கு மட்டுமல்ல தங்களுக்கும் இட்ட கட்டளை என்ற மகிழ்ச்சியில் நான்கு வீரர்களும் ஓடிப் போய் தங்கள் குதிரைகளில் ஏறிக் கொண்டார்கள்.

"ம்..." ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு தன் குதிரையை ஓட விட்டான். அந்த குதிரை வீரர்களின் தலைவன்.

தொடர்ந்தன நான்கு குதிரைகளும்.

ஓட ஆரம்பித்த சில விநாடிகளில் - தன் குதிரையை இழுத்து நிறுத்தினான் அந்த தலைவன்.

"க்ஹாக்கக்" அதிர்ந்து போன அந்த புரவி கோபமாய் கனைத்தது.

பின்னால் தொடர்ந்து ஓடி வந்த குதிரைகளும் முன்னால் ஓடி நிலைமை அறிந்து - மின்னலாய் திரும்பி அருகில் வந்து நின்றன.

குதிரை வீரர்களின் தலைவன் பார்வை தொட்ட இடத்தில் - மல்லாந்து இறந்து கிடந்தது சோழ ஒற்றனின் குதிரை. கழுத்துக்கு சற்று கீழே குத்தி நின்று கொண்டிருந்தது குறுவாள்.

"விடக் கூடாததை விட்டுச் செல்ல இருந்தோம். நல்ல வேளை கண்ணில் பட்டு விட்டது."

"இறந்து போன குதிரை நமக்கு எதற்கு தலைவரே."

"உனக்கு குதிரைக்கறி தர வேண்டும் என்று ஆசை. முட்டாள். குறுவாளில் மீன் சின்னம் இருக்கிறது."

"விட்டுச் சென்றால் நாம் யார் என்று சோழ நாய்களுக்கு தெரிந்து விடும். அப்படித்தானே."

"ஆம் முட்டாளே" முத்து வீரன் குதிரையிலிருந்து குதித்து ஓடி இறந்த குதிரையில் குத்தி நின்ற குறுவாளை பிடுங்கி எடுத்தான்.

"ம்... அந்த குறுவாள்."



"அதுவும் இந்த முத்து வீரன் தானா..."

"என்ன...?"

"இதோ... இதோ." குதிரைகள் நகர்ந்து முன்னால் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்திருந்தது. கவிழ்ந்து கிடந்த ஒற்றனின் முதுகில் குத்தியிருந்த குறுவாளை பிடுங்கி எடுக்க வலது கரம் நீட்டினான் முத்து வீரன். அதிர்ச்சி முகம் தாக்கியது.

ஒற்றனின் தட்டலுக்கு திறக்காத கதவு சத்தமில்லாமல் திறந்து கொண்டது நிதானமாய் நின்று கொண்டிருந்தாள் அழகான இளம் பெண் ஒருத்தி.

O



# பதினொன்று

மழையில் நனைந்து கிடக்கும் மதுரை வீதியில் - தன் தலைவன் கட்டளைக்கு அடிபணிந்து - கவிழ்ந்து கிடந்த சோழ தேசத்து ஒற்றர் படை வீரனின் முதுகில் ஆழமாய் பதிந்து கிடந்த குறுவாளை பிடுங்கி எடுக்க குனிந்தான் முத்து வீரன்.

அடுத்த இமை மூடு பொழுது -

குனிந்தவன் அதிர்ந்தான்.

அதுவரை அசைந்து கொடுக்காமலிருந்த - கண்ணுக்கு முன் தெரிந்த பெருங்கதவு சற்றும் எதிர் பார்க்காத தருணத்தில் திறந்து கொண்டது. அந்தக் கதவு திறந்து கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியை விட பலமடங்கு அதிர்ச்சியை தந்திருந்தது. திறந்த கதவுக்கு பின்னால் கண்ட காட்சி.

மழையில் நனைந்தபடி நின்று கொண்டிருந்தாள் அழகு பாவை ஒருத்தி.

அந்த ஆரணங்கு வயது இருபதை தாண்டியிருக்கலாம். அழகோ இருபதை தொட மறுத்தது. ஒரு சில இமை மூடு பொழுதுகள் இமை மோதாமல் அந்த அழகியைப் பார்த்தால்



மழை மோகினியோ என்று சந்தேகம் வந்து விடும். முத்து வீரனோ மோகினிப் பிசாசைக் கண்டது போல் மிரண்டிருந்தான். இருந்தும் தலைவன் இட்ட கட்டளை நினைவுக்கு வந்ததால் வானம் பார்த்து நின்ற குறுவாளை நோக்கி தன் வலது கையை நீட்டினான்.

"தொடாதே" என்று எச்சரித்தது பெண் குரல்.

மழையில் நனைந்தது போல் குரலில் மென்மை மிதந்தது. முத்து வீரனோ லட்சியம் செய்ததாய் தெரியவில்லை.

"தொடாதே" மீண்டும் எச்சரித்தாள் அந்த பருவ மங்கை.

குரலில் கடுமை ஏறியிருந்தது.

குறுவாளை தொட்டிருந்தான் முத்து வீரன்.

"ஏய்..." அதட்டினாள் கோப முகம் காட்டி.

அலட்சியம் செய்த முத்து வீரன். ஒற்றன் முதுகில் குத்தி நின்ற குறுவாளை பிடுங்கி எடுத்தான். அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் கதவோடு கதவாய் நின்று கொண்டிருந்த அந்த பெண்ணை குறி வைத்து குறுவாளை ஓங்கவும் செய்தான். அந்த செயல்தான் அவனுக்கு எமனாய் வந்து சேர்ந்தது.

முத்து வீரன் ஒன்றும் குறுவாளை வீசி அந்த பெண்ணை கொன்று விட வேண்டும் என்ற நோக்கத்தில் குறுவாளை குறி வைத்து ஓங்கவில்லை.

அந்த இளம் பெண்ணை பயமுறுத்த வேண்டும் என்றுதான் குறுவாளை ஓங்கினான். அதுதாய் விபரீதமாய் முடிந்து விட்டது.

தன்னை நோக்கி முத்து வீரன் குறுவாள் ஓங்கிய அடுத்த இமை மூடு பொழுது தன் பெரு விரலால் கதவை தள்ளினான். கதவு சற்று அகலமாய் திறந்து கொண்டது. அதே விநாடி - அந்த பருவ மங்கையின் முதுகுக்கு பின்னாலிருந்து பறந்து வந்தது அம்பு ஒன்று காற்றைக் கிழித்து, காற்றில் அசைந்த அவள் துகிலை தொட்டும் தொடாமல் பயணித்தது. குறுவாளுடன் நின்ற முத்து வீரன் நெஞ்சில் தைத்தது.

"ஆ" என்று அலறினான் சத்தமாய்.

அடுத்த இமை மூடு பொழுது -

வீதியில் தேங்கியிருந்த மழை நீரை சிதறிக் கொண்டு மல்லாந்து விழுந்தான்.

எந்தவித துள்ளல் துடிப்புமின்றி இறந்து போயிருந் தான்.

கதவு இன்னும் சற்று அகலமாய் திறந்து கொண்டது.

மங்கலான நிலவின் மங்கலான மழை வெளிச்சத்தில் - உள்ளேயிருந்து பத்து பதினைந்து பேர் ஓடி வருவது தெரிந்தது. இத்தனையும் ஒரு சில நிமிடங்களில் நடந்து முடிந்திருந்தாலும். குதிரையில் அமர்ந்திருந்த தலைவனுக்கு ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாய் தெரிந்தது.

'நம் கண் முன்னால் நின்ற கொண்டிருக்கிற பெண் சாதாரண பெண் அல்லள். சகல கலையும் அறிந்த அரச குலத்து பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். தேவைப் பட்டால் கொலையும் செய்வாள் என்பது கண் முன்னே நிருபணம் ஆகி விட்டது. இனி ஒரு நிமிடம் தாமதித்தாலும் நம் உயிர் நமக்கு இல்லை.'



எந்த விநாடி குதிரையைத் திருப்பினான், எந்த விநாடி குதிரையை ஓட விட்டான், எந்த விநாடி சகவீரர்களை ஓடி வரும்படி கட்டளையிட்டான் என்று கண்டு பிடிக்க முடியாத வேகத்தில் காணாமல் போயிருந்தான். நான்கைந்து குதிரைகள் நின்று போனதற்கு அடையாளமாய் அந்த இடம் சேறும் சகதியாய் மாறிப் போயிருந்தது மட்டுமே சாட்சியாய்.

அந்த வாலிப நங்கையின் உதட்டோரம் புன்னகை ஒன்று நெளிந்தது. அதற்குள் சோழ வீரர்கள் அருகில் ஓடி வந்திருந்தனர். ஓடி வந்த வீரர்களின் கண்களில் அதிர்ச்சி வந்து ஒட்டிக் கொண்டது. வீதியில் இரண்டு பிணம் இரத்தமும் தண்ணீருமாய். ஒரு பிணம் கவிழ்ந்து கிடக்கிறது. இன்னொன்று மல்லாந்து கிடக்கிறது. மல்லாந்து கிடக்கிறவன் கையில் குறுவாள்... மார்பில் பாய்ந்த அம்பு பார்த்தவன் கண்களை அதிர்ச்சி அறையாமல் என்ன செய்யும்...?

"அம்மா..." அழைத்தான் ஆரணங்கை வீரன் ஒருவன்.

"ம்..." என்றாள் ஒற்றை வார்த்தையை உதிர்த்தும் உதிர்க்காமலும்.

"மழை..."

"ம்...பெய்கிறது."

"இரவு..."

"ஆம். மழை இரவு."

"நீங்கள்..."

"இளம் பெண். முட்டாள். அந்த இருவரையும் இங்கே இழுத்து வா" என்றாள் அந்த சேயிழை. குரலில் கட்டளை பிறந்தது.

"எந்த இருவர்... எங்கே இருக்கிறார்கள்..." கேள்வி வந்தது குழப்பத்துடன்.

"மேன் மாடத்தில்."

"மேன் மாடத்தில் தூதுப் புறாக்களும் உங்கள் தோழியும் தான்."

"அங்கே தான் இருக்கிறார்கள்."

"ஐயோ... உங்கள் தோழி..."

"பயம் வேண்டாம். அவளுக்கு வாள் சண்டையும் வாய் சண்டையும் தெரியும்" உதட்டோரம் கசிந்த புன்னகையை வீரர்கள் கவனிக்க முடியவில்லை. அந்தப் பிரதேசத்தில் இருட்டு வெளிச்சத்தை விழுங்கியிருந்ததால்.

"ம்... அந்த இருவரையும் இழுத்து வாருங்கள்" இம் முறை குரலில் கோபம் மிதந்தது.

"யார் அந்த இருவர்...?"

"அட முட்டாள்களா... மாளிகைக்குள் நுழைந்தவர் களையே உங்களுக்கு கண்டு பிடிக்க முடியவில்லை. தேசத்துக்குள் வந்து விட்டவர்களை என்ன செய்து விடப் போகிறீர்கள் உங்களை நம்பி மன்னர் சுந்தர சோழ தேவர்."

"யார் அந்த..."

"இருவர். கம்பன் மணியனும் அருண்மொழிவர்மனும். ம்... இழுத்து வாருங்கள்."

"என்னது... இழுத்து வருவதா...?" முன்னால் நின்ற வீரனின் குரல் நடுங்கியது குளிரால் அல்ல, பயத்தால்.



"தூக்கி வாருங்கள்."

"தூக்குவதா...?" சுற்றி நின்றவர்களின் இதயங்களை அறைந்தது அதே கேள்வி.

"ம்..."

அந்த காரிகையின் சீற்றம் பெண் சிங்கத்தை ஒத்திருந்தது. அடுத்த இமை மூடு பொழுதே காணாமல் போயிருந்தார்கள் சோழ காவல் படை வீரர்கள். அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் மேன் மாடத்து படிகளில் தடதடத்து ஏறியது வீரர்களின் காலணிகள் பயத்துடன்.

**அ**ருண்மொழிவர்மன் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான் கம்பன் மணியனிடம்.

அவனோ எந்தவித பதிலும் சொல்லாமல் மேன் மாடத்து படிகளில் ஏறிக் கொண்டிருந்தான்.

"இம்முறையாவது அலறல் சத்தம் காதில் விழுந்ததா...?"

"அரண்மனையில் இருக்க வேண்டியவர் ஆண்டி போல் நாடு சுற்றி வந்தால் இப்படித்தான் கேட்கும். முதலில் வீதியில் குதிரை கனைக்கிறது. யாரோ குதிரையை கொன்று விட்டார்கள் என்றீர்கள். அடுத்த விநாடியே இன்னொரு அலறல் சத்தம் கேட்கிறது. குதிரையில் வந்தவனை கொன்றிருக்கலாம் என்றீர்கள். மீண்டும் அலறல் சத்தம் கேட்கிறது என்கிறீர்கள். இம்முறை கொன்றவனை யாராவது கொன்றிருக்கலாமோ..."

"இருக்கலாம். இருக்கலாம்."

"இருந்து விட்டு போகட்டும். மதுரை இன்னும் சோழ தேசத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இரவில் மதுரைக்கு நிலவு வந்தாலும் வராவிட்டாலும் எமன் வந்து விடுகிறான். தினமும் மதுரை வீதிகளில் இரத்தம் கொட்டிக் கொண்டுதான் இருக்கிறது. நம் வேலையைப் பார்ப்போம்."

"எது நம் வேலை...?" இடுப்பிலிருந்து மேன் மாடத்து கதவின் திறவு கோலை எடுத்த இளவரசன் அதிர்ந்தான். மேன் மாடத்து கதவு திறந்து கிடந்தது.

யாரோ ஓடுகிற சத்தம் கேட்டது.

கம்பன் மணியன் கையில் வாள் முளைத்திருந்தது.

இருவரும் மேன் மாடத்துக்குள் நுழைந்தார்கள் அடிமேல் அடி வைத்து.

உள்ளே யாரும் இல்லை.

மஞ்சத்தில் யாரோ ஒரு பெண் அவிழ்த்து வீசிய மேலாடை கிடந்தது. இருவரும் ஒரு வார்த்தை பேசவில்லை.

கம்பன் மணியன் சுட்டு விரல் நீண்டது மேலாடையை நோக்கி.

'யாரோ ஒரு பெண்.'

இதயங்கள் கிசுகிசுத்தது வியப்பாய். திரைச் சீலை அசைந்தது பயத்துடன் மேன் மாடத்தை சுற்றி வந்த நான்கு கண்களும் நிலைத்து நின்றன.

கம்பன் மணியன் கையிலிருந்த வாள் -

இளவரசன் அருண்மொழிவர்மன் கரத்துக்கு மாறி யிருந்தது.



திரைச் சீலைக்குள் யாரோ ஒரு பெண் பதுங்கியிருப்பது தெளிவாய் தெரிந்தது. மழை சுமந்த காற்று கோபத்தில் திரைச் சீலையை அசைத்தது. திரைச் சீலை உள்வாங்கி, வெளி வாங்கி கண்ணாமூச்சி காட்டியதில் ஒளிந்திருப்பது அழகான பருவ மங்கை என்றது வடகிழக்கு பருவக் காற்று.

தரையைத் தொட்டும் தொடாமல் இருந்த திரைச் சீலையின் அடியில் கால்கள் தெரிந்தன. அந்த கால்கள் இளம் பெண்ணின் கால்கள்... விரல்கள்...

சோழ இளவலின் கையிலிருந்த வாள் விரல்கள் நோக்கி நீண்டது சீற்றமாய்.

அவசர அவசரமாய் ஒளிந்து கொண்டது விரல்கள்.

வாளின் நுனி முழங்கால் தொட்டது சந்தேகமாய்.

கொஞ்சமாய் குதித்து நகர்ந்தன கால்கள்.

வாழையாம் நின்ற கால் தொடைகளை தொட்டும் தொடாமலும் வாளின் நுனி தடுமாறியது. அருண்மொழி வர்மனின் இதயத்துக்கும் அந்த தடுமாற்றம் இருந்தது. அங்கும் இங்கும் நகர்ந்து ஆட்டம் காட்டியது திரைச் சீலை. வாளின் நுனி சற்றே மேலே நகர எத்தனிக்க -

"ம்..." என்று அதட்டினான் கம்பன் மணியன் அபாயம் உணர்ந்து.

அந்த அதட்டலுக்கு பயந்தோ என்னவோ -

வாளின் நுனி சற்றே குதித்து தொப்புள் பிரதேசத்தில் வந்து நின்றது. அருண்மொழிவர்மனின் கரம் அதற்கு மேல் அசைய மறுத்தது - தாகமாய்.

“ம்...” என்றான் ஒற்றர் படை தலைவன் சற்று எரிச்சலுடன்.

வாளின் நுனி சரேலென்று மேல் நோக்கி நகர்ந்து மோதி நின்றது மோகமாய் வாளை அதற்கு மேல் நகர விடாமல் தடுத்து நிறுத்தியிருந்தது இளமையின் மொட்டுக்கள். சங்கடத்தில் நெளிந்தாள் திரைச் சீலை பெண்.

“அருண்மொழி” வாள் தடக்கென்று இடம்மாறி கன்னம் தொட்டிருந்தது காதலுடன். திரைச் சீலைக்குள் ஒளிந்திருந்த பெண்ணும் காதல் வயப்பட்டிருக்க வேண்டும்.

வாளின் நுனி நகர நகர...

“சோழ இளவரசன் செய்கிற காரியமா இது...?” வாளுக்கு கோபம் வந்து மின்னலாய் வீசியது.

திரைச் சீலை அறுந்து அந்த பெண்ணோடு கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் திரைச் சீலை விலக அந்த பெண் நெளிந்தாள். மல்லாந்து கிடந்தவளுக்கு வயது பதினாறு இருக்கலாம். கண்கள் இரண்டும் இளமைகள் இரண்டும் முறைத்தன அருண்மொழிவர்மனை.

“கயல் வழி” என்றான் கம்பன் மணியன் உதடுகள் நடுங்க.

சோழ இளவல் கரத்திலிருந்து வாள் நழுவி தரையில் விழுந்தது.

○



# பன்னிரெண்டு

திரைச்சீலை வாள் வீச்சில் அறுந்து விழுந்ததும், விழுந்த வேகத்தில் திரைச் சீலை விலகி அழகு பெண் ஒருத்தி வெளிப்பட்டாள். அந்த பெண்ணை பார்த்த மாத்திரத்தில் உதடுகள் நடுங்க ‘கயல்விழி’ என்றான். அருகில் நின்று கொண்டிருந்த சோழ இளவரசன் கையிலிருந்த வாளோ நழுவி தரையில் விழுந்திருந்தது. தரையில் மல்லாந்து கிடந்த கயல் விழி துள்ளினாள் மீனாய். அடுத்த விநாடி எழுந்து ஓடினாள் மானாய். இருவரும் அசையாமல் நின்றார்கள். ஓடிய மான் கம்பன் மணியன் மார்பில் தஞ்சம் புகுந்தது.

“அண்ணா...” என்று அழவும் செய்தது கண்ணீர் வராமல்.

“நீ எப்படியம்மா மதுரைக்கு வந்தாய்...?” கனிவாய் கேள்வி வந்தது கம்பன் மணியனிடமிருந்து.

“குந்தவை பிராட்டியார் அழைத்து வந்தார்.”

“என்னது... குந்தவை வந்திருக்கிறாளா...?” அருண் மொழிவர்மன் குரலில் ஆச்சர்யம் மிதந்தது.

"நீங்கள் ஒன்றும் என்னிடம் பேச வேண்டாம்" என்றாள் கயல்விழி குரலில் குயிலைக் குழைத்து.

"எங்கே குந்தவை..?"

"நீங்கள் என்னிடம் பேச வேண்டாம் என்று சொன்னேன்."

"அப்படியென்ன கோபம் உனக்கு..?"

"தமிழ் மண் இப்படித்தான் உங்களுக்கு பண்பாட்டை இப்படித்தான் கற்று தந்திருக்கிறதா... திரைச் சீலைக்குள் ஒளிந்திருக்கும் பெண்ணிடம் இப்படித்தான் வரம்பு மீறி நடப்பதா... வாளின் நுனியால்..." இடையில் புகுந்தான் கம்பன் மணியன்.

"திரைச் சீலைக்குள் ஒளிந்திருப்பது நீயென்று இளவரசனுக்கு எப்படித் தெரியும்..."

"நானென்று தெரிந்திருந்தால்...? படிகளில் சத்தம் கேட்க - சாளரம் நோக்கி நகர்ந்தான் கம்பன் மணியன்.

"நானென்று தெரிந்திருந்தால்...?" மீண்டும் கேள்வியை வீசினாள் கயல்விழி.

"நீயென்று தெரிந்திருந்தால் கட்டிப் பிடித்து..."

"கட்டிப் பிடித்து..."

"முத்தம் கொடுத்திருப்பேன்" என்றான் சோழ இளவல் உதடு சுழித்து.

"என்னது முத்தம் கொடுத்திருப்பாயா... கொடு பார்க்கலாம்" என்றாள் பொய் கோபத்துடன்.



"இளவரசரிடம் என்ன கேட்கிறாய்...?" சாளரத்தில் நின்ற கம்பன் மணியனிடமிருந்து கேள்வி வந்தது.

"அது... வந்து..." தடுமாறினாள் கயல்விழி.

"நான் சொல்கிறேன் மணியா..." அவரசமாய் சோழ இளவல் வாயைப் பொத்தினாள். ஆரணங்கின் விரலைக் கடித்தான் ஆண் மகன்.

"ஆ" என்று அலறினாள் கயல்விழி.

அலறல் சத்தத்தை மீறி - மேன் மாடத்து படிகளில் ஓடி வரும் காலணி சத்தம் காதில் அறைந்தது பலமாய்.

அருண்மொழிவர்மன் குனிந்து வாளை எடுத்திருந் தான் கையில்.

படிகள் அதிர ஓடி வந்து -

தலை வணங்கி நின்றார்கள் சோழ காவல் வீரர்கள்.

"ம்..."

"குந்தவை பிராட்டியார் தங்களை அழைத்து வரச் சொன்னார்கள்" என்றான் சோழ காவல் வீரர்களில் ஒருவன்.

"எங்கே இருக்கிறாள்...?"

"பின் வாசலில்."

"மழை பெய்கிறதே..."

"மழையில் நனைந்து கொண்டுதான் இருக்கிறார்கள்."

"அட முட்டாள்களே... அக்காவை அங்கே விட்டு விட்டு இங்கே ஏன் ஓடி வந்தீர்கள்..."

"உங்களை அழைத்து வர..."

"ஓடிப் போங்கள் முட்டாள்களே..." அவசரமாய் படிகளில் தட தடத்து இறங்கினான் சோழ இளவல். கயல் விழியும் கம்பன் மணியனும் பின்தொடர்ந்தனர் அதே வேகத்தில் சோழ காவல் படையும் பின்னால் ஓடியது.

கண்கள் கவலை சுமந்திருந்தது.

இரவு வானம் நிலவை சுமந்திருந்தது. நட்சத்திரங்கள் மழை மேகங்களை சுமந்திருந்தன. மேகங்கள் மழை நீரை சுமந்திருந்தன. நீலமதியின் நீள் விழிகள் கண்ணீரை சுமந்திருந்தன.

அந்த மேன் மாடம் நீலமதியை சுமந்திருந்தது.

'சொந்த தேசமாம் சோழ தேசத்து வீரர்களும் துரத்துகிறார்கள்... எதிரி தேசமாம் பாண்டிய நாட்டு வீரர்களும் துரத்துகிறார்கள்... துரோகிகளும் துரத்துகிறார்கள்... எவர் கையில் சிக்கினாலும் உயிர் போய் விடும்... ஒரு நிமிடம் யோசித்தால் மானம் போய் விடும்... சூல முத்திரை குத்தி சிவனுக்கு அடிமை என்று கிரீடம் சூட்டி விடுவார்கள்... எல்லா புற்றிலும் பாம்பு இருக்கிறது. எல்லா நதியிலும் முதலை இருக்கிறது...' புரண்டு படுத்தாள் பருவ மங்கை பருவ எழில்கள் நிலை மாற. இதயம் மட்டும தடம் மாறாமல் ஓடியது அதே சிந்தனையில்.

'ஓடுகிறோம்... ஓடிக் கொண்டேயிருக்கிறோம்... திசை தெரிந்தும் திசை தெரியாமல் ஓடுகிறோம். தேசம் விட்டு தேசம் ஓடுகிறோம். உண்மையை சுமந்து கொண்டே ஓடுகிறோம். நாட்டின் கழுத்தில் கத்தி வைத்த இந்த



உண்மையை யாரிடம் சொல்வது... இந்த உண்மைதானே என் தந்தையைக் கொன்றது... எங்களையும் கொன்று விட துரத்துகிறது ஊர் ஊராய். யாரிடம் உண்மை சொல்வது... யாரிடம் மனதில் இருக்கும் ரகசியத்தை பகிர்ந்து கொள்வது... யார் ராஜ விசுவாசி... யார் ராஜத்துரோகி என்று கண்டு பிடிக்க முடியவில்லை... ஒன்று இந்த உண்மையை மன்னனிடம் சொல்ல வேண்டும். இரண்டு மன்னன் மகனிடம் சொல்ல வேண்டும். மூன்றாவது மன்னன் மகளிடம் சொல்லலாம். இந்த மூன்று பேரையும் சந்திப்பது அத்தனை எளிதான காரியமா என்ன... அதிகாரிகள் விட்டு விட்டுவார்களா என்ன...' மன்னன் மகனை மதுரை வீதியில் சந்தித்தது அறியாமல் - தன் உயிரை காப்பாற்றியது சோழ இளவரசன் என்று தெரியாமல் - தான் பூக்குவியலாய் விழுந்து கிடந்த மார்புக்கு சொந்தக்காரன்தான் அருண்மொழிவர்மன் என்பது கண்டிடாமல் சிந்தித்துக் கொண்டிருந்தாள் நீலமதி.

மீண்டும் மல்லாந்து படுத்தாள் சோழ தேசத்து மங்கை. இம்முறை சிந்தனை தடம் மாறியிருந்தது.

தலைக்கு மேல் தொங்கிய தூங்கா விளக்கு ஒரு முறை தீபக்கரங்களை ஆட்டியது பருவக் காற்று மேனி தொட்டதால்.

'யார் அந்த ஆண் அழகன்... எங்கிருந்து வந்தான் மின்னலாய்... எதற்காக என்னைக் காப்பாற்றினான்... சோழ தேசத்து வீரனாகத்தான் இருக்க வேண்டும்... உயிரைக் காப்பாற்றியவனுக்கு 'நன்றி' என்று ஒரே ஒரு வார்த்தையில் நன்றி சொல்லாமல் வந்தது முறையா...' நீலமதி இருக்கும் இடம் தேடி ஆபத்து வந்திருந்தது.

மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது மயக்க மில்லாமல்.

மழையில் நனைந்தபடி நின்று கொண்டிருந்தாள் குந்தவை ஆடை சுமந்த மஞ்சள் நிலவாய். மழை இரவில் மயக்கும் மோகினிப் பிசாசாய் நின்று கொண்டிருந்தாள் இருட்டுக்கும் இரவுக்கும் பயப்படாத பெண்ணாய்.

ஓடி வந்து முன்னால் நின்றான் அருண்மொழிவர்மன்.

"அக்கா... எதற்காக மதுரைக்கு வந்தாய்..."

"நீ எதற்காக வந்தாய்...?"

"நான் வந்தது இருக்கட்டும். நீ..."

"என் தம்பி அருண்மொழி எனக்கு வேண்டும். ஆதித்த கரிகாலனை இழந்தது போல் உன்னையும் நான் இழக்க முடியாது."

"என்னை நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா...?"

"உன் முதுக்கு பின்னால் நடந்தது உனக்குத் தெரியவில்லை" விரல் நீட்டினாள் குந்தவை வீதியை நோக்கி.

பார்வையை திருப்பிய அருண்மொழிவர்மனும் கம்பன் மணியனும் கயல் விழியும் அதிர்ச்சியில் சிக்கிக் கொண்டனர்.

கண்கள தொட்ட இடத்தில் -

மல்லாந்து கிடந்தான் முத்து வீரன் அம்பை இதயத்தில் வாங்கி.

ஒரு கையில குறுவாள் இருந்தது குறி பாாத்து. கவிழ்ந்து கிடந்தான் ஒற்றர் படை வீரன்.



சரிந்து கிடந்தது குதிரை குறுவாள் சுமந்தபடி.

"நீ மாளிகைக்குள் நுழைந்த அடுத்த நிமிடம் உன் முதுக்கு பின்னால் சோழ தேசத்து ஒற்றர் படை வீரனையும், அவனை சுமந்து வந்த குதிரையும் பாண்டிய வீரர்கள் கொன்றிருக்கிறார்கள் துரத்தி வந்து. சத்தம் கேட்டு கதவு திறந்த என்னை குறுவாள் வீசி கொல்ல முயன்ற பாண்டிய வீரனை நம் வீரர்கள் அம்பெய்து கொன்று விட்டார்கள்..." நிதானமாய் பேசினாள் குந்தவை மழை நீரை துடைத்தபடி.

"அக்கா..."

"தம்பி... நமது ஒற்றன் கொண்டு வந்த செய்தி எதிரிகள் கையில் சிக்கவில்லை. அதைத்தான் அவர்கள் தேடி ஏமாந்திருக்க வேண்டும். உனக்கு வந்த செய்தியை நான் அறிந்தாக வேண்டும்."

"அக்கா..."

"ஒற்றா படை தலைவன் இறந்து போன ஒற்றர் படை வீரன் யார் என்று பார்த்து எனக்கு சொன்னால் நல்லது."

"இதோ பிராட்டியாரே..." கம்பன் மணியன் அவசரமாய் குனிந்து, கவிழ்ந்து இறந்து கிடந்த ஒற்றர் படை வீரனை மல்லாந்த நிலைக்கு திருப்பினான்.

மழை இருட்டில் முகம் தெளிவாய் தெரியவில்லை.

வானம் இடி இடித்து மின்னல் வெட்டியது. மின்னல் வெளிச்சத்தில் இறந்து போனவன் முகம் தெளிவாய் தெரிந்தது. என்றான் கம்பன் மணியன்.

"அக்கா..." என்றான் அருண்மொழிவர்மன் கோபமாய்.

"அருண்மொழி... மழையில் நனைந்து கொண்டு நின்றால் காய்ச்சல் வரும். மேன் மாடத்துக்கு போய் தலையைத் துவட்டு. ம்... தலையைத் துவட்ட ஒரு ஆள் அனுப்பி வைக்கட்டுமா... கயல் விழி நீ..."

"குந்தவை" கோபத்தில் பல் கடித்தான் சோழ இளவல்.

"அக்காவை பெயர் சொல்லி அழைக்கலாமா...?" உதட்டோரத்தில் சிரிப்பு தழுவியது குந்தவைக்கு.

"முத்தம் வேண்டும் முத்த அரசு" மன்னன் மகன் காதில் கிசு கிசுத்தாள் கயல்விழி. யாருக்கும் தெரியாமல் மேலாடையை பிடித்து இழுக்கவும் செய்தாள்.

மழை பெய்வதை நிறுத்தியிருந்தது எதோ நினைத்துக் கொண்டது போல.

வானம் மீண்டும் இடி இடித்தது. மின்னல் வெட்டியது.

மின்னல் வெளிச்சத்தில் -

மல்லாந்து கிடந்த சோழ ஒற்றனின் முகம் பயமுறுத்தியது.

"ஓலை கிடைத்து விட்டது" என்றாள் மன்னன் மகள்.

"எங்கே..?" என்றான் ஒற்றர் படை தலைவன்.

எங்கே... எங்கே... என்றன சுற்றி நின்ற அத்தனை கண்களும்.

"வெளிச்சம் வேண்டும்" என்றாள் குந்தவை இரண்டு வார்த்தைகளில்.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் -



தீப்பந்தம் வந்து நின்றது வெளிச்சமாய். இருட்டு கொஞ்ச தூரமாய் போய் நின்றது.

தீப்பந்த வெளிச்சத்தில் இறந்து கிடந்த குதிரையும், மல்லாந்து கிடந்த முத்து வீரனும் ரகசியம் சுமந்த ஒற்றனும் பயமுறுத்தினார்கள்.

குந்தவை விரல் நீட்டிய திசைக்கு நகர்ந்தது தீப்பந்தம்.

அந்த தீப்பந்த வெளிச்சத்தில் -

விஷம் தடவிய குறுவாளுக்கு உயிரை விட்டிருந்த சோழ ஒற்றனின் இறந்த முகம் கோரமாய் தெரிந்தது. கடை வாயில் நீட்டிக் கொண்டிருந்தது ஓலை நறுக்கின் நுனி.



# பதின்மூன்று

தீப்பந்த வெளிச்சத்தில் சோழ ஒற்றனின் இறந்த முகம் தெரிந்தது கோரமாய். கடை வாயில் நீட்டிக் கொண்டிருந்த ஓலை நறுக்கின் நுனி தெரிந்தது ஈரமாய். குந்தவை சுட்டு விரலை நீட்டியபடி நின்று கொண்டிருந்தாள் ஈரமாய். கண்களில் பயத்துடன் நின்று கொண்டிருந்தாள் கயல் விழி சற்று தூரமாய். சோழ காவல் வீரர்கள் வாட்களுடன் தீரமாய் அந்த இரவில் - அந்த நிமிடத்தின் அந்த விநாடியில் அத்தனை கண்களும் அந்த ஒரே புள்ளியில் தொட்டுக் கிடந்தன.

“உயிர் தொலைந்தும் ஓலையை தொலைக்கவில்லை நம் ஒற்றன். வலி இழுத்தும் வாய் திறக்கவில்லை. வாய்க்குள் இருக்கிறது ரகசியம்” என்றாள் குந்தவை ரகசியம் பேசும் குரலில்.

“கம்பன் மணியா... ஓலையை கையகப்படுத்து” கட்டளையிட்டது சோழ இளவரசன் அருண்மொழிவர்மன் குரல்.

கம்பன் மணியன் நிதானமாய் நடந்து - சோழ ஒற்றன் இறந்து கிடந்த இடத்தில் விரல்கள் ஊன்றி குத்து காலிட்டு



அமர்ந்து. இறந்த வீரனின் முகம் நிமிர்த்தி பார்த்தான். கடைசி நேர உயிர் இழுத்த வலி பற்களை ஒன்றுக் கொன்று இழுத்து பூட்டு போட்டிருந்தது. வெளியே நீட்டிக் கொண்டிருந்த ஓலை நறுக்கின் நுனியை பிடித்து இழுத்தால் ஓலை கிழிந்து விடும் அபாயம் இருந்தது. சிதைந்த ஓலையில் தமிழ் எழுத்துக்களை கண்டு அறிவது மிக கடினம். இறந்தவன் வாயை திறந்து ஓலை நறுக்கை எடுத்தால் தான் ஓலையின் செய்தி முழுமையாய் கிடைக்கும்.

கம்பன் ஆட்காட்டி விரலால் இறந்தவன் வாய் திறக்க பெரு முயற்சி செய்தான். தலை அங்கும் இங்கும் ஆடியது தர மறுப்பது போல.

“என்ன கம்பன் மணியா... ஓலையைத் தர மாட்டேன் என்று சொல்கிறானா...?” கேள்வி வந்தது சோழ இளவலிட மிருந்து.

சுற்றி நின்ற வீரர்களுக்கு அந்த கேள்வி சிரிப்பை வரவழைத்திருந்தது. சிரிப்பதற்கு உகந்த நேரம் அதுவல்ல என்பதால் வாய் பொத்தி நின்றார்கள். அந்த கேளவி கம்பன் மணியனுக்கு கோபத்தை உற்பத்தி செய்திருந்தது.

“பிணத்தோடு வெளையாடுகிற பிழைப்புதானே எனக்கு...?”

“கோபம் இருக்கட்டும் கம்பன் மணியா... யார் இவன்...?”

“இதென்ன கேள்வி... சோழ ஒற்றன்.”

“பெயர்...”

“..............”

“ஊர்...?”

"..............." பதில் தெரியாமல் காற்றில் தேடினான் ஒற்றர் படை தலைவன்.

"ஆயிரமாயிரம் ஒற்றர் படை வீரர்களின் பெயரையும்..."

"தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் கம்பன் மணியா." என்றாள் குந்தவை தெளிவான குரலில்.

தொடர்ந்து -

'நான் சொல்லட்டுமா அருண்மொழி...?" என்று தம்பியிடம் கேள்வியும் கேட்டாள்.

"ம்..." என்றான் சோழ இளவல் ஆச்சர்யத்துடன்.

"பெயர் சங்கர பட்டன். ஊர் பூவனூர். நீளமாய் சொல்வதாய் இருந்தால் பூவனூர் கௌசிக கோத்தரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து பவக்குறி சக்ரபாணி சங்கர பட்டன்."

"போதும் அக்கண் போதும். அவனே பிணத்துடன் யுத்தம் செய்து கொண்டிருக்கிறான். நீங்களுமா இந்த பெயரைச் சொல்லி பயமுறுத்த வேண்டும்...?" மீண்டும் அத்தனை கண்களும் இறந்து கிடந்த ஒற்றனை உற்றுப் பார்த்தன. ஒற்றர் படை தலைவன் போராடிக் கொண்டிருந் தான் பிணத்தின் வாய் திறக்க.

"கம்பன் மணியா.. கொஞ்சம் நகர்கிறாயா..?" குந்தவையின் கட்டளைக்கு அடிபணிந்து நகர்ந்தான் அவசரமாய்.

இரண்டே 'எட்டில்' நெருங்கி - குனிந்தவள், இறந்து கிடந்த சோழ ஒற்றனின் முகம் நிமிர்த்தி, நாடியை இருவிரலால் இறுக்கி பிடித்து உச்சந் தலையில் ஒரு தட்டு தட்டினாள். அடுத்து காதோரம் ஆட்காட்டி விரலால் ஒரு



குத்து குத்த இறந்தவன் வாய் அகலமாய் திறந்து கொண்டது என்னை எடுத்துக்கோ, என்னை எடுத்துக்கோ என்றது வாய் பெட்டிக்குள் ரகசியம் ஒளித்து வைத்திருந்த ஓலை நறுக்கு. விரல் சுண்டி எழுந்து கொண்டாள் குந்தவை.

"ம்..." என்றாள் அர்த்தம் பொதிந்து.

கட்டளை அறிந்து கம்பன் மணியன் ஒற்றன் வாயில் இருந்த ஓலை நறுக்கை கையில் எடுத்து மழை நீரில் கழுவி நிமிர்ந்தான்.

அடுத்த இமை மூடு பொழுது -

ஓலை நறுக்கு அவசரமாய் பறிக்கப்பட்டிருந்தது.

குந்தவை விரல்களில் ஆடியது ஓலை நறுக்கு.

தீப்பந்த வெளிச்சத்தில் தமிழ் எழுத்துக்களும் ஆடியது.

சுற்றி நின்ற வீரர்களின் கண்களில் ஓலை ரகசியம் அறியும் ஆர்வம் மிதந்தது. குந்தவையை அருண்மொழி வர்மன் நெருங்கியிருந்தான்.

"கம்பன் மணியன்..."

"சொல்லுங்கள் இளவரசி."

"ஒற்றனைக் கொன்ற குறுவாள் ஒன்றிருக்கிறது. ஒற்றன் குதிரையைக் கொன்ற குறுவாள் ஒன்றிருக்கிறது. இரண்டையும் எடுத்துக் கொண்டு மேன் மாடத்துக்கு வா. இறுதி முடிவெடுப்போம்" கம்பன் மணியன் கால்கள் நடக்க ஆரம்பித்திருந்தது இறந்து கிடந்த குதிரையை நோக்கி. வீரர்கள் தொடர்ந்தனர்.

“அருண்மொழி வா” ஓலை நறுக்குடன் மேன் மாடத்தை நோக்கி நடந்தாள் குந்தவை.

சோழ இளவல் கால்களை இழுத்து நிறுத்தியிருந்தது தயக்கம்.

“தயக்கம் வேண்டாம். கயல்விழி பின்னால் வருவாள்” குந்தவை குரலுக்கு பின்னால் நடந்தான் மீசையை விரலால் கலைத்தபடி. மன்னன் மகன் அங்கியை பிடித்தபடி நடந்தாள் கயல்விழி வெட்கத்துடன்.

நீலமதியை நோக்கி ஓடிவந்த ஆபத்து - நெருங் கியதும் நடந்து வந்து கொண்டிருந்தது கீழே நிலா முற்றத்தில். அதை அறியாத ஆரணங்கு மல்லாந்த நிலையில் தூங்கா விளக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் மட்டும்தான் அங்கேயிருந்தது. இதயமோ கனவுக்குள் புதைந்து கிடந்தது. கனவுக்குள் சிக்கிய இதயம் அங்கும் இங்கும் புரண்டது.

‘யார் அந்த ஆண் மகன்... எங்கிருந்து வந்தான் மின்னலாய்... பெண்மை அழகு... ஆண்மை கம்பீரம்... என்றுதானே படித்திருக்கிறோம்... இந்த ஆண் மகன் அழகாகவும் இருக்கிறானே... ஆண் மயில் போல எத்தனை அழகு... சோழ தேசத்து வீரனாகத்தான் இருக்க வேண்டும்’ புரண்டு படுத்தாள் நீலமதி. காட்சிகள் கண் முன் விரிந்தது.

‘உதட்டோர புன்னகையுடன் நின்றான் வாலிப வீரன். கையில் நீண்ட மெல்லிய வாள். அவளை நோக்கி வாளை வீசினான் வேகமாய். அதில் கோபம் இல்லை. காதல் இருந்தது. தொடர்ந்து சுழன்றாள். அவனுடைய அசைவுகள் பரதம் அறிந்த இளம் பெண்ணின் நாட்டியம் போல இருந்தது.



அந்த வாலிப வீரனின் கைவாள்...’ கண்களுக்கு முன் கையசைத்து உருவம் கலைத்தாள்.

‘நான்... நான் காதலிக்கிறேனா... பெயர் தெரியாத அந்த வீரனை காதலிக்க ஆரம்பித்து விட்டேனா... சே... சே... அதெல்லாம் இருக்காது... நானாவது... காதலிப்பதாவது... ம்... எதற்காக அந்த முகம் என் கண்ணுக்குள் வர வேண்டும்... இதுதான்... இதுதான் காதலா...’ சிந்தனையை அறுத்துப் போட்டது அந்த சத்தம்.

யாரோ மேன் மாடத்து படிகளில் வேகமாய் நடந்து வருவது தெரிந்தது. பதற்றமாய் எழுந்து அமர்ந்தாள் நீலமதி.

அந்த மாளிகையின் மேன் மாடத்தில் நான்கு பேர் மட்டுமே இருந்தனர். இருவர் நின்று கொண்டும், இருவர் அமர்ந்து கொண்டும், அந்த அறையின் நடு நாயகமாய் கிடந்த ஆசனத்தில் மனிதருக்குப் பதிலாய் மரத்தட்டு ஒன்று அமர்ந்திருந்தது. அந்த பழத்தட்டு பழங்களுக்கு பதிலாய் இரண்டு குறுவாட்களை சுமந்திருந்தது. இரண்டு குறுவாட்களின் கைப்பிடியும் யானை தந்தத்தால், அழகிய வேலைப்பாடுகளுடன் காட்சியளித்தது. ஒரு குறுவாளின் கைப்பிடியில் சிங்களத்து சிங்கமும், இன்னொரு குறுவாளின கைப் பிடியில் பாண்டிய தேசத்து மீனும் வாய் பொத்திக் கிடந்தன. தலை கீழாய் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கு தன் மஞ்சள் ஒளியை குறுவாளில் ஒட்டியிருக்கும் இரத்தத்தையும், கைப்பிடியில் செதுக்கியிருக்கும் சின்னங் களையும் காட்டி ‘ஆபத்து... ஆபத்து...’ என்றது.

அந்த அறையை இறுக்கிப் பிடித்திருந்த மௌனத்தை கலைத்தாள் கயல்விழி.

“பேசாம இருக்கிறதுக்கா தஞ்சாவூரிலிருந்து மதுரைக்கு வந்திருக்கிறோம்.”

“இந்த ஓலை என்னை பேச விடாமல் செய்து விட்டது” என்றாள் குந்தவை கவலை தோய்ந்த குரலில்.

“அப்படி என்னதான் எழுதியிருக்கிறது...?” என்று கேட்டான் கம்பன் மணியன் பொறுமை இழந்து.

“அருண்மொழி படித்துப் பார்” ஓலையை தம்பியிடம் கொடுத்தாள் சோழ இளவரசி.

அவனோ ஒரே மூச்சில் படித்து விட்டு கம்பன் மணியனிடம் கொடுத்தான். ஒற்றர் படைத் தலைவன் படித்து முடித்தான் வாத்தோட்டமாய்.

“இன்னொரு முறை படி” என்றாள் கயல் விழி கண் இமைக்காமல்.

மீண்டும் ஒருமுறை ஓலையை படித்தான் சத்தமாய்.

“மீன் துரத்துகிறது -
சோழ தேசத்து நிலவை.
நிலவின் நிறம் நீலம்.
மீனின் முகம் வேங்கை.
மதுரையில் -
நதியை சந்திக்கும் ஆறு.
தஞ்சையில் -
நாட்டியம் மிரட்டும் நான்கு.
மஞ்சள் -
ஒளிந்திருக்கிறது நீலத்துக்குள்
கறுப்புக் காலின் வெண்மை



தொட -
தொடு -
நீல நிலவை.
- வந்தியத் தேவன்”

“அண்ணா...”

“மீண்டும் ஒரு முறை படிக்க முடியாது கயல் விழி.”

“நீ ஒற்றர் படைத்தலைவன் தானே...?”

“இந்த சந்தேகம் மன்னருக்கு வந்ததில்லை.”

“முதல் வரியை மீண்டும் படி.”

“மீன் துரத்துகிறது.”

“அர்த்தம்...?”

“பாண்டிய வீரர்கள் யாரையோ துரத்துகிறார்கள்.”

“யாரையோ அல்ல. சோழ தேசத்து நிலவை.”

“இங்கே நிலவு பெண். சோழ தேசத்து பெண்ணைத் துரத்துவது பாண்டிய வீரர்கள்.”

“ம்... அண்ணா அடுத்த வரிக்கு போவோம். நிலவின் நிறம் நீலம்... எந்த ஊரில் நிலவு நீலத்தில்...”

“நிலவு நீலம்... நீலம் நிலவு... நீல நிலா... பதில் அருண்மொழி வர்மனிடம் இருக்கிறது” என்றான் கம்பன் மணியன் உற்சாகமாய்.

“உனக்குத் தெரிகிறதா அருண்மொழி...?” வியப்பால் கேட்டாள் குந்தவை.

“நீலமதி” என்றான் அருண்மொழிவர்மன்.

○



# பதினான்கு

நீலமதி இதயம் வேகமாகியிருந்தது.

அந்த குளிர் இரவிலும் வியர்த்திருந்தாள்.

மேன் மாடத்து படிகளில் கால்களின் தட தடப்பு இதய தட தடப்போடு விளையாடியது. பதற்றம் வழிய எழுந்து அமர்ந்திருந்தாள்.

கண்கள் மேன் மாடத்து படிகளின் உச்சத்தை தொட்டுக் கொண்டிருந்தன.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் -

பூக்கள் சுமந்த தலை தெரிந்தது. அவள் - நக்கன் சுந்தரி.

''சுந்தரி'' வாய் திறந்தாள் நீலமதி.

''பேசாதே'' எச்சரித்தாள் நக்கன் சுந்தரி.

''நீலமதி... ம்... எதுவும் பேசாமல் என் பின்னால் வா'' கிசுகிசுப்பாய் வார்த்தைகளை உதிர்த்து விட்டு படிகளில் இறங்கத் - தொடங்கினாள் நக்கன் சுந்தரி அவசர அவசர மாய். மெல்ல கையூன்றி எழுந்து நின்றாள். மனதுக்குள் தயக்கம் எட்டிப் பார்த்தது.



''ஏய் வா'' சத்தமில்லாமல் உதடசைத்து அழைததாள் நக்கன் சுந்தரி திரும்பி.

இம் முறை அழைப்பில் கோபம் இருந்தது. அவளு டைய நிழல் எதிர் சுவரில் நீண்டு விழுந்து பயமுறுத்திற்று. தரையில் கிடந்த நீள் துகிலை எடுத்து கழுத்தோடு கழுத்தாய் சுற்றிக் கொண்டு அந்த பெண்ணைப் பின் தொடர்ந்தாள் நீலமதி பூனையின் லாகவத்துடன்.

இருவரும் படிகளில் இறங்கி கீழே வந்தார்கள். அதிர்ச்சி காத்திருந்தது.

நக்கன் பூங்காவின் பருத்த உடலை இடித்துக் கொண்டு சோழ தேசத்து பெருந்தரத்து அதிகாரி ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

அவசர அவசரமாய் நீலமதியை இழுத்துக் கொண்டு அருகிலிருந்த தூண் மறைவுக்கு சென்றாள் நக்கன் சுந்தரி.

அவர்கள் இந்த இருவரையும் கவனிக்கவில்லை.

பேச்சு மேன் மாடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

''மேன் மாடத்தில்தான் இருக்கிறாள்.''

''அவள் பெயர் நீலமதிதானே...?''

''நீலமதிதான்.''

''அவள் அம்மா...?''

''இந்த இல்லத்தில்தான் இருக்கிறாள்.''

''நல்லது.''

"தாயும் மகளும் எதாவது தவறு செய்து விட்டு ஓடி வந்து விட்டார்களா...?" ஆர்வமாய் வந்தது கேள்வி நக்கன் பூங்காவிடமிருந்து.

"தவறுதான். தஞ்சாவூரிலிருந்து மதுரைக்கு ஓடி வந்தது தவறுதான்" என்றார் சோழ பெருந்தரத்து அதிகாரி.

"அப்படி என்ன தவறை செய்து விட்டு ஓடி வந்திருக்கிறார்கள்...?"

"உன்னையே சிறைக்கு அனுப்பக் கூடிய அளவுக்கு பெரிய தவறு."

"பூங்காவிடம் சொல்லக் கூடாதா...?"

"பூங்காவிடமும் கோயிலிடமும் சொல்லக் கூடிய ரகசியம் அல்ல. ராஜ ரகசியம். ராஜ ரகசியம்" என்றார் இருமுறை ரகசியம் சொல்வது போல.

அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் நக்கன் பூங்கா வாய் திறக்கவில்லை. மேன் மாடத்து படிகள் தட தடத்தன அவர்கள் கால்களால். தூண் மறைவிலிருந்து வெளியே வந்தனர் நீலமதியும் நக்கன் சுந்தரியும்.

"அம்மா..." என்றாள நீலமதி கண்ணீருடன்.

"இந் நேரம் பத்திரமாய் போய் சேர்ந்திருப்பார்கள்."

"எங்கே...?"

"மூன்றாவது வணிகர் வீதியின் இரண்டாவது இல்லத்துக்கு."

"அங்கே..."



"நல்லவர்கள் இருக்கிறார்கள்."

"நான்..."

"அங்கேதான் போக வேண்டும் அதற்கு முன்..."

"அதற்கு முன்...?" பயத்துடன் வந்தது கேள்வி நீலமதி யிடமிருந்து.

"ஒன்பதாம் எண் இல்லம் போக வேண்டும்."

"ஏன்...?"

"உன் மனதில் ஒளிந்து கிடக்கும் ரகசியம் சொல்ல."

"யாரிடம்...?"

"மன்னன் மகளிடம்."

"குந்தவை நாச்சியார் மதுரைக்கு வந்திருக்கிறார் களா...?" குரல் உயர்ந்திருந்தது ஆச்சர்யத்தால்.

"மெதுவாய் பேசு. ஒன்பதாம் எண் இல்லத்தில் இருக்கிறார்கள். நீ இதுவரை சொல்ல பயந்த ரகசியத்தை சோழ இளவரசியிடம் சொல். உனக்கு விடிவு பிறக்கும். ம்... வா போகலாம்" நீலமதியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கீழ் அறைகளைக் கடந்தாள் நக்கன் சுந்தரி வேக வேகமாய்.

பாட்டும் கும்மாளமுமாய் ஆடி அசந்த வீடு உறங்கிக் கிடந்தது.

சோம பானத்தின் பிடியில் மயங்கிக் கிடந்தார்கள் தளிச் சேரிப் பெண்கள். மூச்சிறைக்க நடந்து வீட்டின் பின் பக்கம்

வந்திருந்தார்கள் இருவரும். குறுக்கே தடையாய் நின்றது பின்பக்க பெருங்கதவு.

தாழ்ப்பாள் நீக்கி கதவை இழுத்தாள் நக்கன் சுந்தரி. அந்தக் கதவு இழுத்த இழுப்புக்கு வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது.

"நீல மதி... நீலமதி" மேன் மாடம் அதிர்ந்தது நக்கன் பூங்காவின் கோபக் குரலால்.

பூங்காவின் கோப அலறல் நான்கைந்து பெண்களின் உறக்கத்தை கலைக்க முயற்சி செய்தது. நீலமதியின் இதயமோ பயத்தில் நடுங்கியது. கதவோ திறக்க மாட்டேன் என்றது நேரம் காலம் தெரியாமல்.

'நீலமதி' என்று பதில் சொன்ன சோழ இளவரசன் அருண்மொழிவர்மன் கண்களில் நிலவு வந்திருந்தது மின்னலாய். தம்பியின் முகம் பார்த்த தமக்கை குந்தவை கண்களில் வியப்பு.

"உனக்கு நீலமதியை தெரியுமா...?" கேள்வி வந்தது சோழ இளவரசியிடமிருந்து.

"தெரியும். பாண்டிய வீரர்களிடமிருந்து அவளை காப்பாற்றியிருக்கிறேன்."

"எங்கே இருக்கிறாள்...?"

"அதுதான் தெரியாது."

"என்ன உளறுகிறாய்...?"

"அக்கன் நான் எதுவும் உளறவில்லை. இரண்டு பெண்களை மதுரை வீதியில் பார்த்தேன். அவர்களை பாண்டி தேசத்து முரடர்கள் துரத்தி வந்தார்கள். அந்த பெண்கள் தாயும் - மகளுமாய் இருக்க வேண்டும். மகளை தூக்கிச் செல்ல முயன்றார்கள் நான் தடுத்தேன். தப்பி ஓடி விட்டார்கள். இந்த பெண்களும் நன்றி கூடச் சொல்லாமல் அவசரமாய் காணாமல் போய் விட்டார்கள்." என்றான் அருண்மொழிவர்மன் கதை சொல்வது போல்.



"அந்த பெண் பெயர் நீலமதி என்று உனக்கெப்படித் தெரியும்...?" குந்தவை கேட்டாள் அறிந்து கொள்ளும் எண்ணத்தில்.

"மறக்காமல் எப்படி மனதுக்குள் இருக்கிறது...?" கோபமாய் வந்தது கேள்வி கயல் விழியிடமிருந்து.

"மறக்கக் கூடிய பெயரா அது...? என்றான் சோழ இளவல் கண்களில் கனவு மிதக்க.

"பெயர் மட்டும்தானா...?" கயல் விழியின் கண் இமைகள் படபடத்தன பொறாமையில்.

"மறக்கக்கூடிய முகமா அது...?" என்றான் மன்னன் மகன் மனதுக்குள் சிரிப்புடன்.

"அவள் என்னை விட அழகா...?" கயல் விழியிட மிருந்து சீற்றமாய் வந்து விழுந்தன வார்த்தைகள். கதை களம் மாறுவது உணர்ந்து திசை மாற்றினான் சோழ இளவல்.

"நீலமதி நீல கண்டனின் கழுத்து நிறம். மூட மறுக்கும் வாய் கேட்க மறுக்கும் காது. இமைக்க மறுக்கும்..."

"நான் அவளை உடனே பார்த்தாக வேண்டும்" என்றாள் கயல்விழி பிடிவாதமாக.

“நீ மட்டும் அல்ல கயல். மன்னன் மகள் மன்னன் மகன் மன்னன் அவளைப் பார்த்தாக வேண்டும்” என்றாள் குந்தவை தீர்மானமான குரலில்.

“எதற்காக...?”

“அவளிடம்தான் ரகசியம் இருக்கிறது.”

“என்னது... ரகசியமா...?”

“ஆம். சோழ தேசத்தை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற பயன்படும் ரகசியம். நீல நிலா ரகசியம்” என்றாள் மன்னன் மகள் மனதுக்குள் வட்டமிட்டு.

“அதென்ன ரகசியம்...?” இந்த முறை கேள்வி வந்தது கம்பன் மணியனிடமிருந்து.

“மீண்டும் ஒரு முறை ஓலையைப்படி கம்பன் மணியா.” கட்டளையிட்டது சோழ இளவரசியின் குரல்.

மனதுக்குள் சங்கடத்துடன் ஓலையை மீண்டும் படிக்க ஆரம்பித்தான்.

“மீன் துரத்துகிறது சோழ தேசத்து நிலவை. நிலவின் நிறம் நீலம். மீனின் முகம் வேங்கை –”

“நிறுத்து. மீனின் முகம் வேங்கை. புலி சோழ தேசத்து சின்னம். சோழர்களைப் போல சோழ தேசத்தில் வேடமிட்டு பாண்டியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நீலமதியை துரத்துகிறார்கள்... ம்... கம்பன் மணியா படி...” என்றாள் குந்தவை சுட்டு விரல் ஆட்டி.

தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான் கம்பன் மணியன் உற்சாகமாக.



“மதுரையில் நதியை சந்திக்கும் ஆறு. தஞ்சையில் நாட்டியம் மிரட்டும் நான்கு. –” இடையில் புகுந்தாள் சோழ இளவரசி.

“சிங்களத்து சின்னக் குயில் நதிமல்ரா தன்னுடன் தமிழ் மண்ணுக்கு வந்த ஆறு பேரையும் சந்திக்கப் போகிறாள் மதுரையில். எதோ ஒரு சதித் திட்டம் அரங்கேறப் போகிறது. தஞ்சையில் நாட்டியம் மிரட்டும் நான்கு. அதாவது தஞ்சாவூரில் நாட்டியம ஆடும் யாரோ ஒரு தளிச் சேரிப் பெண் யாரோ நான்கு பேரை - சோழ தேசத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கும் நான்கு பேரை மிரட்டுகிறாள். அவள்... அவர்கள்... அது... அந்த மூன்றும் தெரிய வேண்டும்.”

“அதென்ன அது...?” விழிகளை விரித்தாள் கயல்விழி.

“நாட்டியக்காரியையும் அந்த நான்கு பேரையும் முடிச்சு போடும் ரகசியம். அதுதான் அந்த அது. கம்பன் மணியா...” ஒற்றர் படைத்தலைவன் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

“மஞ்சள் ஒளிந்திருக்கிறது நீலத்துக்குள்.”

“இந்த இடத்தில் மஞ்சளுக்கு அர்த்தம் தெரிகிறதா தம்பி.”

“மஞ்சள் என்றால் ரகசியம். மஞ்சள் ஒளிந்திருக்கிறது நீலத்துக்குள் என்றால்...”

“நீல மதிக்குள் ரகசியம் ஒளிந்திருக்கிறது என்று அர்த்தம்” என்றாள் கயல்விழி கோபமாய்.

○



# பதினைந்து

மஞ்சள் என்றால் ரகசியம். மஞ்சள் ஒளிந்திருப்பது நீல மதிக்குள் என்று கயல்விழி பதில் சொன்னாலும், அந்த பதிலில் கோபமும் பொறாமையும் மிதந்தது. நீலமதி என்று ஒரு முறை சொல்லியும் பார்த்துக் கொண்டாள்.

“என்ன கயல்விழி முணு முணுக்கிறாய்...?” கேள்வி வந்தது குந்தவையிடமிருந்து.

“நீலமதிக்குள் ரகசியம் ஒளிந்திருக்கிறதோ இல்லையோ உங்கள் தம்பி இதயத்துக்குள் நீலமதி ஒளிந்திருக்கிறாள்” என்றாள் கயல்விழி உதடுகள் துடிக்க.

“நீலமதியை வெளியே எங்கும் தேட வேண்டாம் என்று சொல்” பாச தம்பியின் கரம் தொட்டு சிரித்தாள் குந்தவை.

“கயல்விழிக்கு கதை சொல்லும் நேரம் அல்ல இது.

மேலே படிக்கிறேன் காது கொடுக்கிறீர்களா...” கம்பன் மணியன் வார்த்தைகளில் கடுமை தெரிந்தது. ஆறு காதுகளும் ஆறு கண்களும் அந்த வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டன.



“கறுப்புக் காலின் வெண்மை தொட...”

“வெண்மை உண்மை” என்றாள் கயல்விழி.

“கறுப்புக் கால் அண்ணன் ஆதித்த கரிகாலனை குறிக்கிறது” என்றாள் அருண்மொழி வர்மன்.

“அதாவது இளவரசர் மரணத்தின் மர்மம் அறிய... தொடு நீல நிலவை.”

“நீலமதியை தொட்டால் உண்மை தெரிந்து விடும். அண்ணா உன் நண்பரை தொடச் சொன்னால் தொட்டு விடப் போகிறார்” என்றாள் கயல்விழி கோபத்தை வார்த்தைகளில் மடக்கி.

“ம்... அவ்வளவுதானா ஓலையில்...?” குந்தவை கேள்வியில் எதிர்பார்ப்பு இருந்தது.

“வேறென்ன இருக்கிறது. அனுப்பியவர் பெயர்...” கம்பன் மணியன் வார்த்தைகள் இடையில் அறுந்து போயிற்று. ஓலை நறுக்கை குந்தவை கரத்தில் கொடுத்தாள்.

அதை கையில் வாங்கிய சோழ இளவரசியின் கண்கள் கடைசி வரிக்கு அவசரமாக தாவியிருந்தது விரல்கள் தடவியது அந்த வார்த்தையை.

உதடுகள் ஒருமுறை அசைந்தது காதலாய்.

அந்த வார்த்தை அவள் காதுகளைத் தொடவில்லை. இதயத்தைத் தொட்டிருந்தது.

“வந்தியத் தேவன்.”

“என்ன செய்யலாம்...?” கேள்வி கம்பன் மணியனுக்கு சொந்தம்.

“யாரை...?” பதில் கேள்வி குந்தவையிடமிருந்து வந்தது.

“வேறு யாரை... அந்த நீலமதியைத்தான்” சலிப்பாய் பதில் வந்தது கயல் விழியிடமிருந்து.

“தொடவேண்டும்” என்றாள் மன்னன் மகள் கனவில் மிதப்பது போல்.

“உங்கள் தம்பியை அனுப்பி வையுங்கள். எள் என்றால் எண்ணெய். தொட்டுவா என்றால் கட்டியே பிடித்து விடுவார்.”

“கயல் விழி நீ அதிகம் பேசுகிறாய்...?” எச்சரித்தான் கம்பன் மணியன்.

“நீலமதி இந்நேரம் எங்கேயிருப்பாள்...” காற்றுக்கு வலித்து விடுமோ என்று பயந்தவன் போல் உதடுகளை அசைத்தான் சோழ இளவரசர் அருண்மொழிவர்மன்.

அதே நேரம் -

தளிச் சேரி மாளிகை ஒன்றின் -

பின்புறக் கதவை நக்கன் சுந்தரியுடன் சேர்ந்து இழுத்துக் கொண்டிருந்தாள் நீலமதி. அந்தக் கதவோ இழுத்த இழுப்புக்கு வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது. மேன் மாடத்திலிருந்து தூரத்திக் கொண்டு வந்தது நக்கன் பூங்காவின் குரல். தட தடவென்று எழுந்து அமர்ந்திருந்தனர் சில பெண்கள்.

“ம்... நீலமதி மூச்சை பிடித்து இழு” இருவரும் கதவைப் பிடித்து இழுத்தார்கள் உயிர் வலிக்க.



நிலைமையின் விபரீதம் உணர்ந்தது போல் கதவு திறந்து கொண்டது. ஓடி வந்து வரவேற்றது வடகிழக்கு பருவக் காற்று ஈரத்துடன். வெளியே மழை தூறிக் கொண்டிருந்தது.

“ம்... போ...”

“நீங்கள்...”

“எனக்கு எதுவும் நடக்காது. உனக்கு முன்னால் நான் அங்கியிருப்பேன். நந்தவனத்தை தாண்டியதும் ஓடை வரும். ஓடையைத் தாண்டியதும் வீதி தொடலாம். அடுத்து நான்கு வீதி சந்திப்பு. இரவு காவல் இருக்கும். கவனமாய் கடந்து போ. ம்... போ...” வாசல் தாண்டியதும் கதவு அடைத்துக் கொண்டது அவசரமாய்.

அந்த வீதி வெறுமையாய் கிடந்தது.

இருட்டு மட்டுமே அமர்ந்திருந்தது.

வீதியோர கம்பங்களில் செருகியிருந்த தீப்பந்தங்கள் பலத்த மழையில் சிக்கி நனைந்து போனதால் கண் மூடிக் கிடந்தன. இரவு நேரத்து காவல் பணி வீரர்கள் தொலைந்து போயிருந்தார்கள் மழைக்கு பயந்து. ஆள் அரவமில்லாத அந்த வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த நீலமதியின் கண்களில் கண்ணீர் வழிந்தது. அந்த கண்ணீருக்கு காரண மிருந்தது.

மழை சிதறும் மழை இரவில் - பதினாறு வயதை தொட்ட இளம் பெண் ஒருத்தி மழையில் நனைந்து கொண்டே வீதி வீதியாய் இடம் தேடி தன்னந் தனியளாய் நடந்தால் கண்ணீர் வராதா... அடைக்கலம் தரும் வீடு தேடி

நள்ளிரவில் நடந்தால் கண்ணீர் வராதா... சிட்டுக் குருவிக்கு கூட சின்னக் கூடு இருக்கும். கட்டிளம் குமரிக்கு இரவிருக்க இல்லம் இல்லையென்றால் கண்ணீர் வராதா... காவிரிக் கரையிலிருந்து வைகைக் கரைக்கு ஓடி வந்தும் விடாமல் ஒரு சின்னப் பெண்ணின் உயிர் குடிக்க வல்லூறுகள் துரத்தினால் கண்ணீர் வராதா... வந்தது.

நீலமதிக்கும் கண்ணீர் வந்தது.

அந்த இருள் இரவில் வழிந்த கண்ணீர் எவர் கண்ணுக்கும் தெரியவில்லை. கண்ணீரை கண்களால் பார்க்க எவரும் அந்த வீதியில் இல்லை.

கண்ணீரா... மழை நீரா... என்று தெரியாத வண்ணம் மழை நீருடன் மழை நீராய் கண்ணீர் கலந்து வழிந்தது.

கண்ணீருக்கிடையில் அந்த பெருங்கதவு மங்கலாய் தெரிந்தது. சற்றே திறந்து கிடந்தது அந்தக் கதவு. வழிந்த கண்ணீரை துடைத்தாள். நனைந்து போயிருந்த கதவில் அந்த எண் தெரிந்தது.

"ஒன்பது" நீலமதியின் உதடுகள் முணு முணுத்தன.

அடுத்த இமை மூடு பொழுது -

அதிர்ச்சியில் வாய் திறந்து கொண்டது.

அதற்கு காரணம் -

இறந்து போன மூன்று சடலங்கள் கண்ணுக்கு தெரிந்ததுதான்.

சரிந்து கிடந்த குதிரையும், கவிழ்ந்து கிடந்த சோழ ஒற்றனும் மல்லாந்து கிடந்த முத்து வீரனும் சடலங்களாய்...



அவள் இதயம் பயத்தால் வேகமாகியிருந்தது. அந்த பெருங்கதவின் முன்னால் நின்று கொண்டிருந்த சோழ காவல் வீரர்கள் அந்த சடலங்களை அப்புறப்படுத்தும் பணியில் இருந்தார்கள். முகங்களில் எரிச்சல் இருந்தது.

அதே நேரம் -

நான்கு கண்கள் நீலமதியை கவனித்துக் கொண்டிருந்தன.

குந்தவை மரத்தட்டிலிருந்து இரண்டு குறுவாட்களையும் கையில் எடுத்திருந்தாள். ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் இரண்டு முறை புரட்டி புரட்டி பார்த்தாள். யானைத் தந்த கைப்பிடி மிரட்டியது. கண்கள் தடவி தடவிப் பார்த்தன. தலை கீழாய் தொங்கிய தூங்கா விளக்கில் வெளிச்சத்தில் குறுவாட்கள் மினுக்கியது.

"இந்த குறுவாட்களை கவனித்தாயா அருண்மொழி...?" அந்த குறுவாட்களை தம்பியின் கரத்தில் கொடுத்தாள். மௌனமாய் கையில் வாங்கிக் கொண்டான் சோழ இளவல்.

அடுத்த சில விநாடிகள் குறுவாட்களை உருட்டி புரட்டிப் பார்த்தவன் - அவற்றால் கயல் விழியை குறி பார்த்தான்.

அவள் முகமோ வெட்கத்தில் சிவந்து போயிற்று.

"என்ன கயல் வழி... குறுவாள் நம்மை குறி வைத்தால் பயம் வரும். இல்லை வீரம் வரும். உனக்கு வெட்கம் வருகிறது...?"

"உங்கள் தம்பி குறுவாளால் குறி பார்க்கும் அழகு அப்படி இருக்கிறது." என்றாள் கயல்விழி உதட்டைச் சுழித்து.

குந்தவை கண்கள் அடுத்த விநாடி கோபத்தில் நிறம் மாறியிருந்தது.

"எதற்காக உன்னிடம் குறுவாட்களை தந்தேன்...?"

"ஒரு குறுவாள் குதிரையை கொன்றிருக்கிறது. இன்னொரு வாள் குதிரையை ஓட்டி வந்தவனை கொன்றிருக்கிறது. ஒரு குறுவாள் பாண்டியனுக்கு சொந்தம். இன்னொரு குறுவாள் சிங்களவனுக்கு சொந்தம். ஒரு குறுவாளில் மீன் சின்னம். இன்னொன்றில் சிங்கம்."

"உன் பார்வையில் தவறு இல்லை."

"வேறு யார் பார்வையில...?" கோபமாய் வந்தது கேள்வி கயல் விழியிடமிருந்து.

"கயல் எப்படி கோபத்தில் குதிக்கிறது பார்" கைதட்டி சிரித்தாள் குந்தவை.

"என் தங்கை என்றால் உங்கள் இரண்டு பேருக்குமே விளையாட்டு பொம்மை என்று நினைப்பு" என்றான் கம்பன் மணியன்.

"உன் தங்கை ஒன்றும் தஞ்சாவூர் தலையாட்டும் பொம்மை அல்ல. வாய் மூடாமல் பேசும் ஓவியம். அசந்தால் குதிக்கும் சிற்பம்" என்றான் மன்னன் மகன்.

"இதென்ன வர்ணனை. இகழ்ச்சி அணியா... வஞ்சகப் புகழ்ச்சி அணியா...?" கேள்வி வந்தது குந்தவையிடமிருந்து.

"எதுவும் இல்லை. காதல் அணி.' என்று கயல் விழி காதில் கிசு கிசுத்து விட்டு சாளரத்தை நோக்கி நடந்தான் அருண்மொழி வர்மன். வடகிழக்கு பருவக் காற்று முகத்தில் மோதியது ஈரமாய்.



அதே நேரம் -

சாளரத்து வழியே கண்ட காட்சி கண்களில் மோதியது. இதயம் வேகமாகியிருந்தது.

இடுப்பு வாளை கரம் தொட்டது அனிச்சை செயலாய்.

எதோ ஒரு முடிவுக்கு வந்ததை உணர்த்தியது கண்கள்.

"வருகிறேன்" ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு அறையை விட்டு வெளியேறினான் சோழ இளவல்.

அதிர்ச்சியில் இருக்கையை விட்டு எழுந்திருந்தாள் குந்தவை. கயல்விழியின் காதல் கிறக்கம் கலைந்து போயிருந்தது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான் கம்பன் மணியன்.

அதற்குள் -

மேன் மாடத்து படிகளில் தடதடத்து காணாமல் போயிருந்தான் சோழ இளவரசன் அருண்மொழிவர்மன்.

வெளியே மழை தூறிக் கொண்டிருந்தது.

○



# பதினாறு

நீலமதி அதிர்ந்தாள்.

அவசர அவசரமாய் பின் வாங்கினாள். அந்த நான்கு கண்களும் அவளை பின் தொடர்ந்தன.

அந்த நான்கு கண்களுக்கும் சொந்தக்காரர்கள் -

நடு வீதியில், இரவில் தன்னை கடத்தி செல்ல முயன்ற முரடர்கள்.

'இனி இங்கே நிற்பது ஆபத்து' என்று உள் உணர்வு எச்சரிக்க, திரும்பி ஓடத் தொடங்கினாள். அவர்களோ துரத்த... ஓடிக் கொண்டிருந்தவள் கண்கள் தேடின சுந்தரி சொன்ன மாளிகையை.

உதடுகள் 'இரண்டு... இரண்டு...' என்று முணுமுணுத்தன.

அவள் ஓட்டமோ மானின் பாய்ச்சலாய் இருந்தது. தரையில் தேங்கிக் கிடந்த மழை நீர் சிதறியது நான்கு திசைக்கும். கண்கள் தொட்டது 'இரண்டு.' பூட்டிக் கிடந்த பெருங்கதவில் வெள்ளை எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த இரண்டு அழைத்தது 'வா... வா' என்று ஓடிய வேகத்தில்



அந்த பெருங்கதவின் முன் போய் நின்றாள் மூச்சிரைக்க. தயக்கத்துடன் கதவை தொட்டாள். அந்தக் கதவோ தொட்டதும் திறந்து கொண்டது நீலமதிக்காகவே காத்திருந்தது போல. வேக வேகமாய் உள்ளே நுழைந்தாள். துரத்தி வந்த பயம் விடாமல் அவளை தொடர்ந்தது. கண்களை உயர்த்தி பார்த்தாள்.

எழுநூறு அடி உள்வாங்கி ஒரு பெரிய மாளிகை தெரிந்தது. அந்த மாளிகையோ இருட்டின் பிடியில் சிக்கி இருந்தது. அந்த மாளிகையில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நீலமதியின் இதயமோ அந்த மாளிகைக்குள்தான் தனக்கு பாதுகாப்பு இருக்கிறது என்று நம்பியது. அங்கே போய் சேர்ந்து விட்டால் அந்த மாளிகைக்குள் இருப்பவர்கள் தன் உயிரையும் தன்னுடன் இருக்கும் ரகசியத்தையும் காப்பாற்றி விடுவார்கள் என்ற எண்ணத்துடன் தொடர்ந்து ஓடி ஆரம்பித்தாள். அந்த ஓட்டம் அந்த மாளிகையை நோக்கி இருந்தது. அந்த மாளிகைக்கும் அந்த கதவுக்கும் இடையில் இருந்த எழுநூறு அடி தூரமும் வெளிச்சத்தை தொலைத்து விட்டு இருட்டோடு கைகோத்துக் கிடந்தது. இருட்டைக் கிழித்துக் கொண்டு இருட்டுக்குள் இருந்த அந்த மாளிகையை நோக்கி ஓடினாள் நீலமதி. மழையில் நனைந்து போயிருந்த ஈரச்சேலையின் சர சரப்புச் சத்தம் மட்டும் அந்தப் பிரதேசத்தின் காற்றில் மிதந்து கொண்டிருந்தது. இதயத்தை பிடித்துக் கொண்டு ஓடினாள் ஆரணங்கு. ஓடினாள். ஓடிக் கொண்டிருந்தவள் - எதன் மீதோ இல்லை இல்லை. யார் மீதோ மோதிக் கொண்டாள். தான் மோதிக் கொண்டது ஒரு ஆண் மகன் மீது என்பதை

கடைசி விநாடியில் உணர்ந்தாள். அந்த கடைசி விநாடி கரைவதற்கும் அவள் மயங்கி தரையில் விழுவதற்கும் சரியாய் இருந்தது.

அந்த காரிகை ஓடி வந்த வேகத்தில் - இருட்டில் எதிர் பாராமல் மோதியது - எதிர் வந்து மோதலில் சிக்கிய அந்த ஆண் மகனை சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. அந்த தாக்குதலில் சிறிதும் அசைந்து கொடுக்காமல் இருட்டில் மரமாய் நின்று கொண்டிருந்த அந்த வாலிப வீரன் - மண்ணில் மலராய் விழுந்து கிடந்த மங்கையை இமை மோதாமல் சில இமை மூடு பொழுதுகள் உற்றுப் பார்த்தான். அடுத்த விநாடி எதோ நினைத்துக் கொண்டவன் போல அந்த ஆரணங்கு ஓடி வந்த திசையை உற்றுப் பார்த்தான். இருட்டு மட்டுமே அமைதியாய் நின்று கொண்டிருந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் -

இடுப்பிலிருந்த குறுவாளை கையில் எடுத்தான்.

அந்தப் பெண் அழகாய் இருந்தாள்.

இளமை துள்ளுகிற வயது. உதடுகளில் விஷமம் துள்ளிக் கொண்டிருந்தது. வார்த்தைகளில் விஷம் தெறித்தது. கண்களில் மட்டும் காதல் காந்தம்.

''எனக்கு உயிரோடு வேண்டும்'' எதிரில் நின்ற ஏழு பேரும் எந்தவித பதிலும் சொல்லவில்லை.

''நீலமதி எனக்கு உயிரோடு வேண்டும்'' என்றாள் வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து.



''அவளைக் கொன்றுவிட வேண்டும் என்பதுதான் எங்கள் நால்வரின் முடிவு. அந்த ரகசியம் அவளோடு இறந்து போக வேண்டும்'' என்றான் எதிரில் நின்றவர்களில் உயரமாய் இருந்தவன்.

''இந்த ரகசியம் நீலமதிக்கு மட்டும்தான் தெரியுமா.''

''ஒருத்தி நீலமதி. அவளின் அம்மா...''

''இன்னொருத்தி சோழ தேசத்தின் தலை நகர் தஞ்சாவூரில் தெற்கு தளிச் சேரி. வடக்கு சிறகு. பதினேழாம் எண் இல்லத்தில் இருக்கும் தலைக் கோலி நக்கன் காமி. சரிதானே ரவிதாசா...'' கேள்வி வந்தது அந்த பருவ மங்கையிடமிருந்து.

எதிரில் நின்ற ஏழு பேரில் உயரமாய் இருந்தவன்தான் ரவிதாசனாய் இருக்க வேண்டும். அவன் உதடுகளுக்கு புன்னகை வந்திருந்தது.

''நதிமல்ராவுக்கு தெரியாமல் தமிழ் மண்ணில் எதுவும் நடக்காது போலிருக்கிறதே... வேறு எதாவது செய்தி...'' ரவிதாசன் கேள்விக்கு நதிமல்ரா வாய் திறந்தாள்.

''காமி காமி என்று போகிறவர்களுக்கு திறந்து வைத்திருக்கும் வீட்டின் தலைவி நக்கன் காமி உங்கள் நால்வரையும் காமித்துக் கொடுத்து விடுவேன். காமித்துக் கொடுத்து விடுவேன் என்று மிரட்டுகிறாள்... நால்வரும் புலிச் சின்னம் பொறித்த தங்கக் காசுகளை அள்ளி அள்ளி கொடுக்கிறீர்கள் காமிக்கு. உன் புத்தியைக் காமித்து விடாதே என்று அரசாங்க கத்தி கழுத்துக்கு வந்தால் உங்கள் நால்வரையும் காட்டிக் கொடுப்பது நிச்சயம். எந்த நிமிடமும்

சோழ அரசாங்கத்தின் கத்தி காமியின் கழுத்துக்கு வரலாம். இது எனக்கு வந்த செய்தி."

"நதிமல்ராவுக்கு வந்த செய்தி பொய் இல்லை. அடுத்து..."

"மன்னன் மகளும் மன்னன் மகனும் மதுரைக்கு வந்து விட்டார்கள். நாம் நம் திட்டத்தின் கடைசி கட்டத்தை நெருங்கியிருக்கிறோம். நம் எதிரிகளும் நம்மை நெருங்கி விட்டார்கள். தொட்டு விடும் தூரத்தில்தான் இருக்கிறோம். நம்மை அவர்கள் தொடுவதற்குள் கொன்று விட வேண்டும்.

"நீலமதியின் அம்மா...."

"மன்னன் மகளை சந்திப்பதற்குள் எமனை சந்தித்து விடுவாள்."

"நீலமதி."

"அவளுக்கும் அதே கதிதான்."

"நீலமதியின் முடிவு தெரிந்ததால்தான் அவள் எனக்கு உயிரோடு வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன்" என்றாள் நதிமல்ரா.

"வேண்டுகோள் நிறைவேற்றப்படும்" என்றான் ரவிதாசன்.

"வேண்டுகோள் அல்ல. கோரிக்கை" என்றாள் வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து.

"நதிமல்ரா சொன்னால் அதை கட்டளையாக ஏற்றுக் கொள்ளவும் நான் தயார்தான். அதற்கு முன்னால் ஒரு



சந்தேகம். நீலமதி ஏன் உங்களுக்கு உயிரோடு...?" தயக்கமாய் வந்தது கேள்வி ரவிதாசனிடமிருந்து.

"அந்த நீலமதியை கடல் கடந்து எங்கள் தீவுக்கு கொண்டு போக வேண்டும். என் மாளிகைக்கு அடிமையாய் ஒரு தமிழச்சி தேவைப்படுகிறது" என்றாள் நதிமல்ரா கண் சிமிட்டி.

"நதிமல்ரா நீ இருப்பது தமிழ் மண். உன் நண்பர்கள் தமிழர்கள் என்பதை அடிக்கடி மறந்து விடுகிறாய். தமிழர்களை அடிமையாக்க வேண்டும் என்ற சிங்கள புத்திதான் தலை தூக்கி நிற்கிறது."

"உண்மை உண்மை. சோழ இளவரசன் அருண்மொழி வர்மனை கொலை செய்யும் திட்டத்துடன் கடல் கடந்து வந்தேன். மதுரை மண்ணுக்கு வந்தவுடன் அருண்மொழி வர்மனை என் தேசத்துக்கு அடிமையாய் இழுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆசை பிறந்திருக்கிறது" அந்த ஆரணங்கின் வார்த்தைகளில் விஷம் தடவியிருந்தது.

"ஆ... அழகான ஆசை. நதிமல்ரா..."

"ம்..."

"நீ அருண்மொழி வர்மனை நேரில் பார்த்திருக் கிறாயா...?"

"நேரிலும் பார்த்ததில்லை. ஓவியத்திலும் கண்ட தில்லை."

"நேரில் பார்த்தால் ஆபத்துதான்."

"யாருக்கு...?"

"உனக்குத்தான் நதிமல்ரா."

"எனக்கா...?" ஆச்சர்யத்தால் வாய் பிளந்தாள் சேயிழை.

"ஆம். உனக்குத்தான். அருண்மொழிவர்மனை நேரில் பார்த்தால் அவன் அழகுக்கு நீ அடிமையாகி விடுவாய்."

"அடிமையானால்...?"

"உன்னையும் சேர்த்து கொன்று விடுவோம்" என்றான் ரவிதாசன் குரலில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல்.

"நல்லது. நல்லது. சோழ தேசத்து தண்ணீரை குடித்தாலும் பாண்டிய மன்னனுக்கு விசுவாசமாகத்தான் இருக்கிறாய்."

"அதனால்தான் உன்னோடு பேசி கொண்டிருக்கிறேன். சோழனுக்கு நீயும் எதிரி. நானும் எதிர். எதிரிக்கு எதிரி நண்பன்."

"ரவிதாசா... ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில்" வார்த்தைகள் கெஞ்சியது.

"சொல்வது அடிமைகளின் கடமை" என்றான் ரவிதாசன் உதட்டோர குறு நகையுடன்.

இருவர் உரையாடலையும் கவனித்துக் கொண்டிருந்த ஆறு சிங்கள முகங்களில் எந்த வித உணர்ச்சியும் வெளிப்படவில்லை. வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவும் இல்லை. பேசுகிற விருப்பமும் தெரியவில்லை.

"நக்கன் காமி...?"



"மரணம் நெருங்கியிருக்கும்."

"யார் மரணத்தை கொண்டு செல்வது...?"

"எமனை இழுத்துக் கொண்டு காமன் இல்லத்துக்கு சென்றியிருப்பான் சோமன்" என்றான் ரவிதாசன் கனவில் யாரையோ பார்ப்பது போல.

**த**ஞ்சை நகரம்.

நேற்று பெய்த மழையில் ஈரமாய் கிடந்தது தெற்கு தளிச் சேரி வீதி வடசிறகின் பதினேழாவது வீடு இருட்டில் நின்று கொண்டிருந்தது எழுதாத ஓவியமாய். அந்த தேவரடியார் வீட்டின் மாடம் மல்லிகைக் கொடி சுமந்து கிடந்தது. மழை நிறுத்தம் செய்திருந்த மேகங்கள் மௌனமாய் காத்துக் கிடந்தன எதோ விபரீதத்தை எதிர் கொள்வது போல. மழை ஈரம் சுமந்த வடகிழக்கு பருவக் காற்று கூட யாருக்கோ பயந்தது போல விட்டு விட்டு வீசியது. ஒன்றிரண்டு மின்மினிப் பூச்சிகள் மட்டும் தைரியமாய் திரிந்தன பின்புற விளக்கை சுமந்து கொண்டு. அந்த தேவரடியார் வீடு பாட்டும் கும்மாளமும் அற்று நாட்டிய பெண்களின் சலங்கை கிணுகிணுப்பும் கரைந்து தூக்கத்தின் பிடியில் இருந்தது. சோம பானத்தின் உறக்க உளறல்கள் மட்டுமே அவருக்கு கேட்டது. அந்த மாடத்தில் இரண்டு கண்கள் மட்டுமே விழித்துக் கிடந்தன.

தூரத்து சில்வண்டு ஒன்று கத்தியது நேரம் காலம் அறியாமல் அந்த வீதிக்குள் ஓடமனமில்லாதது போல் நடந்து வந்தது கரும் புரவி ஒன்று. அதன் நடையில் பூனையின் லாகவம் தெரிந்தது. அந்த குதிரையின் முதுகில்

அமர்ந்திருந்தவன் எதோ ரகசிய கட்டளை இட்டிருக்க வேண்டும். நடந்த குதிரை அசையாமல் நின்றது. குதிரையின் முதுகில் அமர்ந்திருந்தவன் குதித்து இறங்கினான் உடல் அதிராமல். குதித்தவன் வீதியின் இரண்டு பக்கங்களிலும் கண்களை ஒட விட்டான். திருப்தி அடைந்தவனாய் இடுப்பை ஒரு முறை தொட்டுப் - பார்த்துக் கொண்டான். இருக்கிறேன் என்றது விஷம் சுமந்த குறுவாள்.



# பதினேழு

விஷம் சுமந்த குறுவாளை இடுப்பில் வைத்திருந்த அந்த மனிதனின் உதடுகள் காற்றுக்கும் கேட்காமல் எதோ முணு முணுத்தது. கண்களில் கொஞ்சமாய் பயம் ஒட்டியிருந்தது. எஜமானின் எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்ட அந்த கரும்புரவி நிதானமாய் நடந்து சற்று தள்ளியிருந்த பூவரசு மரத்தடியில் போய் நின்று கொண்டது. தெற்கு தளிச்சேரி வீதியின் வட சிறகில் பதிநான்காவது வீட்டின் முன் நின்று கொண்டிருந்தவன் மீண்டும் ஒருமுறை கண்களால் வீதியை துழாவி விட்டு பதினேழாவது வீட்டை நோக்கி நடந்தான். அந்த இல்லம் நக்கன் காமியின் தலை மையில் இயங்குகிறது. சில நிமிடங்களில் பதினேழாவது வீட்டின் முன் வாசல்படிகளை தொட்டிருந்தான்.

அதே இமை மூடு பொழுது -

மேன் மாடத்தின் சாளரம் திறந்து கொண்டது சத்த மில்லாமல். விழித்துக் கிடந்த இரண்டு கண்கள் வீதியைப் பார்த்தன. அந்த கண்களுக்கு பரவசம் வந்திருந்தது. அந்த கண்களுக்கு சொந்தக்காரி - நக்கன் காமி. காமம் வழிந்த உதடுகள் அசைந்தது போதையாய்.

“சோமன்” என்றாள் காமி காற்றுக்கு வலிக்காமல்.

சோமன் வந்து வாசலில் நிற்பது காமனே நேரில் வந்து கதவை தட்டுவதாய் உணர்ந்தாள். நடுத்தர வயது தேகம் எழுந்து கொண்டது உற்சாகமாய். சோமன் - சோழ தேசத்தின் பெருந்தரத்து அதிகாரி. தஞ்சை நகரத்தில் சோமன் கொடிதான் பறந்து கொண்டிருக்கிறது.

“டக்... டக்...” கதவை தட்டினான் சோமன் இருமுறை.

அந்தத் தட்டல் கதவுக்கு வலிக்குமோ என்று தட்டுவது போலிருந்தது. கதவோ அவசரமாய் திறந்து கொண்டது காத்திருந்தது போல.

நக்கன் காமியின் முகம் தெரிந்தது.

“சோமன்” என்றாள் காமம் கண்களில் வழிய.

“காமி” என்றான் காதலியை அழைக்கும் காதலனாய்.

“வா... வா... காட்டுகிறேன் சொர்க்கத்தை” வார்த்தைகள் சொக்கி சொக்கி வந்தன சேயிழையிடமிருந்து.

“ம்.” என்றது வாய் ஒற்றை எழுத்தாய்.

இதயமோ ஆயிரம் பேசியது ரகசியமாய்.

‘எனக்கு சொர்க்கத்தைக் காட்டுவதற்குள் உனக்கு நரகம் காட்டுகிறேன்.’

ஆரணங்கின் மார்பில் கரம் வைத்து தள்ளியபடி உள்ளே நுழைந்தான் அவசர அவசரமாய்.

“சோமனுக்கு அத்தனை அவசரமா...” குரல் கொஞ்சியது குயிலாய்.



“அவசரம்தான். கதவை பூட்டு” என்றான் சோமன் கட்டளையிடும் குரலில்.

வீதியை ஒருமுறை பார்த்து விட்டு கதவை பூட்டினாள் நக்கன் காமி. அதற்குள் வீட்டுக்குள் நுழைந்திருந்தான் எமன்.

“கொண்டு வந்திருக்கிறாயா...” அவன் இடுப்புக்கு நீண்டது காமியின் வலது கரம்.

அடுத்த இமை மூடு பொழுது -

தடுக்கப்பட்டது கரம் அவசரமாய்.

“இருக்கிறது காமி” என்றான் சோமன் கோபத்தை அடக்கிக் கொண்டு.

“காமி” என்றாள் காமி.

“காட்டுகிறேன்” பிடித்த கரத்தை இழுத்து இடுப்பில் தட்டிக் காட்டினான்.

“ச் செலவ்” சப்தமிட்டது இடுப்பிலிருந்த பொருள்.

விஷம் சுமந்த குறுவாளோ அமைதியாய் இருந்தது.

வானம் மழை மேகம் சுமந்திருந்ததால் நிலா முற்றம் இருட்டு சுமந்திருந்தது. இருட்டைக் கடந்து நிலா முற்றத்தை ஒட்டியிருந்த அறையை எட்டிப் பார்த்தான் பெருந்தரத்து அதிகாரி சோமன்.

தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கின் ஒளியில் தூங்கிக் கொண்டிருந்த தளிச் சேரிப் பெண்கள் தெரிந்தார்கள். அருந்திய சோம பானம் ஆடிய ஆட்டம், காமம் தின்ற களைப்பு, வாய் பிளந்த தூக்கம்... ஆடை விலகிப்

போயிருந்தது வெட்கமில்லாமல். எங்கிருந்தோ முட்டாள் கோழி ஒன்று கூவியது அரை குறை தூக்கத்தில். மூன்றாம் ஜாமத்தின் ஆரம்பத் துளிகள் கரைந்து கொண்டிருந்தது கவலையில்லாமல்.

"ம்... வா... மேலே போகலாம்" என்றான் சோமன் மனதுக்குள் மிதக்கும் கவலையுடன்.

பதிலை எதிர்பார்க்காமல் மேன் மாடத்து படிகளில் ஏறத் தொடங்கினான். இடுப்பைப் பிடித்துக் கொண்டு பின் தொடர்ந்தாள் நக்கன் காமி.

மேன் மாடம் சின்னதாய் அழகாய் இருந்தது.

தலைக்கு மேல் தூங்காமல் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கு மஞ்சள் ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. அந்த அறையின் ஓர் ஓரமாய் கிடந்த மஞ்சம் மஞ்சள் துணியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விளக்கின் மஞ்சள் ஒளிபட்டு மஞ்சள் மஞ்சம் இன்னும் மஞ்சளாய் தெரிந்தது. வா வா என்று அழைப்பது போலிருந்தது நக்கன் காமிக்கு.

ஓடிப் போய் மஞ்சத்தில் மல்லாந்து விழுந்தாள் ஆரணங்கு. அந்த நிமிடம் அவள் இருபது வயது சினனப் பெண்ணாய் மாறியிருந்தாள் மனதுக்குள். இளமையை தொலைத்து விட்டதைச் சொன்னது சரிந்து கிடந்த வயிறு. இடுப்புச் சதையோ பயமுறுத்தியது. தாறு மாறாய் பெருகியிருந்த மார்பகம் கச்சையை மீறி வழிந்து சங்கடப்படுத்தியது.

"வர வேண்டும் சோழ தேசத்து ராஜதந்திரியே..." இரு கரம் நீட்டி அழைத்தாள் காமம் சொட்ட சொட்ட.



அவனோ எதற்கோ வந்தவன் போல நின்று கொண்டிருந்தான். இடது கரம் ஒரு முறை இடுப்பிலிருந்த குறுவாளை தடவிப் பார்த்துக் கொண்டது. கண்களோ தூங்கா விளக்கை அண்ணாந்து பார்த்தன காரணம் சொல்லாமல்.

"விளக்கை அணைத்து விடலாம் என்கிறீர்களா பிரபு." இல்லை என்பதற்கு அடையாளமாய் தலையை குறுக்கே அசைத்தான்.

"உங்களுக்கு விளக்கிருந்தால் தானே..."

"காமி..."

"எஜமானுக்கு கோபம் வந்து விட்டதா...?"

"விளக்கை பார்த்ததற்கு காரணம் இருக்கிறது."

"காரணம்..."

"இங்கே நடக்கப் போவதற்கு விளக்கு மட்டும்தானே..."

"சாட்சி என்று நினைத்துப் பார்த்தீர்களா பிரபு."

"ம்... காமி இதுவே கடைசியாய் இருக்கட்டும்."

"என்னைத் தொடுவதா...?"

"தொடர்ந்து நீ தொந்தரவு செய்வது."

"எது தொந்தரவு...?"

"காசு காசு என்று காலனாய் கழுத்தைப் பிடித்து நெரிப்பது..."

"ம்... அப்புறம்...?"

"அப்புறப்படுத்த வேண்டியதிருக்கும்."

"யாரை யார் அப்புறப்படுத்துவது சோமன். அதை அப்புறம் வைத்துக் கொள்வோம்... ம்... இந்த நிமிடம் காசு."

"காசு... காசு... காசு..." இடுப்பிலிருந்து உருவி தரையில் வீசினான் எதோ ஒரு பொருளை.

அந்த வீச்சில் கோபம் தெறித்தது. அவன் எடுத்து வீசியது துணிப்பை. பையின் முடிச்சவிழ்ந்து சிதறியது நாணயங்கள். தங்க நாணயங்கள். துணிப்பையில் இருந்து தரையில் விழுந்து சிதறி ஓடிய தங்க நாணயங்கள் அறை எங்கும் சிதறி ஓடியது. உருண்டு ஓடிய நாணயங்கள் பக்கச் சுவர்களில் மோதி. ஓட்டத்தை நிறுத்தி விட்டு மல்லாந்தும் கவிழ்ந்தும் விழுந்தன கடைசி விநாடி சப்தத்தை எழுப்பி விட்டு.

தலை மோதி விழுந்த தங்க நாணயங்கள் விளக்கின் மஞ்சள் ஒளியில் மினுக்கின. நாணயத்தில் தங்கப் புலி சிரித்தது. மஞ்சத்திலிருந்து குதித்து இறங்கினாள் நக்கன் காமி. அதுவரை பேசிக் கொண்டிருந்ததை மறந்திருந்தாள். தரையில் விழுந்து கிடந்த தங்க நாணயங்களை ஓடி ஓடி பொறுக்கத் தொடங்கினாள். விளக்கின் மஞ்சள் ஒளியில் மினுக்கிய தங்கப் புலிகள் வா... வா என்றது நக்கன் காமியை. அந்த அழைப்பில் மரணம் இருந்தது.

மஞ்சத்துக்கு அடியில்... சுவரோரம்... தூண் மறைவில்... தேடி தேடி தங்கக்காசுகளை சேகரித்தவள் நிமிர்ந்தாள் சந்தேகத்துடன்.

"எத்தனை கழஞ்சு...?" கேள்வியை வீசினாள் நக்கன் காமி.



"நூறு*கழஞ்சு பொன்" என்றான் சோழ பெருந்தரத்து அதிகாரி சோமன்.

வார்த்தைகளில் இறுக்கம் அமர்ந்திருந்தது. அதற்குள் எண்ணத் தொடங்கியிருந்தாள் கண்களில் ஆசை வழிய.

எதையோ எதிர்பார்த்து நிற்பது போல் -

பொறுமையில்லாமல் நின்று கொண்டிருந்தான் சோமன்.

"தொண்ணூற்று ஒன்பதுதான் இருக்கிறது" என்றாள் கவலை சுமந்த வார்த்தைகளில்.

வலது கை தடவிக் கொண்டிருந்தது தங்க நாணயங்களை.

"இதோ" காலடியில் கிடந்த ஒற்றை நாணயத்தை உதைத்தான்.

காமியின் மடியில் போய் விழுந்தது அந்த தங்க நாணயம் உதறலுடன். பரவசமாய் கையில் எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"காமி."

"ம்..."

"நிறுத்திக் கொள்."

---

* கத்யானா என்னும் பொற்காசு 58 நெல்மணி நிறை உடையதாக இருந்தது. தமிழகத்திலும் இதுவே பெரும்பாலும் வழக்கில் இருந்தது. இதுவே 'கழஞ்சு' என வழங்கப்பட்டது. - டாக்டர் கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு. பக்கம் 201.

"எதை...?"

"என்னிடம் மிரட்டி பொற் காசுகள் வாங்குவதை."

"நீங்கள் நால்வரும் எனக்கு ஒன்றும் முந்தானை விரிப்பதற்கு தங்கக் காசு தரவில்லை. எனக்கு தெரிந்த ரகசியம் அரண்மனைக்கு தெரிந்து விடக் கூடாது என்பதற்காக தருகிற சன்மானம்."

"இனி தர முடியாது காமி" என்றான் சோமன் உறுதியான குரலில்.

"என் மடியில் தங்கக் காசு வந்து விழாவிட்டால் உங்கள் நால்வர் கழுத்துக்கும் சுருக்கு கயிறு வந்து விழும். என் கழுத்தில் தங்க மாலை வந்து விழாவிட்டால் உங்களுக்கு மரண ஓலை வரும்." என்றாள் காமி எகத்தாளமாக.

"இதோ ஓலை" இடுப்பிலிருந்து ஓலை நறுக்கு ஒன்றை எடுத்து நீட்டினான்.

"மொத்தமாய் தரப் போகிறீர்களா...?" தயக்கத்துடன் ஓலையை கையில் வாங்கி புரட்டிப் பார்த்தாள்.

எழுத்துக்கள் சுமந்த ஓலை சிரித்தது எமனாய்.

மஞ்சள் விளக்கொளியில் -

ஓலை நறுக்கிலிருந்த எழுத்துக்களைப் படித்தாள் உதடசையாமல்.

'இனி நீ இறந்து விடு - சோபரரே'

மீண்டும் படித்தாள் முணு முணுப்பாய்.



"இனி நீ இறந்து விடு - சோபரரே" கோபத்தில் பயம் ஒட்டிக் கொள்ள நிமிர்ந்தாள் நக்கன் காமி.


எதிரில் நின்று கொண்டிருந்த -

சோமன் கண்களில் கொலை வெறி மினுக்கியது.

"இனி நீ இறந்து விடு" என்றான் உதட்டோரத்தில் புன்னகை நெளிய.

இடுப்பிலிருந்த குறுவாள் கைக்கு வந்திருந்தது.

○



# பதினெட்டு

நக்கன் காமி நடுங்கிப் போயிருந்தாள் பயத்தில். கண்களுக்கு முன்னால் கண்களில் கொலை வெறி மினுக்க நின்று கொண்டிருக்கும் சோமனைப் பார்த்ததும் ஒரு நிமிடம் நடுங்கித்தான் போனாள். கையிலிருந்த ஓலை நறுக்கு நழுவி தரையில் விழுந்திருந்தது. காற்றில் அங்கும் இங்கும் புரண்டு வற்புறுத்துவது போல் இருந்தது. அவன் கையிலிருந்த குறுவாளின் நுனி நக்கன் காமியின் இதயத்தை குறி வைத்திருந்தது. உயிர் பயத்தில் அவசர அவசரமாய் பின் வாங்கினாள். மஞ்சம் பின்னங் காலில் தட்ட மல்லாந்து விழுந்தாள் மஞ்சத்தில். கையில் சேகரித்து வைத்திருந்த தங்கக் காசு பொட்டலம் நழுவி தரையில் விழுந்து சிதறியது நான்கு திசைக்கும். ஒரு சில விநாடிகள் காமியின் கண்கள் தங்கக் காசை நோக்கி ஓடினாலும் அடுத்த விநாடி குறுவாளில் வந்து உறைந்து நின்றது. சோமனோ - மஞ்சத்தை நெருங்கியிருந்தான் கையில் குறுவாளுடன்.

"சோமன் வேண்டாம். விபரீதத்தை விலைக்கு வாங்காதே" எச்சரித்தாள் நக்கன் காமி குரலில் தைரியத்தை வரவழைத்து.



"விபரீதத்தை விலைக்கு வாங்குவதுதான் சோமன் வழக்கம். உன்னை இத்தனை நாள் உயிரோடு வைத்ததே தவறு. அன்றே உன்னைக் கொன்றிருந்தால் இன்று இரவு அவசர அவசரமாய் ஓடி வந்திருக்க வேண்டாம்."

"என்னைக் கொன்றாலும் நீ தப்ப முடியாது." என்றாள் கோபத்தில் குரல் சிதற.

"முட்டாள் பெண்ணே... உன்னோடு சேர்ந்து அந்த ரகசியம் தெரிந்தவர்கள் ஏழு பேர் இந்த தமிழ் மண்ணில் இருக்கிறார்கள். நான்கு பேர் அந்த குற்றத்தை செய்தவர்கள். மூன்று பேர் அந்த ராஜ குற்றம் சுமத்த காத்திருப்பவர்கள். உன்னைக் கொன்று விட்டால் மீதி இரண்டு பேர் மதுரையில் இருக்கிறார்கள். இன்று இரவுக்குள் இறந்து விடுவார்கள்" என்றான் குறுவாளை மேலும் கீழும் ஆட்டியபடி.

"நீலமதி...?" பதற்றமாய் வந்தன வார்த்தைகள்.

"எங்கள் வளையத்துக்குள்."

"நக்கன் பூங்கா...?"

"நீலமதியை காட்டிக் கொடுத்து விட்டாள் நக்கன் பூங்கா. நீ நீலமதியை காணவில்லையென்று பொய் சொன்னாய். மதுரைக்கு கொண்டு போய் ஒளித்து வைத்தாய். எங்களை மிரட்டவும் செய்தாய். இன்று இரவு நான் தஞ்சையிலும் ரவிதாசன் மதுரையிலும் எழுதுகிறோம் முடிவுரை." என்றான் சோமன் நக்கன் காமியை குறுவாளால் குறி பார்த்தபடி.

அடுத்த இமை மூடு பொழுது -

சற்றும் எதிர் பார்க்காத தருணத்தில் - மஞ்சத்தின் அருகே அமர்ந்திருந்த விளக்கு மாடத்தில் கண் மூடிக் கிடந்த மாயா தேவி விளக்கை தூக்கி சோமன் மீது வீசினாள் நக்கன் காமி முழுப் பலத்தை பிரயோகித்து. மின்னல் வேகத்தில் சுழன்று இடம் மாறினான் சோமன். குறி தவறிய மாயா தேவி விளக்கு சுவரில் மோதி தரையில் விழுந்தது. அதற்குள் மஞ்சத்தில் இருந்து குதித்து - மேன் மாடத்து படிகளை நோக்கி நக்கன் காமி ஓடத் தலைப்பட்டாள். சோமன் சுழன்ற அதே வேகத்தில் வையிலிருந்த குறுவாளை வீசியிருந்தான் நக்கன் காமியின் கழுத்தை குறி வைத்து. குறி தப்பவில்லை.

நக்கன் காமியின் கழுத்தில் குத்தி நின்றது குறுவாள். குறுக்கே நின்ற தூணில் மோதி தரையில் விழுந்தாள்.

"ஆ" அலறிய அலறல் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

விழுந்தவள் எழுந்திருக்க முயன்று தோற்றுப் போனாள். சோமனை நோக்கி கை நீட்டினாள். எதோ சொல்ல முயன்று.... முயன்று... குறுவாள் விஷம் வேக வேகமாய் உயிர் இழுத்தது.

"காமி."

"...."

"மீண்டும் உன் இல்லம் வருவேன். சோழ காவல் படை வீரர்களுடன்."

"எதற்காக என்று கேட்கிறாயா...?"

"............"



'உன்னை கொன்றவன் யார் என்று கண்டு பிடித்து சோழ மாமன்னருக்கு தெரிவிக்க வேண்டாமா...?" பதில் எதிர் பார்க்காமல் மேன் மாடத்து படிகளில் இறங்கினான் சோழ தேசத்தின் பெருந்தரத்து அதிகாரி சோமன்.

'உண்மையை சொல்லி விட வேண்டும்.' இறந்து கொண்டிருந்த இதயம் துடித்தது.

'என்ன செய்வது' எழுந்திருக்க முயன்று மீண்டும் தோற்றாள்.

சில நிமிடங்கள் கரைவதற்குள் -

நக்கன் காமி நனைந்து போயிருந்தாள் வழிந்த இரத்தத்தில்.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் இறந்து போவேன். என் குரல் யாருக்கும் கேட்காது. கீழே ஆடி அசந்து தூங்கும் பெண்கள் விழிப்பதற்கு விடிந்து வெகு நேரமாகி விடும். நானும் இறந்து நீலமதியும் இறந்து போனால் அந்த உண்மை... அந்த உண்மை...' அவள் கண்களில் மினுக்கியது தரையில் கிடந்த ஓலை நறுக்கு.

நகர்ந்து, நகர்ந்து இரத்தக் கோடு இழுத்து ஓலையை நெருங்கினாள். சிரமப்பட்டு கையில் எடுத்தாள்.

'இனி நீ இறந்து விடு' ஓலை நறுக்கு கேலியாய் சிரிப்பது போலிருந்தது.

தூங்கா விளக்கின் ஒளியில் -

ஓலை நறுக்கிலிருந்த எழுத்துக்கள் குதித்தன.

'இனி நீ இறந்து விடு - சோபரரே.'

"சோபரரே" என்றாள் சாளரத்தை பார்த்துக் கொண்டே.

'என் மரணத்தை சோமன் திசை திருப்புவதற்குள் என் மரணம் மன்னருக்கு தெரிந்தாக வேண்டும்.' வலி பொறுத்து அவசரமாய் தரை தடவி தங்கக் காசுகளை அள்ளி சாளரத்தை குறி வைத்து வீசினாள் நக்கன் காமி.

மினுக்கும் தங்க காசுகள் சாளரத்து வழியே காற்றில் மிதந்து இருட்டில் பயணித்து வீதியில் போய் விழுந்தன.

மீண்டும் மீண்டும் அள்ளி அள்ளி வீசினாள். இருட்டில் - தங்கக் காசுகளை துரத்தின மின் மினிப்பூச்சிகள். கடைசி காசை துழாவும் போது இறந்து போயிருந்தாள்.

**இ**ருட்டைக் கிழித்துக் கொண்டு இருட்டுக்குள் இருட் டோடு கை கோத்து கொண்டிருந்த மாளிகையை நோக்கி ஓடிய நீலமதி - யாரோ ஒரு வாலிப வீரன் மீது மோதி தரையில் விழுந்தாள் மயங்கி.

'அடுத்து என்ன செய்வது' - ஒரு முடிவுக்கு வந்த வனாய் இடுப்பில் இருந்த குறுவாளை கையில் எடுத்தான். அந்த குறுவாள் இருட்டிலும் மினுக்கியது.

அந்த குறுவாளுக்கு சொந்தக்காரன் -

சோழ இளவரசன் அருண்மொழிவர்மன். குறுவாளை இடுப்பின் பின் பகுதியில் செருகினான் நிதானமாய். ஒரு முறை தரையைப் பார்த்தான்.

மண்ணில் விழுந்து கிடக்கும் மஞ்சள் நிலவாய் தெரிந்தாள் நீலமதி. வெட்டிப் போட்ட மல்லிகைக்



கொடியாய் துவண்டு கிடந்த எந்திழையை குழந்தையைப் போல் கையில் தூக்கிக் கொண்டு நடந்தான் இருட்டில் அமர்ந்திருந்த மாளிகையை நோக்கி.

சோழ இளவலின் முகம் எந்த வித உணர்ச்சியுமின்றி கிடந்தது. மயக்கம் சந்தித்ததால் மயங்கி கிடந்த மலர் விழியாளை மலர் போல பாவித்து மயக்கமின்றி தூக்கிக் கொண்டு நடந்தவன் இதயம் வேகமாயிருந்தது. எங்கோ தூரத்து நரி ஒன்று ஊளையிட்டது.

'நகரத்துக்குள் ஏது நரி...?' - இதயம் கேள்வி கேட்டது உடனடியாய்.

'நரி ஊளையிடுவதாய் குரல் காதில் விழுந்தது மனப் பிரமையா... பேயின் அழைப்பா...'

எங்கிருந்தோ சில்வண்டு ஒன்று விடாமல் கத்தியது. நடந்து கொண்டிருந்த சோழ இளவரசனின் இதயம் நகரத் தொடங்கியிருந்தது. குதித்து குதித்து இருட்டோடு இருட் டாய் நடந்ததால் இதயத்துக்குள் திருட்டுத்தனம் வந்திருந்தது. மழையில் நனைந்து கிடக்கும் மண்ணில் மிதிக்கும் போது ஏற்படும் அதிர்வும், மழைக் காற்று சுமந்து வரும் இரவு மலர்களின் நறுமணமும் ஒருவித மனமயக்கத்தை ஏற்படுத்தி யிருந்தது. அந்த பருவ மங்கையின் மேனி தன் வாலிப மேனியோடு ஒட்டிக் கிடந்ததால் அந்த வாலிப வீரனிடம் இத்தனை நேரம் எட்டிப் பார்க்காத காதல் உணர்வுகள் எங்கிருந்தோ ஓடி வந்து நரம்புகளில் குதியாட்டம் போட்டன. நீலமதி என்ற அழகுப் பெண்ணின் அழகு பிரதேசத்தில் அந்த வாலிபக் கரங்கள் அழுத்திக் கிடந்ததால் ஓடுகின்ற வாலிப இரத்தத்தில் கூட சூடு மிதக்கத் தொடங்கியது அந்த

குளிர் இரவிலும். கண்களோ மயங்காமல் கிடந்த இளமையின் வெகுமதிகளை தொட்டு தொட்டு மீண்டது. அந்த இருட்டிலும் உதட்டோரம் வியர்த்திருந்தான்.

'சே... என்ன புத்தி இது... ஆபத்திலிருக்கும் பெண் களுக்கு உதவும் தமிழ் மகன் புத்தியா இது.. இதுதான் தமிழர் பண்பாடா... மயங்கி கிடக்கிற பெண்ணை தவறான எண்ணத்துடன் பார்க்கலாமா.. அது முறையா...'

அடுத்த இமை மூடு பொழுது -

சிந்தனை அறுந்தது. இதயம் கல்லானது. இருட்டில் கிடந்த பாதையில் பதிந்தன கண்கள். கையில் கிடந்த இளம் பெண் மண் பொம்மையானாள்.

நடந்தான்... நடந்தான்...

எதிரில் வந்து நின்றது இருட்டு சுமந்த மாளிகை. வழிவிட மறுப்பது போல் மூடிக் கிடந்தது பெருங்கதவு. காலால் உதைத்தான். அந்த பெருங்கதவு அகலமாய் திறந்து கொண்டது.

கீழ்தளம் இருட்டாய் இருந்தது. நிலா முற்றமும் இருட்டுக்குள்...

யாரும் அந்த மாளிகையில் இருப்பதாகத் தெரிய வில்லை. மேன் மாடத்திலிருந்து ஒளிக் கீற்று நழுவி படிகளில் விழுந்து கிடந்தது.

'யாரோ இருக்கிறார்கள் மேன் மாடத்தில்.'

நீலமதியை தூக்கிக் கொண்டு மேன் மாடத்து படிகளில் ஏறத் தொடங்கினான்.



சுகமான சுமை இதுதானா வென்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான். உதடுகளை புன்னகை அசைத்தது.

மேன் மாடத்துக்கு வந்திருந்தான் நீலமதியுடன். அறை பெரியதாய் - சுத்தமில்லாமல் கிடந்தது.

அந்த அறை சுவருக்குள் ஒளிந்திருந்த சிங்கள மாயா தேவி விளக்கு. அந்த இடத்தை மயக்கும் மஞ்சளாக்கி யிருந்தது. அந்த அறையின் ஓரமாய் மஞ்சம் ஒன்று கிடந்தது. மஞ்சத்தில் நீலமாய் துகில் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது.

புத்தம் புதியதாய் கையில் வைத்திருந்த பூமாலையை தூக்கிக் கிடத்துவது போல நீலமதியை சற்றும் அசைக்காமல் மஞ்சத்தில் கிடத்தினான். நிமிர்ந்தான். நீல மஞ்சத்தில் மஞ்சள் தேவதையாய் மல்லாந்து கிடந்த நீலமதியின் முகம் பார்த்தான் இமைக்காமல்.

அந்தப் பார்வையில் காதல் இருந்தது. காரிகையின் கண்கள் மூடிக் கிடந்தன இமைகளால்.

'மூடிக் கிடந்த கண்களே இத்தனை அழகா... கண் திறந்தால் ஆள் பிடிக்கும் வலையாய் மாறிப் போய் விடுமா... நீலமதி... யார் வைத்தது இந்த பொருத்தமில்லாத பெயரை... தங்கமதி என்றல்லவா பெயர் வைத்திருக்க வேண்டும்..' பார்வை மூடிக் கிடந்த கண்களை விட்டு விட்டு...

யாரோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டது நிலா முற்றத்தில்.

○



# பத்தொன்பது

**யா**ரோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டது அருண்மொழி வர்மனுக்கு. அந்த அலறல் சத்தம் கீழே நிலா முற்றத்தில் இருந்து வந்தது.

'கீழே என்ன நடக்கிறது இந்த வீட்டில்... ஆள் இல்லாத வீட்டில் விளக்கு ஏற்றியது யார்... யார் அலறும் சத்தம் இது...' திரும்பி மஞ்சத்தை பார்த்தான். எதுவும் நடக்காதது போல் கண் மூடிக் கிடந்தாள் நீலமதி. ஓடிப் போய் சாளரம் திறந்து பார்த்தான். யாரும் இல்லை. இருட்டு மட்டுமே பயமுறுத்தியது. தொடர்ந்து யாரோ வீட்டுக்குள் ஓடும் சத்தம் கேட்டது.

'கீழே என்ன நடக்கிறது என்று பார்த்து விட வேண்டியதுதான்' மீண்டும் தயக்கத்துடன் திரும்பி மஞ்சத்தை உற்றுப் பார்த்தான்.

நீலமதியோ மஞ்சள் தேவதையாய் மல்லாந்திருந்தாள் தூங்குவது போல. தயக்கத்தை உதறி விட்டு மேன் மாடத்து படிகளில் பாய்ந்தான். படிகளில் தட தடத்து அதி வேகமாய் இறங்கியவனை இழுத்து நிறுத்தியது உள் உணர்வு.

'யாராவது காத்திருந்து தாக்கி விட்டால்' எச்சரிக்கை கொடி ஏற்றியிருந்தது மூளை. இடுப்பிலிருந்த குறுவாள் கைக்கு வந்திருந்தது.



ஒவ்வொரு படியாய் நிதானமாய் இறங்கத் தொடங்கினான். கையில் இருந்த குறுவாள் காத்திருந்தது எதிரியை எதிர் நோக்கி.

கால்கள் கடைசி படியைத் தொட்டதும் நின்றான். கண்கள் கடைசி படியிலிருந்து நான்கு திசைக்கும் ஓடியது யாரையோ தேடி. யாரும் கண்களுக்குத் தெரியவில்லை. காதுகள் தேடியது ஒலிகளின் கூட்டத்தை. காற்று வீசி ஒலி மட்டுமே காதுகளைத் தொட்டது. படியிலிருந்து நழுவி இறங்கினான் ஆபத்தை எதிர்பார்த்து.

நிலா முற்றமோ வெறுமையாய் கிடந்தது. கவனம் சிதறாமல் நடந்து நிலா முற்றத்துக்கு வந்திருந்தான்.

'எங்கே போனாள் அந்தப் பெண்.?'

வீடோ இருளுக்குள் மூழ்கி போய் கிடந்தது.

அறை அறையாய்... கால் தொட்டு, கால் தொட்டு... தேடினான்.

யாரும் இல்லை. யாரும் இல்லை.

வீட்டை துறந்து வெளியே ஓடி வந்தான்.

வானம் தூறிக் கொண்டிருந்தது.

இருட்டு சுமந்த மரங்கள் தலை அசைத்துக் கொண்டிருந்தன காற்றுக்கு.

''அலறியது பெண்ணா... பேயா...'

அந்த வளாகம் முழுவதும் கண்களை ஓடவிட்டான்.

ஆட்கள் வந்து போனதற்கு எந்தவித அறிகுறியும் இல்லை. மீண்டும் குறுவாளை இடுப்பில் செருகினான்.

எங்கோ தொலை தூரத்து இருட்டில் தான் மட்டும் தன்னந் தனியனாய்... இதயத்துக்குள் வராத பயம் வந்திருந்தது.

முகத்தில் தெறித்திருந்த மழை நீர் துளிகளை துடைத்து விட்டு வீட்டை நோக்கி ஓடினான் எதற்கோ பயந்தது போல்.

அடுத்த சில இமை மூடு பொழுதுகளில் -

மேன் மாடத்து படிகளை தொட்டிருந்தான். படிகளில் விழுந்து கிடந்த மஞ்சள் ஒளி தொலைந்து போயிருந்தது. படிகளைக் கடந்து மேன் மாடத்துக்கு வந்திருந்தான் மூச்சிறைக்க. மேன் மாடத்தை யாரோ இருட்டுக்குள் தள்ளி யிருந்தார்கள். சிங்கள மாயா தேவி விளக்கின் உயிர் பறிக்கப் பட்டிருந்தது. வெளிச்சத்தை உருவி விழுங்கியிருந்தது இருட்டு.

சில விநாடிகள் நின்று இருட்டுக்கு கண்களை பழக்கப் படுத்தியிருந்தான். இருட்டோவியமாய் மஞ்சம் தெரிந்தது. மீண்டும் வலது கைக்கு வந்திருந்தது குறுவாள்.

இருட்டை கண்களால் தடவி தடவி கால்களால் நகர்ந்து மஞ்சம் தொட்டான். மஞ்சத்தில் நீலமதியைக் காணவில்லை.

**ந**திமல்ரா உதடுகளுக்கு புன்னகை வந்திருந்தது.

"சோமனும் எமன்தானே...?" என்றாள் ரவிதாசனைப் பார்த்து கண் சிமிட்டி.

"எமன்தான். உயிர் எடுக்கிறவன் எமன்தானே...?" என்றான் ரவிதாசன் பதில் சொல்வது போல்.

"விடிய விடிய பேசிக் கொண்டிருந்தால் நிலவு தொலைந்து போகும்" என்றான் சிங்கள முக வீரன் இடையில் புகுந்து.



"தமிழ் மண்ணில் மிதித்ததும் விமுத்ரேவுக்கு கவிதையாய் வருகிறதே பேச்சு. ஆறு பேருக்கும் ஆறு வேலை இருக்கிறது அதுதானே..." கேள்வி வந்தது நதிமல்ராவிடமிருந்து.

"ஆம்" பதில் சொல்லி விட்டு தலையையும் ஆட்டி வைத்தான் விமுத்ரே.

"ம்... நீங்கள் ஆறு பேரும் போகலாம். விடிவதற்குள் மதுரையை விட்டு தொலை தூரம் போய் விடுவது நல்லதுதான். நீங்கள் போகப் போகிற இடத்தில் உங்கள் உதவிக்கு பாண்டிய ஆபத்துதவிகள் இருப்பார்கள். மீண்டும் சந்திக்கலாம்." என்றாள் பேச்சை முடித்துக் கொள்வது போல்.

ஆறு பேரும் எழுந்து கொண்டார்கள் அடுத்த இமை மூடு பொழுதே.

"வருகிறோம்" ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு வாசலை நோக்கி நடந்தார்கள்.

"ஒரு நிமிடம்" என்றாள் நதிமல்ரா.

ஆறு பேரும் அந்த இடத்திலேயே அசையாமல் நின்றார்கள் பொம்மைகளாய்.

"பழையாறைக்கு போகிறவர் கவனமாய் இருக்க வேண்டும். வல்லவரையர் வந்தியத் தேவன் எந்த நிமிடமும் ஆபத்தை கொண்டு வரலாம். அவனும் எமன்தான்" என்றாள் நதிமல்ரா எச்சரிக்கும் குரலில்.

"உன்னோடு வந்திருக்கும் எங்கள் ஆறு பேரைக் குறித்தும் உன்னை விட உன் தந்தைக்குத்தான் அதிகம்

தெரியும். எத்தனையோ போர்க் களங்களில் தமிழனையும் எம்மையும் ஒன்றாய் சந்தித்திருக்கிறோம் நீதான் கவனமாய் இருக்க வேண்டும். நீ சின்னப் பெண்." என்றான் சிங்களமுக வீரன் விமுத்ரே.

"நதிமல்ரா சின்னப் பெண்ணா..?" கேள்வி கேட்டான் ரவிதாசன்.

"எங்களுக்கு நதிமல்ரா குழந்தைதான்" என்றான் விமுத்ரே பாசம் வழிய.

"நதிமல்ரா பெயரை உச்சரிக்கவே சோழன் பயப்படுவான் இன்னும் பத்து நாட்களுக்குள், ஆறு பேரும் ஆறு நாட்களுக்குள் ஓலை அனுப்புங்கள் சோமனுக்கு. அமாவாசை சோழ மண்ணுக்கு அமாவாசை ஆகட்டும்" என்றான் ரவிதாசன் கண்களில் கனவு மிதக்க.

நதிமல்ரா எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தாள். கண்களில் கோபம் மிதந்தது.

"வருகிறோம் நதிமல்ரா" ஆறு குரல்களும் ஒரே குரலாய் ஒலித்தது.

"ம்" என்றாள் குரலில் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல்.

ஆறு பேரும் அவசரமாய் அந்த அறையை விட்டு வெளியேறினார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் -

அந்த மாளிகைக்கு வெளியே பன்னிரெண்டு கால்கள் ஓடத் தொடங்கின.



குதிரைகளின் குளம்பொலி கரைந்ததும் - ரவிதாசன் முகம் நோக்கினாள் நதிமல்ரா.

"ரவிதாசன்..."

"ம்... சொல்லுங்கள் நதிமல்ரா."

"சோமன் மட்டும் தஞ்சையில் இருப்பது நல்லதல்ல."

"ஏன்..."

"காமியின் மரணம்."

"கவலைப்பட வேண்டாம்."

"மூன்று நாட்களுக்குள் முடிவு எடுத்தாக வேண்டும்."

"முடிந்து விடும்."

"இன்று இரவுக்குள் ரவிதாசனை மீண்டும் ஒருமுறை சந்திக்கிறேன். அதற்குள் நீலமதி இந்த மாளிகையில் இருக்க வேண்டும்." குரலில் கட்டளையின் தொனி இருந்தது.

"நீல நிலா உங்களை தேடி வரும்."

"நல்லது."

"எங்கேயோ போக வேண்டும் என்றீர்களே..."

"வைகை நதியின் ஓட்டத்தோடு ஓட்டமாய் சிலகல் தொலைவு..."

"நதியோடு கை கோத்து நதியின் ஓட்டமா..."

"கவிதை... கவிதை..."

"நன்றி... நன்றி..."

"ரவிதாசன்..."

"ம்..." "உங்கள் குதிரை..."

"அது கழுதை..."

"அந்தக் கழுதையை கொஞ்சம் இரவல் தர வேண்டுமே..."

"உங்கள் குதிரை..."

"கழுதை எங்கோ ஓடிப் போய் விட்டது."

"என் குதிரை சில நேரங்களில் குரங்காகவும், பல நேரங்களில் கழுதையாகவும், எப்பொழுதாவது எருமையாகவும்..."

"குதிரையைத் தரப் போகிறீர்களா இல்லையா..." பாம்பாய் சீறியது வார்த்தைகள்.

"குதிரை கொஞ்சம் சண்டித்தனம்..."

"செய்யட்டுமே..."

"நதியின் விருப்பம், கரைகள் என்ன சொல்லும்."

"கவிஞரே... வருகிறேன்" உற்சாகமாய் நடந்தாள் குதிரையை கட்டியிருந்த மரம் நோக்கி. கடமை அழைக்க வேறு திசையில் நடந்தான் ரவிதாசன்.

சில நிமிடங்களில் -

இருட்டாய் நின்ற கரும்புரவியின் முதுகில் ஏறி அமர்ந்திருந்தாள். அந்த ஆண் புரவி தன் முதுகில் ஒரு பெண் ஏறி அமர்ந்திருப்பதை சற்றும் விரும்பவில்லை போலும். தரையை காலால் உதைத்தது கோபத்தில்.

"ம்... போ" என்றாள் கழுத்தில் தட்டி.



அடுத்த இமை மூடு பொழுதே ஓடத் தொடங்கியது - கால் முளைத்த மின்னலாய்.

நதிமல்ராவுக்கு உற்சாகம் வந்திருந்தது.

"இன்னும்" என்றாள் இன்பமாய் கால் உதைத்து.

இன்னும் குதிரையின் கோபத்தை அதிகப்படுத்தியிருந்தது -

நதிமல்ராவின் குதியாட்டம்.

வானத்து நிலவை பிடிக்க பயணிக்கும் தங்க குதிரையாய் பறக்கத் தொடங்கியது ரவிதாசனின் பொல்லாக் குதிரை. வாழ்வில் பயத்தை தொட்டும் பார்த்திடாத நதிமல்ரா முதல் முதலாய் பயந்தாள்.

பயம் தந்த பயத்தில் அலறவும் எத்தனித்தாள்.

அடுத்த விநாடி -

குதிரை துள்ளிக் குதித்து, சுழன்று எதிர் திசையில் - இன்னும் வேகமாய் ஓட...

"ஆ" அலறினாள் குரல் நடுங்க.

நதிமல்ராவின் அலறல் காற்றில் கரைந்து போயிற்று. எந்த நேரமும் குதிரையிலிருந்து விழுந்து விடும் அபாயம் இருந்தது.

ஓடுகிற ஓட்டத்தில் -

குதிரையிலிருந்து விழுந்தால் உயிர் மிஞ்சாது. அந்த குதிரையோ காற்றையும் மிஞ்சும் வேகத்தில் ஓடத் தொடங்கியது.

○



# இருபது

அந்தக் குதிரை யார் மீதோ கோபத்தில் இருந்தது. அந்தக் கோபம் கண் மூடித்தனமான வேகத்தை கொடுத்திருந்தது. எங்கே ஓடுகிறோம் எதற்காக ஓடுகிறோம் என்ற நோக்கம் அந்த ஓட்டத்தில் இல்லை. தன் முதுகில் அமர்ந்திருக்கும் ஆரணங்கை மண்ணில் தள்ளிவிட வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே அந்த ஓட்டத்தில் தெரிந்தது. அந்தக் குதிரை இருட்டோடு இருட்டாய் ஓடிக் கொண்டிருந்தது கரும் பிசாசாய். நல்ல வேளை யாரும் குதிரையின் ஓட்டப் பாதையில் எதிர்படவில்லை. அந்த வேகத்துக்கு அந்த இருட்டிலும் யார் எதிர் வந்திருந்தாலும் குதிரை மீது மோதி எலும்பு உடையும் அபாயம் அதிகம். அந்த வேக ஓட்டத்துக்கு எதோ காரணங்கள் இருந்திருக் கலாம். ஒன்று தன் பசி மறந்திருந்த ரவிதாசன் குதிரையின் பசியையும் மறந்து போயிருந்தான். இரண்டு ஆண் மகனுடன் நெருங்கி பழகி வந்த அந்த அரேபிய ஆண் குதிரைக்கு தன் முதுகில் பெண் பிள்ளை ஒருத்தி ஏறி அமர்ந்தது எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது. மூன்று அந்த பெண் பிள்ளை போ என்று அதட்டியதுடன் கழுத்தில்



தட்டியது. நான்கு இது போதாது என்று உற்சாகத்தில் குதிரையின் முதுகில் குதியாட்டம் போட்டு அதன் வயிற்றில் காலால் உதைத்தது. இந்த நான்கும் அந்த கரும் புரவியை கோபத்தின் உச்சத்துக்கு இழுத்துச் சென்றிருந்தது. கோபம் தந்த போதையில் தாறுமாறாய் ஓடத் தொடங்கியது அந்த கரும் புரவி.

குதிரையின் முதுகில் அமர்ந்திருந்த பருவ மங்கை நதிமல்ராவோ பயத்தில் நடுங்கிப் போனாள். குதிரையின் ஓட்டம் திசை மாறிப் போக பயத்தில் அலறவும் செய்தாள். இதயமும் வேகமாய் ஓடியது குதிரைக்கு போட்டியாய். நதிமல்ராவில் அலறல் காற்றில் தொலைந்து போயிருந்தது. எந்த நிமிடத்தின் எந்த விநாடியிலாவது நதிமல்ராவை குதிரை தரையில் உதிர்த்து விடும் அபாயம் நிகழலாம். அந்த நிமிடமே முகம் சிதைந்து.... நதிமல்ராவில் உடல் நடுங்கியது அச்சத்தில்.

அந்தக் குதிரையோ காற்றைக் கிழித்தது. வானமோ மின்னல் வெட்டி இடி இடித்து பயமுறுத்திற்று. வாழ்க்கையில் எதற்கும் அஞ்சாத நதிமல்ராவின் இதயத்தை மழை மேகம் சுமந்த வானமும் கட்டுக் கடங்காத குதிரையும் நடுங்க வைத்தது பருவக் காற்று அந்த பருவ மங்கையின் பருவ மேனியை மூடிக் கிடந்த மேலாடையை இழுத்துச் சென்றது காமமாய்.

அடுத்த இமை மூடு பொழுது -

அந்த பொல்லாத குதிரை சுழன்று குதித்தது. தூக்கி வீசப்பட்டாள் நதிமல்ரா.

"ஆ" என்று அலறினாள் மீண்டும்.

காற்றும் அச்சப்பட்டது.

நதிமல்ரா தரையில் மோதும் முன் - குறுக்கே வந்தது இரண்டு வலுவான கரங்கள்.

குதிரையிலிருந்து விழுந்த நதிமல்ராவை பூந்துவாலை யாய் ஏந்திக் கொண்டன அந்த இரண்டு கரங்களும்.

அந்த ஆண்மை மிகுந்த கரங்களுக்குச் சொந்தக்காரன் - சோழ இளவல் அருண்மொழிவர்மன்.

நீலமதி ஓடிக் கொண்டிருந்தாள் மீண்டும். உயிர் பெற்ற சிலை ஒன்று அந்த மழை இரவில் ஓடுவது போலிருந்தது. நீலமதிக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்தாள் அவளை பெற்ற தாய். இருவரும் வேக வேகமாய் அந்த வீதியைக் கடந்து குறுக்கே ஓடிய தெருவில் ஓட ஆரம்பித்தனர்.

'பின்னால் யாராவது துரத்தி வருகிறார்களா..?' திரும்பிப் பார்த்தன நான்கு கண்களும்.

'யாரும் துரத்தி வரவில்லை' இருந்தும் பயம் விலகாதவர்களாய் ஓடிக் கொண்டேயிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் ஓட்டம் முடிவுக்கு வந்திருந்தது. ஒரு பெரிய மாளிகையின் பின்புற வாசலில் போய் நின்று கொண்டி ருந்தனர்.

"தட்... தட்... தட்" கதவை பதற்றமாய் தட்டினாள் நீலமதியின் தாய். எந்தவித பதிலும் இல்லை. இருவர் முகமும் அவசரமாய் வியர்த்து போயிருந்தது பயத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர் நடுக்கத்துடன்.



மீண்டும் கதவை தட்டினர் வேகமாய்.

"தட்... தட்..." கதவு அகலமாய் திறந்து கொண்டது.

வாசலில் -

நின்று கொண்டிருந்தாள் நக்கன் சுந்தரி.

இருவரும் உள்ளே நுழைந்தனர் அவசரமாய். கதவு பூட்டிக் கொண்டது அவசரமில்லாமல்.

"ரகசியத்தை குந்தவை பிராட்டியாரிடம் சொல்லி விட்டீர்களா...?" பதற்றமாய் வந்தது கேள்வி நக்கன் சுந்தரி யிடமிருந்து.

"நீ மாளிகைகளின் எண்களைச் சொல்லி எண் விளையாட்டு விளையாடுகிறாய். எங்களுக்கு அதுவே உயிர் விளையாட்டு. இளவரசியை பார்க்க விடாமல் காவல் நிற்கிறது சோழ காவல் படை. வீதியில் துரத்துகிறது சோழர் களின் துரோகப் படை. உயிர் பறிக்க துரத்துகிறது பாண்டிய வீரர்களின் கரங்கள். ஓடிக் கொண்டேயிருக்கிறோம். தண்ணீர் தலைக்கு மேல் போய் விட்டது. எந்த நேரமும் மரணம் தொடலாம். நாங்கள் மதுரையில் இருக்கும் ரகசியம் எப்படியோ அந்த துரோகிக்கு தெரிந்து விட்டது. அல்லங் காடியில் இருந்து திரும்பும் போது அந்த துரோகியின் கண்களில் சிக்கி விட்டோம். அதிர்ஷ்ட வசமாய் சோழ வீரன் ஒருவனால் காப்பாற்றப் பட்டோம். அந்த வீரனிடம் மரியாதை நிமித்தம் ஒரு வார்த்தையில் நன்றிகூட சொல்லாமல் அந்த இடத்தை விட்டு ஓடி வந்து விட்டோம்." என்றாள் நீலமதியின் தாய் கண்களில் கவலை மிதக்க.

"எந்த புற்றில் எந்த பாம்போ... பயத்தில் கயிறு கூட விஷம் சுமந்த பாம்பாகத்தான் தெரிகிறது கண்களுக்கு." வார்த்தைகள் தடுமாறியது.

"உயிரை காப்பாற்றிய வீரனுக்கு நன்றி என்ற ஒரு வார்த்தை கூட சொல்லாமல் ஓடி வந்ததுதான் தமிழர் பண்பாடா.." யாரிடமோ கேள்வி கேட்பது போல் பேசினாள் நீலமதி. கண்களில் கனவு மிதந்தது.

"என்ன நடந்தது..?" வரிசை பிறழாமல் அந்த இரவில் நடந்ததைச் சொன்னாள்.

"யார் மீது மோதினேன்... அந்த மாளிகையின் மேன் மாடத்து மஞ்சத்துக்கு யார் என்னை தூக்கிப் போனது... எதுவுமே தெரியவில்லை. கனவு போல் நடந்து முடிந்து விட்டது. அம்மா என்னை தேடி வந்த போது யாரும் என் அருகில் இல்லை. அம்மாவோடு இங்கு வந்து விட்டேன்."

"உன் அம்மாவை நான்தான் அங்கு அனுப்பி வைத்தேன். ம்... இங்கே நின்று பேசிக் கொண்டிருக்க வேண்டாம். வீதியில் காவல் பணிக்காய் நடந்து செல்லும் சோழ காவல் வீரர்கள் காதில் நம் பேச்சு விழக் கூடும். மாளிகையின் உள் பகுதிக்குச் சென்று விடுவோம்." என்றாள் நக்கன் சுந்தரி அவசரப்படுத்தும் குரலில். அந்த மாளிகையின் வரிசையாய் அமர்ந்திருந்த அறைகளைக் கடந்து பெரியதொரு கூடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள் மூவரும். அங்கே அதிர்ச்சி காத்திருந்தது.

**த**ஞ்சை நகரத்தின் - தெற்கு தளிச் சேரி வீதியில் - வடசிறகில் - நக்கன் காமி இறந்து கிடந்த பதினேழாவது எண் இல்லத்துக்கு எதிரில் அமர்ந்திருந்த மாளிகையின் மேன் மாடத்து சாளரத்தில் உறக்கம் வராமல் இரண்டு கரிய பெரிய கண்கள் விழித்துக் கிடந்தன பதியிலார் சோகம் நினைத்து. விழித்துக் கிடந்த கண்களில் வியப்பைத் தடவியது வானம். இமைகளை இரு முறை இமைத்து பார்த்தன அந்த விழிகள்.



'கண்கள் சந்தித்துக் கொண்டிருப்பது பொய்யில்லை.'

கறுப்பு வானத்தில் மினுக்கும் மஞ்சள் பூச்சியாய் பயணித்து மண் தொட்டது தங்கத் துளிகள். பார்த்த விழிகள் வியப்பால் விரிந்தன. தொடர்ந்து தங்கத் துளிகள் வானத்தில் மிதப்பதும்... தரை தொடுவதும்...

'எங்கேயிருந்து வருகிறது தங்கத் துளிகள்..?' இன்னும் வியப்பு அதிகரித்திருந்தது அந்த கண்களுக்கு.

அந்த கண்களுக்கு சொந்தக்காரி - நக்கன் குப்பை.

எதிர் வீட்டு சாளரத்திலிருந்து மிதந்து வரும் தங்கத் துளிகளை கண்டு கொண்டது கண்கள்.

'நக்கன் காமி வீட்டிலிருந்து எப்படி தங்கத் துளிகள்...' வியப்பு நக்கன் குப்பையின் கழுத்தை இறுக்கியது.

கறுப்பு வானத்தில் மிதந்த தங்கத் துளிகளை என்னவோ ஏதோ என்று துரத்தி சென்று ஏமாந்தன மின் மினிப்பூச்சிகள்.

சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்த நக்கன் குப்பை ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். 'வீதிக்கு போய் தரையில் விழும் தங்கத் துளிகளை பார்த்து விடுவது' என்று அவசரமாய் மேன் மாடத்து படிகளில் தடதடத்து நிலா முற்றம் வந்தாள். சிரமப்பட்டு கதவு திறந்து வீதிக்கு ஓடினாள்.

'தங்கம்... தங்கம்' என்று இதயம் குதித்தது.

வீதியின் இரண்டு பக்கமும் பார்த்தாள். அமைதியின் பிடியில் சிக்கிக் கிடந்தது.

நக்கன் காமி வீட்டை ஏறிட்டுப் பார்த்தாள். எதுவும் எனக்கு தெரியாது என்பது போல் அமைதியாய் அமர்ந்திருந்தது.

'யார் தங்கக் காசை அள்ளி வீதியில் எறிந்திருப்பார்கள்... யாராயிருந்தால் நமக்கென்ன...'

தங்கக் காசுகள் வா வா என்றது நக்கன் குப்பையை.

வீதியில் சிதறிக் கிடந்த தங்கக் காசுகளை பொறுக்கத் தொடங்கினாள். தங்கக் காசுகள் மினுக்கியது வானம் வீசிய மின்னலில். சோழ காசில் தங்கப் புலி உறுமியது.

நக்கன் குப்பை பயந்து போனாள். பரமன் மழபாடி சவுக்கு கண்முன் வந்தது. பயத்தில் வியர்த்துப் போனாள் கையிலிருந்த காசை வீதியில் எறிந்தாள். நக்கன் காமி வீட்டை நோக்கி ஓடினாள் குப்பை. வாசலில் போய் நின்றாள் மூச்சிறைக்க.

"காமி" அழைத்தாள் உரத்த குரலில். பதில் இல்லை.

"காமி" மீண்டும் அழைத்தாள் பரிதாபமாய்.

"காமி" இம்முறை விழித்துக் கொண்டது அந்த தளிச் சேரி வீடு.

நிரந்தர உறக்கத்துடன் சென்று விட்ட நக்கன் காமி மட்டும் விழிக்கவில்லை. அந்த வீட்டின் கதவு திறந்து கொண்டது.

○



# இருபத்தொன்று

ஐப்பசி மாதத்து கடைசி இரவு கரைந்து கொண்டிருந்தது வேகமாய். வடகிழக்கு பருவக் காற்று ஈரத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தது மண்ணில். மழையில் நனைந்து போன இரவு மலர்கள் நறுமணத்தை தொலைத்து விட்டு மண்ணில் விழுந்து கிடந்தன. மழையில் நனைந்து போயிருந்த அரண்மனை மாளிகைகள் விளக்கு கண்களை மூடிக் கிடந்தன உற்சாகத்தில். கூட்டமாய் கை கோத்துக் கிடந்த மாளிகைகளை விட்டு விட்டு சற்று ஒதுங்கியிருந்த அந்த மாளிகையில் - ஒரே ஒரு மேன் மாடத்து அறையில் - ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது உறக்கம் வராதது போல். சோழப் பெரும்படையின் பிரதான தளபதிகளுள்- ஒருவரான பரமன் மழபாடியும் அந்த அறையில் விழித்திருந்தார் உறக்கத்தை விரட்டியடித்து விட்டு ,யாருக்கோ காத்திருந்தன அவர் விழிகள் அடுத்த இமை மூடு பொழுது காதுகளுக்கு செய்தி வந்திருந்தது.

ஒற்றைக் குதிரையின் குளம்பொலி கேட்டது.

சாளரம் திறந்து பார்த்தார் அவசரமாய்.

மரங்களுக்கிடையில் ஒரு வெள்ளைக் குதிரை ஓடி வருவது தெரிந்தது. அதன் முதுகில் யாரோ அமர்ந்திருந் தார்கள்.

அந்த மாளிகையை நெருங்கியதும் குதிரை ஓட்டத்தை நிறுத்தியிருந்தது. குதிரையிலிருந்தவன் குதித்து இறங்கினான்.

மழை வானம் இடி இடித்து மின்னல் வெட்டியது. அந்த மின்னல் வெளிச்சத்தில் குதிரையிலிருந்து இறங்கியவன் முகம் தெரிந்தது. அவன் - அழகன்.

தஞ்சை கோட்டை காவல் படை தலைவன் அழகன். மாளிகை வாசலை நோக்கி நடந்தவனை இழுத்து நிறுத்தியது பரமன் மழைபாடியின் குரல். "அழகன்" குரல் வந்த திசையில் தலை தூக்கிப் பார்த்தான்.

சாளரத்தில் தளபதியின் உருவம் தெரிந்தது.

'மேலே வா.' காற்றில் அசைந்து அழைத்தது பரமன் மழபாடியின் கரம். மாளிகையின் பக்க வாட்டில் அரை வட்டமாய் வளைந்து சென்ற மேன் மாடத்து படிகளில் அவசரமாய் ஏறி, சோழ சேனாதிபதி முன் போய் வணங்கி நின்றான்.

"அவசரமாய்..."

"அவசரம்தான்."

"என்ன அவசரம்...?"

"ஒரு இடத்துக்கு போக வேண்டியதிருக்கிறது."

"வெளியே மழை..."



"மழைக்கு நம் அவசரம் தெரியுமா..."

"ராத்திரிதான் போக வேண்டுமா...?"

"ராத்தி போக வேண்டிய இடம்தான்."

"போக வேண்டிய இடத்தை மகா சேனாதிபதியின் வாய் விட்டுச் சொன்னால் நலமாயிருக்கும். எந்த இடம்... அவசரம் என்றீர்களே..."

"தெற்கு தளிச்சேரி."

"என்னது... தளிச்சேரிக்கா...?" அதிர்ச்சியில் வாய் பிளந்தான் கோட்டைக் காவல் படை தலைவன்.

"தளிச்சேரிதான். தெற்கு தளிச் சேரி, வடசிறகு தேவரடியார் வீடு."

"தேவரடியார் வீட்டுக்கா ... தாங்களா..."

"நாம் இருவரும்" என்றார் பரமன் மழபாடி.

மோகினிப் பேய் அறைந்தது போல் அசைவற்று நின்றான் அழகன்.

"ம்... போகலாம்" மறு வார்த்தை எதிர் பார்க்காமல் மேன் மாடத்து படிகளில் இறங்கத் தொடங்கினார் தமிழ் மண்ணில் தலை சிறந்த வீரர்களில் ஒருவரான பரமன் மழபாடி.

வியப்பு தடவிய விழிகளுடன் பின் தொடர்ந்தான் அழகன்.

இருட்டில் காத்து நின்றன குதிரைகள்.

அடுத்த சில இமை மூடு பொழுதுகளில் -

இருவரையும் சுமந்து கொண்டு ஓட ஆரம்பித்தன அந்த அரேபியக் குதிரைகள்.

"அழகன்."

"சொல்லுங்கள் சேனாதிபதியாரே..."

"எந்த தேவரடியார் வீட்டுக்கு என்று நீ கேட்க வில்லையே..?"

"அதையும் நான் கேட்க வேண்டுமா..."

"நீதான் கேட்க வேண்டும்"

"கேட்டு விட்டேன்"

"நக்கன் காமி வீட்டுக்கு"

நக்கன் காமியா...?" மீண்டும் அதிர்ச்சியில் வாய் பிளந்தான் கோட்டை காவல் தலைவன்.

"அவளை உனக்குத் தெரியாதாக்கும். உன்னை தேடி தளுக்கி குலுக்கி நடந்து வருவாளே... அவளுக்கு தலைக் கோலி பட்டம் வாங்கி கொடுத்திட..."

"யார்... யார் சொன்னது உங்களுக்கு...?" பதற்றமாய் வந்தது கேள்வி.

"ஒற்றர் படை தலைவன் கம்பன் மணியன்"

"செய்தி மன்னர் காதுவரை சென்று விட்டதா..?" ஐப்பசி மாதத்துக் குளிரில் காற்றும் குரலும் நடுங்கியது.

யாரோ குறுக்கே வந்தார்கள் தயக்கத்துடன்.



அவசரமாய் குதிரையை இழுத்து நிறுத்தினார் பரமன் மழபாடி.

குறுக்கே வந்த குதிரையிலிருந்து குதித்து இறங்கி னார்கள் சோழ காவல் வீரர்கள். அவர்களிடம் பயம் கலந்த மரியாதை இருந்தது.

"மன்னிக்க வேண்டும்" என்றான் வீரன் ஒருவன் தலை வணங்கி.

"மன்னிக்க எதுவுமில்லை. தளிச்சேரி வீதியில் கொலை நடந்து விட்டது என்பதை சொல்லத்தானே வந்தாய்..."

"ஆம்... ஆம்.."

"நக்கன் காமியை யாரோ கொலை செய்திருக்கிறார்கள்."

"ஆம்."

"வீதியெங்கும் தங்கக் காசு சிதறிக் கிடக்கிறது."

"ஆ... ஆமாம்." ஒற்றை வார்த்தையும் திணறியது.

"ம்... பின்னால் வா." அடுத்த விநாடி குதிரை ஓடத் தொடங்கியது மின்னலாய்.

தொடர்ந்து ஓடியது தஞ்சை கோட்டை காவல் படை தலைவனின் புரவி. ஆச்சர்யத்தில் ஆடிப் போயிருந்தான் அழகன். இரண்டு குதிரைகளுக்கு பின்னால் ஓடத் தொடங்கின இருபது குதிரைகள்.

நதிமல்ரா அமர்ந்திருந்த குதிரை மிரளவில்லை. மிரட்டியது. மிரட்டியதோடு நிறுத்திக் கொள்ளாமல் அந்த

சிங்கள பேரழகியை தூக்கி வீசவும் செய்தது. குதிரையி லிருந்து விழுந்த வனிதை, விழுந்த வேகத்தில் தரையில் மோதியிருந்தால் மண்டை உடைந்திருக்கும். இரத்தம் சிந்தி தமிழ் மண்ணில் இறந்து போகும் அவலமும் அந்த சின்ன பெண்ணுக்கு நேர்ந்திருக்கும். அவளை தரை மோதாமல் தாங்கிப் பிடித்தது இரண்டு வாலிப கரங்கள். அந்த வாலிபன் வேறு யாருமல்ல - சோழ இளவல் அருண்மொழி வர்மன். அந்த மழை இரவு விசித்திரமான அனுபவங்களை தந்து கொண்டிருந்தது மன்னன் மகனுக்கு. ஒரே இரவில் இரண்டு இளம் பெண்களை, அதுவும் கட்டழகு கன்னியரை தூக்கிச் சுமக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வசந்த வாய்ப்பு சாதாரண ஆண் மகனுக்கு - கிடைத்திருந்தால் காம எண்ணத்தில் துள்ளிக் குதித்திருப்பான். மன்னன் மகனின் மனமோ அலை பாயாமல் ஆழ்கடல் முத்தாய் கிடந்தது. நதிமல்ரா சோழ இளவரசனின் கரத்தில் விழுந்த சில விநாடிக்குள் அந்த நங்கையை சுமந்து ஓடி வந்த குதிரை காணாமல் போயிருந்தது இருட்டில்.

வானம் மழைத் துளிகளை தூவானமாய் சிதறிக் கொண்டிருந்தது. கரங்களின் ஊஞ்சலில் மல்லாந்து கிடந்த ஆரணங்கின் உடல் மீது. அதிர்ச்சியில் அதிர்ந்து கிடந்த நதிமல்ரா வானம் பார்த்த பூவாயிருந்தாள் அசைவின்றி. மழைத்துளி ஒன்று அந்த சேயிழையின் கீழ் உதட்டை தொட - இன்னொரு துளி உயிர் காற்று தந்த தொப்புள் தொட - மற்றொரு துளி மூடிக்கிடந்த கண் இமை தொட - மேனி நடுங்கியது ஒருமுறை.

இமைகள் படபடத்தது இரு முறை. தொடர்ந்து இதயம் படபடத்தது எதோ ஒரு வித பயத்தில்.



உதடுகள் பேசலாம் என்றது. இருந்தும் பேசாதிருந்தாள் அந்த பாவை. அவனுக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை.

எத்தனை நிமிடங்கள் அப்படியே அந்த இன்பச் சுமையை இறக்கி வைக்காமல் தூக்கிக் கொண்டு நின்றானோ அவனுக்கே தெரியாது. சுமையே பேச ஆரம்பித்தது பெண்மை விழித்துக் கொண்டதால்.

“கொஞ்சம் இறக்கி விடுகிறீர்களா...?”

”ம்...” என்றான் திடுக்கிடலுடன்.

அந்த திடுக்கிடலில் பேசாத பதுமை பேசியதால் ஏற்பட்ட அதிர்ச்சி தெரிந்தது. அடுத்த விநாடியே அவசரமாய் அவளை தரை இறக்கியிருந்தமான்.

நதிமல்ரா விலகிக் கிடந்த ஆடைகளை அவசரமாய் சரிசெய்து கொண்டாள்.

அடுத்த இமை மூடு பொழுது -

ஏதோ ஞாபகம் வந்தது போல் அவன் முகம் பார்த்தாள்.

“நன்றி.” என்றாள் சற்று வெட்கத்துடன்.

“ம்...”

“நீங்கள் சரியான நேரத்தில் வந்து தாங்கிப் பிடிக்கா திருந்தால் தரையில் விழுந்திருப்பேன். மண்டை உடைந் திருக்கும்.”

“ம்...”

“அந்த குதிரை பொல்லாத குதிரை.”

“ம்...”

“அந்தக் குதிரைக்கு என் மீது எதோ கோபம்.”

“ம்”

“வீரரே”

“ம்”

“உங்களுக்கு தமிழில் ‘ம்’ என்ற எழுத்தை தவிர வேறு எழுத்து எதுவும் தெரியாதா...?” குரல் கோபத்தில் நனைந்திருந்தது.

“தெரியுமே...” என்றான் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவன் போல்.

“பதில் பேச வேண்டியதுதானே...”

“பேசலாம். நீங்கள் யார்... இந்த இரவில் தனியாய் எங்கே போகிறீர்கள். அப்படி என்ன அவசரம்... நீங்கள் அலறும் போது வேறு மொழியில் சத்தமிட்டீர்களே அது ஏன்... நீங்கள் தமிழ் பெண் இல்லையா... நீங்கள் ஏறி வந்தது உங்கள் குதிரை இல்லையா... நீங்கள் குதிரை திருடுகிற பெண்ணா... நீங்கள் திருடி தானா...” வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தான் அருண்மொழி வர்மன் - காவோலையில் மழை பெய்தது போல.

“பேச சொன்னதற்கு இத்தனை பேச வேண்டுமா... இதை விட நீங்கள் பேசாமலே இருந்திருக்கலாம்” என்றாள் நதிமல்ரா பொய்யான சலிப்புடன்.

“பேச்சை மாற்ற வேண்டாம். நீங்கள் ஏறி வந்த குதிரை நிச்சயம் உங்களுக்கு சொந்தமானதல்ல. நீங்கள் குதிரை



திருடுகிற பெண்ணாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் திருடிதான். ஒரு நிமிடத்தில் கண்டுபிடித்துவிட்டேன். நீங்கள் திருடிதான்.” என்றான் அருண்மொழி வர்மன் அழுத்தம் திருத்தமாய்.

அதிர்ந்து போனாள் நதிமல்ரா.

“எப்படி... எப்படி சொல்கிறீர்கள்...?” வார்த்தைகள் தடுமாறியது.

“நீ திருடிதான்.” குறுவாள் நீண்டது நதிமல்ரா இதயத்தை குறி வைத்து.

○



# இருபத்து ரெண்டு

**தெ**ற்கு தளிச்சேரி வீதி திகைத்துப் போய் கிடந்தது உறக்கத்தை தொலைத்து விட்ட. வடகிழக்கு பருவக் காற்று தயங்கி தயங்கி வீசிக் கொண்டிருந்தது. தளிச் சேரி வீதியிலிருந்த வீடுகளில் விழித்துக் கொண்டன விளக்குகள். வீதிகளில் நான்கு பேர், ஐந்து பேராய் கூடி கூடி பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தளிச் சேரிப் பெண்கள் கண்களில் பயம் ஒட்டிக் கிடந்தது. பயத்தோடு ஏதோ ஒரு வித எதிர்பார்ப்பும் தெரிந்தது.

அந்த கண்கள் எதிர்பார்த்தபடியே அந்த வீதிக்குள் நுழைந்தன வீரர்களை சுமந்த குதிரைகள். மண்ணில் கிடந்த மழை நீர் சிதறியது. அடுத்த நிமிடமே வீதி பயந்து போய் நடுங்கியது.

ஓடிவந்த குதிரைகளில் முன்னால் வந்த அரேபியக் குதிரையின் முதுகில் அமர்ந்திருந்தார் பரமன் மழபாடி ராட்சஸனைப் போல். பின் தொடர்ந்த குதிரையின் முதுகில் தஞ்சை கோட்டைக் காவல் தலைவன் அழகன். வடசிறகின் பதினேழாவது வீட்டை நெருங்கியதும் பரமன் மழபாடியின் குதிரை ஓட்டத்தை நிறுத்தியது. குதிரையின் முதுகில் அமர்ந்திருந்த சோழ சேனாதிபதி குதித்து இறங்கினார் உடல் அதிர. தொடர்ந்து கோட்டைக் காவல் படை தலைவனும் குதிரையிலிருந்து குதித்திருந்தான். குதித்த வேகத்தில் அதிர்ச்சி அவனை தாக்கியிருந்தது. கண்கள் வியப்பில் படபடத்தன.



"எஜமான்... தங்கக் காசுகள்." அழகன் விரல் சுட்டிக் காட்டிய இடத்தில் - வீதியில் சிதறிக் கிடந்தன தங்கக் காசுகள். அந்த இருட்டிலும் மினுக்கியது கண் சிமிட்டி. வீதியில் நின்று கொண்டிருந்த பெண்கள் சற்று ஒதுங்கியே நின்றனர் தங்க பயத்துடன்.

"மாமன்னர் சுந்தரச் சோழர் ஆட்சியில் தேவரடியார் வீதியில் தங்கச் செடி இருந்ததாய் புலவர்கள் கவிதை எழுதப் போகிறார்கள்" என்று சொல்லி விட்டு தானே சிரித்துக் கொண்டார் பரமன் மழபாடி. மௌனமாய் பின் தொடர்ந் தான் அழகன்.

"அழகாதி அழகன்."

"எஜமான்..."

"நீதான் அடிக்கடி இங்கே வருவாயே... நக்கன் காமி வீட்டை காமி" கேள்வி கேட்டார் உதட்டோரம் வழிந்த மீசையை தடவிக் கொண்டே.

"இதோ... இந்த வீடுதான்." என்றான் அழகன் தயக்கமாய்.

அண்ணாந்து பார்த்தார் பரமன் மழபாடி.

அந்த வீட்டின் மேன் மாடம் மல்லிகைக் கொடி சுமந்திருந்தது. பெருமூச்சொன்று அவர் மார்பைத் தாலாட்டியது.

தயக்கத்துடன் வீட்டுக்குள் நுழைந்தார். பின் தொடர்ந்தான் அழகன். குறுக்கே நின்றனர் நிலா முற்றத்தில் இளம் பெண்கள்.

"நக்கன் காமி...?"

"மேன் மாடத்தில்." யாரோ ஒரு பெண் பதில் சொன்னாள் நடுக்கத்துடன்.

மேன் மாடத்துப் படிகளில் நிதானமாய் ஏறத் தொடங்கினார் பரமன் மழபாடி.

அழகன் கால்களில் தயக்கமும் நடுக்கமும் இருந்தது.

மேன் மாடத்தில் இடது கால் வைத்ததும் அதிர்ந்தார் சோழ சேனாதிபதி. தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கு போராடிக் கொண்டிருந்தது உயிருக்காய். அந்த வெளிச்சத்தில் உயிருக்காய் போராடி இறந்து போயிருந்த நக்கன் காமி தெரிந்தாள். திறந்திருந்த கண்கள் சாளரத்தை நோக்கிக் கொண்டிருந்தன. ஒரு கை மடங்கியும் ஒரு கை நீண்டும் கிடந்தன. நீண்டக் கிடந்த கையின் சுட்டு விரல் தொட்டுக் கொண்டிருந்தது தங்க நாணயம் ஒன்றை.

அந்த ஒற்றை நாணயம் விளக்கின் மஞ்சள் ஒளியில் கண் சிமிட்டி 'கொன்றது நான் தான்' என்று சிரிப்பது போலிருந்தது அழகனுக்கு.

நக்கன் காமி கழுத்தில் குத்தி நின்ற குறுவாள் அலட்சியமாய் பார்ப்பது போலிருந்தது பரமன் மழபாடிக்கு.



நக்கன் காமியின் கழுத்திலிருந்து இரத்தம் வழிந்து இரத்தத் திட்டாய் கிடந்தது. காமியின் திறந்திருந்த கண்கள் பயமுறுத்தின. கண்களில் அதிர்ச்சி உறைந்து போயிருந்தது. உதடுகள் திறந்து வெற்றிலை சுவைத்த பற்கள் தெரிந்தன கோரமாய்.

ஆடை விலகி 'வெட்கம்... வெட்கம்' என்றது.

காமி இளமையை தொலைத்து விட்டதைச் சொன்னது சரிந்து கிடந்த வயிறு. இறுக்கமில்லாத இடுப்புச் சதையோ பயமுறுத்தியது. தாறுமாறாய் பெருகியிருந்த மார்பகம் கச்சையை மீறி வழிந்து பரமன் மழபாடியை சங்கடப் படுத்தியது. கண்கள் ஈக்களுக்கு கூட இமைக்காமல் வானம் பார்த்தன.

பரமன் மழபாடியின் கண்கள் அந்த மேன் மாடத்து அறையை ஒரு முறை சுற்றி வந்தன எதையோ தேடுவது போல. அந்த மேன் மாடத்து அறை சிறியதாயிருந்தது தூண்களுடன். அந்த அறையின் ஓரமாய் கிடந்தது மஞ்சம் ஒன்று. மஞ்சத்தில் விரிக்கப்பட்டிருந்த மஞ்சள் துணியில் சிவப்பு இரத்தம் சிதறியிருந்தது பொட்டு பொட்டாய்...

"ஆ" அலறினான் அழகன் பயத்தில்.

காலடியில் கிடந்த மாயா விளக்கு காலில் இடறியதால் ஏற்பட்ட பயம். கவனம் சிதறி திரும்பிப் பார்த்தார் பரமன் மழபாடி.

மேன் மாடத்து படிகளில் நின்று கொண்டிருந்த இளம் பெண்கள் சிரித்தனர் நேரம் காலம் சூழ்நிலை மறந்து.

கோபத்தில் கண் சிவந்தார் சோழ சேனாதிபதி. சிரிப்பு தொலைந்து போயிருந்தது.

"முட்டாள்" ஒற்றை வார்த்தை அரைபட்டது பற்களுக் கிடையில்.

குனிந்து மாயா தேவி விளக்கை தொட்டவர் விரல்களில் தட்டுப் பட்டது அந்த ஓலை நறுக்கு. கையில் எடுத்தபடி நிமிர்ந்தார்.

"என்ன அது...?"

"பனை ஓலை துண்டு. பல் குத்த உதவும்."

"ஏதோ எழுத்து தெரிகிறதே."

"தலையெழுத்து."

"ஆம். நான்கு பேரின் தலை எழுத்து."

"நீங்கள் பேசுவது."

"படித்துப் பார். புரியலாம்" ஓலை நறுக்கை அழகன் கையில் திணித்தார்.

விளக்கின் மஞ்சள் ஒளியில் ஓலை நறுக்கை தூக்கிப் பிடித்தான். எழுத்துக்கள் எமனை சுமக்கும் எருமைகளாய் தெரிந்தன கண்களுக்கு.

"இனி நீ இறந்து விடு - சோபரரே" தொண்டைக்குள் வார்த்தைகள் சிக்கி தவித்தன.

"ம்... ஓலையை தின்று விடாதே" அழகன் கையிலிருந்த ஓலை நறுக்கை பிடுங்கி, இடுப்பில் பத்திரப் படுத்திக் கொண்டார் பரமன் மழபாடி.



"அழகன்."

"சொல்லுங்கள் எஜமான்" சற்று அதிகமாகவே பணிவு காட்டினான் கோட்டைக் காவல் படை தலைவன்.

"அழகன்... காமியின் கழுத்தில் குத்தியிருக்கும் குறுவாளை எடுத்து பத்திரப் படுத்தி வை. பின்னால் கைரேகை தேவையாயிருக்கும். அடுத்து நக்கன் காமியின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வை. அடுத்து இந்த வீட்டிலிருக்கும் தளிச் சேரிப் பெண்களை ஒருமுறை விசாரித்து விடு. வீதியில் கிடக்கும் தங்கக் காசுகளை சேகரித்து அரசு கஜானாவுக்கு அனுப்பி விடுவது நல்லது. திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து வந்து நக்கன் காமியின் சொத்துக்களை சிவன் கோயிலுக்கு எழுதி விடு... தளிச் சேரி காவல் பணி வீரர்களை நான் சந்திக்க வேண்டும்.." வரிசையாய் சொல்லி விட்டு அழகன் முகம் பார்த்தார்.

"இன்னும் ஒன்றே ஒன்று தான் சொல்ல வேண்டும். நக்கன் காமியை கொலை செய்தவன் பெயரைச் சொல்லுங்கள். அவனையும் தேடிப் பிடித்து பாதாளச் சிறையில் தள்ளி விட்டு வந்து விடுகிறேன்."

"கொலைகாரனே தேடி வருவான்" இறந்து கிடந்த நக்கன் காமியை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு மேன் மாடத்து படிகளில் இறங்கினார் பரமன் மழபாடி.

வாசலில் நின்று கொண்டிருந்தான் சோமன்.

நக்கன் சுந்தரி அவசரப் படுத்த அந்த மாளிகையில் வரிசையாய் அமர்ந்திருந்த அறைகளைக் கடந்து பெரிய தொரு கூடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள் நீலமதியும்,

அவள் அம்மாவும். அடுத்த விநாடியே அதிர்ந்து போனாள் நீலமதி.

தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கின் நேர் கீழ் நின்று கொண்டிருந்தான் ரவிதாசன். முகத்தில் இருட்டு வட்டமாய் விழுந்து கிடந்தது. அவன் கையிலிருந்த குறுவாள் விளக்கு வெளிச்சத்தில் மினுக்கியது. அருகில் மூன்று பாண்டிய வீரர்கள் நின்று கொண்டிருந்தனர் உறைவாளுடன்.

"யார் நீங்கள்?" பயத்தை மறைத்துக் கொண்டு கேள்வியை வீசினாள் நக்கன்சுந்தரி.

"இன்னும் சில நிமிடங்களில் இறந்து போகப் போகிற உனக்கு நாங்கள் யாரென்று கேட்டு என்ன ஆகப் போகிறது. இருந்தும் இறந்து போகப் போகிற உன்னுடைய கடைசி ஆசையாய் எடுத்துக் கொள்கிறேன். நீலமதி யார் கையில் சிக்கி விடக் கூடாது என்று நினைத்தாயோ அந்த எமன்." கட கடவென்று சிரித்தான்' ரவிதாசன் எமனை போட்டிக்கு அழைப்பது போல்.

"நீ..."

"ரவிதாசன்."

"ரவிதாசனா..." நக்கன் சுந்தரியின் குரல் நடுங்கியது.

"ரவிதாசன். சுந்தரச் சோழ தேவர் நம்பிக்கைக்கு பாத்திரமான ரவிதாசன். அருண்மொழி வர்மனின் அன்பிற் குரிய ரவிதாசன். குந்தவை பிராட்டியாரின் குருவாய் வலம் வருகிற ரவிதாசன். என்ன புரியவில்லையா நக்கன் சுந்தரி...?" மண் பொம்மையாய் உறைந்து போயிருந்தாள் நீலமதி.



"ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராசன், சோழ தேசத்து பெருந்தரத்து அதிகாரி. புலி வேஷத்தில் இருக்கும் மீன். இளம் புலி ஒன்றை கொன்று விட்டோம். அந்த இளம் புலியின் பெயர் ஆதித்த கரிகாலன்."

"ஆ..." அதிர்ச்சியில் வாய் பிளந்தாள் நக்கன் சுந்தரி.

"இதில் அதிர்ச்சியடைய ஒன்றுமில்லை. நீலமதிக்கும் அவள் தாய்க்கும் தெரிந்த ரகசியம்தான். அந்த ரகசியத்தை தூக்கிக் கொண்டு தஞ்சையிலிருந்து மதுரைக்கு வந்து விட்டார்கள். இவர்களை அனுப்பி வைத்த காமி இந்நேரம் இறந்திருப்பாள். ஒளித்து வைத்த நீயும் கொஞ்ச நேரத்தில் இறந்திருப்பாய். வேறு எதாவது நீ தெரிந்து கொள்ள வேண்டுமா சுந்தரி..." குறுவாள் ஆடியது கும்மாளமாய்.

"ஏன்... ஏன் கொன்றீர்கள் இளவரசரை...?" நக்கன் சுந்தரியின் உதடுகள் நடுங்கியது.

"நீலமதி." அழைத்தான் ரவிதாசன் குறுவாளை அசைத்து.

"ம்..." என்றாள் நீலமதி தொண்டைக்கள்.

"நீலமதி உனக்கு கொன்றது தெரியும். இளவரசனை ஏன் கொன்றோம் தெரியுமா... தெரியுமா... தெரியுமா..." கோபத்தில் வெடித்தான் ரவிதாசன்.

"தெரியாது" என்றாள் நீலமதி குறுக்கே தலை அசைத்து.

○



# இருபத்து மூன்று

இறந்து கிடந்த நக்கன் காமியை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு மேன் மாடத்து படிகளில் இறங்கத் தொடங்கினார் சோழ தளபதி பரமன் மழபாடி. பின் தொடர்ந்தான் தஞ்சை கோட்டை காவல் படைத்தலைவன் அழகன். வழியை மறிப்பது போல வாசலில் நின்று கொண்டிருந்தார் சோழ தேசத்தின் பெருந்தரத்து அதிகாரி சோமன். விழிகளில் பயம் அமர்ந்திருந்தது.

“உங்களை இங்கு எதிர்பார்க்கவில்லை சோமன்” என்றான் பரமன் மழபாடி உதடுகளில் புன்னகையை தொங்கவிட்டு.

“நக்கன் காமி இறந்த செய்தி எனக்கு சற்று தாமதமாக கிடைத்து விட்டது. உங்களைத் தேடிச் சென்றேன். நீங்கள்...”

“நான் தேடி வருவதுதானே முறை.”

“என்ன சொல்கிறீர்கள்..?” பயத்தில் வியர்த்து போயிருந்தார் சோமன்.

“உங்களை அனுப்பச் சொல்லி உத்தரவு வந்திருக்கிறது” என்றார் தளபதி கிசுகிசுக்கும் குரலில்.



வார்த்தைகள் அருகில் நின்ற அழகனுக்கு வியப்பைத் தந்திருந்தது. சோமன் இதயத்தில் குழப்பம் வந்திருந்தது.

“எங்கே...” ஒற்றை வார்த்தையும் தடுமாறியது.

“பாதாளச் சிறைக்கு” என்றார் பரமன் மழபாடி எதோ சுற்றுலா தளத்துக்கு அனுப்புவது போல். தஞ்சை கோட்டை காவல் தலைவன் வாய் அதிர்ச்சியில் திறந்திருந்தது. அந்த பதில் சோமனுக்கு கோபத்தை வரவழைத்திருந்தது.

“யார் தந்த உத்தரவு...?” முகத்துக்கு நேர் கேள்வி வீசப்பட்டது.

“வல்லவரையர் வந்தியத் தேவர்.” பதில் வந்தது அமைதியாய்.

“அவனுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியது யார்...?” கோபத்தில் வார்த்தைகளில் ஒருமை வந்திருந்தது.

“சோழ மாமன்னரின் செல்வ மகள் குந்தவை பிராட்டியார்” சேனாதிபதியாரின் குரலில் இறுக்கம் வந்திருந்தது. அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்து போய் நின்றார் சோமன்.

“சோமன்...”

“ம்...”

“என்னை பாதாளச் சிறைக்கு அனுப்பச் சொன்னது யார் என்று கேள்வி கேட்ட உனக்கு பாதாளச் சிறைக்கு அனுப்புகிற அளவுக்கு என்ன குற்றம் செய்தேன் என்று ஏன் கேள்வி கேட்க முடியவில்லை. நீ செய்த குற்றம் உனக்கே

உறுத்துகிறதா... நீ செய்தது கொலை.'' இம்முறை சோமன் அதிர்ச்சியடையவில்லை.

அருகில் நின்று கொண்டிருந்த அழகன் தான் அதிர்ந்து போயிருந்தான்.

"நான் கொன்றதற்கு காரணம் இருக்கிறது.'' என்றான் சோமன் குரலை இறக்கி.

"யாரைக் கொன்றதற்கு...?'' பரமன் மழபாடி கேள்வி கேட்டார் குரலை உயர்த்தி.

"நக்கன் காமியை'' என்றான் சோமன் சற்று தயக்கத்துடன்.

"என்ன குற்றம் செய்தாள்...?''

"ராஜத்துரோகம்'' குரல் தயக்கத்தை உதறியிருந்தது.

"அவள் கொல்லப்பட வேண்டியவள்தான்'' தலை யசைத்து ஆமோதித்தார் சோழ சேனாதிபதி.

"வேறு என்ன குற்றம் செய்தேன்...?''

"கொலை'' என்றார் பரமன் மழபாடி.

"இன்னொரு கொலையா...?'' அவனை அறியாமல் கேள்வி வந்தது அழகனிடமிருந்து.

சோமனின் தொண்டைக் குழிக்குள் சிக்கிக் கிடந்தது வார்த்தைகள்.

"கொலைதான். அதுவும் ராஜத்துரோகம்.''

"ராஜத்துரோகமா...'' சோமனின் குரல் உடைந்து போயிருந்தது பயத்தில்.



"ஒரு கொலையை மறைக்க இன்னொரு கொலை.''

"..........................''

"சோழ தேசத்து பெருந்தரத்து அதிகாரியே சோழ இளவரசனை கொலை செய்தால் அதற்குப் பெயர் என்ன சோமன்... ராஜத்துரோகம்தானே...'' மௌனமாய் தலை குனிந்து நின்றான் சோமன்.

"ம்... இனி பாதாளச் சிறைக்கு போகிறாயா...?''

"நான் மட்டும்...''

"இந்த கொலையை செய்யவில்லை. நான்கு பேர் சேர்ந்து இளவரசனை கொன்றிருக்கிறீர்கள் அப்படித் தானே...'' மீண்டும் அதிர்ந்து போயிருந்தான் சோமன்.

"கொலை செய்த நான்கு பேரில் நீ தஞ்சையில் இருக்கிறாய். மீதி மூன்று பேரும்...''

"மூன்று பேரும்...'' குரல் நடுங்கியது.

"அந்தக் கவலை இளவரசி குந்தவை பிராட்டியாரு டையது. ம்... இவனை இழுத்துச் செல்லுங்கள்.'' கடைசி மூன்று வார்த்தைகள் கட்டளையாய் ஒலித்தது.

சோமனை சூழ்ந்து கொண்டனர் சோழ காவல் படை வீரர்கள். தஞ்சை கோட்டைக் காவல் படைத்தலைவன் இடுப்பிலிருந்த வாள் கைக்கு வந்திருந்தது. தளிச் சேரிப் பெண்கள் கண்களில் பயம் வந்திருந்தது.

நீலமதியை நோக்கி கேள்வி ஒன்றை வீசியிருந்தான் ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராசன். அந்த கேள்வி

'இளவரசன் ஆதித்த கரிகாலனைக் கொன்றது உனக்குத் தெரியும்... ஏன் கொன்றோம் என்று தெரியுமா...' என்பது. அந்தக் கேள்வியில் கோபம் மிதந்தது. நீலமதி 'தெரியாது' என்று தலையாட்டினாள்.

"தெரியாதா... தெரியாதா... தெரிஞ்சுக்க... தெரிஞ்சுக்க... உன் தந்தைக்கும் இந்த உண்மை தெரிஞ்சதாலதான் கொன்னுட்டோம். உன் தந்தை எங்களில் ஒருவராய், பெருந்தரத்து அதிகாரியாகத்தான் இருந்தார். ராஜ விசுவாசம், ராஜத் துரோகம் அது இதுன்னு சொல்லி வீணாக பொண்டாட்டியையும் பிள்ளையையும் விட்டுட்டு செத்துப் போயிட்டார். சாகுற அவசரத்தில் இளவரசன் ஆதித்த கரிகாலனை கொன்றது யான்னு உன்கிட்டேயும் உங்க அம்மாகிட்டேயும் சொல்லிட்டு செத்துப் போயிட்டாரு. நீயும் ரகசியத்தை சுமந்துகிட்டு மதுரைக்கு ஓடி வந்தே. விதி உன்னை துரத்திக்கிட்டு மதுரைக்கே வந்திடிச்சி. இனி நீ தப்ப முடியாது. உன் அம்மாவையும் உன்னையும் இந்த மாளிகையிலேயே கொன்று புதைத்து விடத்தான் வீரர்களுடன் வந்திருக்கிறேன். உனக்கு தெரிந்த உண்மைகளை குந்தவையிடம் சொல்ல ஓடி வந்தாய்... அதற்கு முன் உனக்குத் தெரியாத சில உண்மைகளையும் சொல்லி விடுவது நல்லது என்று நினைக்கிறேன். ஆத்மா சாந்தியடையும் தானே..." என்றவன் வலது கை சட்டென்று குறுவாளை ஓங்கியது.

நின்ற இடத்திலிருந்து ஓட முயன்ற நக்கன் சுந்தரி அசையாமல் நின்றாள்.

"சுந்தரி... அசையாமல் நில். அவசரப்பட்டு குறுவாளுக்கு அவசரமாய் இரையாகி விடாதே... இறுதியில் உன்னைக் கொல்கிறேன். ஆற்றில் நீ அடித்த கொட்டம் என் காதுக்கு வந்து சேர்ந்தது. பாண்டிய மன்னனை அவமதித்த உன் நாவுக்கு தண்டனை அளித்து விட்டு உன் உயிரை அந்த சிவனிடம் அனுப்புகிறேன் தேவரடியாளே... அதற்கு முன் நீயும் தெரிந்து கொள் ஆதித்த கரிகாலன் இறந்த கதையை" ரவிதாசன் சிரிப்பில் அலட்சியம் மிதந்தது.

"ரவிதாசா... நீயோ சோழ தேசத்தின் பெருந்தரத்து அதிகாரி... ஏன் கொன்றாய் சோழ தேசத்து இளவரசனை...?" குற்றவாளியைக் கேள்வி கேட்கும் வேகத்தில் வந்தது கேள்வி.

"நீலமதியா இது... வீதி வீதியாய் ஓடி ஒளிந்த நீலமதியா இது... அபாரம். அடி சின்னப் பெண்ணே... சாவதற்கு முன் உனக்கும் ரவிதாசனிடம் கேள்வி கேட்க ஆசையா... நிறைவேற்றி வைக்கிறேன். இறந்து போன இளவரசன் ஆதித்த கரிகாலன் கதையை தெரிந்து கொள்வதற்கு முன் இறந்து போகப் போகிற இளவரசன் அருண்மொழி வர்மன் கதையை தெரிந்து கொள். என் குறுவாளிடமிருந்து உன்னைக் காப்பாற்றிய குமரன் வேறு யாருமல்ல அருண்மொழி வர்மன்தான். மழையில் உன்னை தூக்கிச் சுமந்தவனும் அருண்மொழி வர்மன்தான்." இந்த இடத்தில் பேச்சை நிறுத்தி விட்டு நீலமதி முகம் பார்த்தான்.

அவளோ அந்த இக்கட்டான நிமிடத்திலும் காதல் வயப்பட்டிருந்தாள். தன்னை தொட்டு தூக்கிய வீரன் இளவரசன் அருண்மொழிவர்மன் என்ற நினைப்பே அவளுக்குள் வெட்கத்தை வரவழைத்திருந்தது.

"நீலமதி..."

"ம்..."

"காதலா... இறந்து போகப் போகிற கடைசி நிமிடங்களில் அந்தக் கழுதை எதற்கு... சோழ இளவரசர் ஆதித்த கரிகாலனை கொன்றதற்கு காரணங்களை சொல்கிறேன்... சொல்லட்டுமா."

"ம்.."

"ஒன்று பாண்டிய சேனாதிபதி மாறவர்மர் தங்கக் காசு களால் என்னையும், என் சகோதரர்களையும் குளிப்பாட்டி யது. இரண்டு என்னையும் என் சகோதரர்களையும் குறுநில மன்னர்களாய் ஆக்குவதாய் உறுதி கொடுத்தது. மூன்று என் தந்தைக்கு ராஜத்துரோகப் பட்டம் கட்டி ஆதித்த கரிகாலனின் தாத்தா அரிஞ்சயன் பாதாளச் சிறையில் அடைத்துக் கொன்றது. இந்த மூன்றும்தான் இளவரசனை நாங்கள் கொன்றதற்கு உண்மையான காரணங்கள். சோழ தேசத்தை அழித்தால்தான் நாங்கள் குறுநில மன்னர்களாக முடியும். சோழ தேசம் அழிய வேண்டுமென்றால் தன்னிகரற்ற வீரன் ஆதித்த கரிகாலன் அழிய வேண்டும். அவனை நேருக்கு நேர் நின்று எவனும் அழிக்க முடியாது. சேவூர் போரே சாட்சி. அதனால் சதியினால் கொன்றோம்" என்றான் ரவிதாசன் கனவில் பேசுவது போல்.

"உன் சகோதரர்கள் யார்...?" அதட்டலாய் வந்தது கேள்வி நக்கன் சுந்தரியிடமிருந்து.

"சாவதற்கு முன் தலை அறுத்த சேவல் குதிக்குமாம். அப்படியிருக்கிறது உன் அதட்டல். உன் ஆத்மாவும் சாந்தி



அடைய வேண்டுமல்லவா... சொல்கிறேன். சோழ இளவரசன் கொலைக்கு காரணமாய் இருந்தவர்கள் நான், என் சகோத ரர்கள் சோமன், ரேவதாச கிரமவித்தன், பரமேசுவரன்..." இடையில் புகுந்தாள் நீலமதி கோபமாய்.

"முட்டாள்... உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்திருக் கிறாய்."

"என்னடி சொன்னாய்...?" நீலமதியை குறிபார்த்து குறுவாளை ஓங்கினான் ரவிதாசன்.

அதே நேரம் -

பாய்ந்து வந்த குறுவாள் ஒன்று -

தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கை -

அறுத்துக் கொண்டு தரையில் விழுந்தது.

அந்த இடத்தை இருட்டு ஓடி வந்து இறுக்கிப் பிடித்துக் கொண்டது.

"ஆ" அலறியது பெண் குரல் ஒன்று.

○



# இருபத்து நான்கு

குதிரையிலிருந்து தவறி விழுந்த நதிமல்ராவை மண்ணில் விழாமல் காப்பாற்றிய சோழ இளவரசன் அருண்மொழிவர்மன், அடுத்த சில நிமிடங்களில் அவளைக் கொன்றுவிட முடிவு செய்து விட்டது போல அந்த ஆரணங்கின் அழகிய மார்பகத்தை குறி வைத்து நீட்டினான் குறுவாளை. அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் ‘நீ திருடிதான்’ என்று குற்றமும் சுமத்தினான்.

அந்த குற்றச்சாட்டில் அதிர்ந்து போனாள் நதிமல்ரா. தயக்கத்துடன் திரும்பி தன்னை தரையில் தள்ளிய குதிரையைத் தேடினாள். அந்த பொல்லாத குதிரையோ அந்த கட்டழகியை பாதி வழியில் விட்டுவிட்டு இருட்டுக்குள் ஓடிப் போயிருந்தது.

“என்ன... நான் திருடியா...” வார்த்தைகள் தடுமாறியது.

“சந்தேகம் என்னயிருக்கிறது. நீ திருடிதான்” என்றான் சோழ இளவல் அழுத்தம் திருத்தமான குரலில். குறுவாள் தொட்டிருந்தது இளமையின் வெகுமதிகளை.

“எதை... எதை திருடினேன்...?” இருட்டுக்குள் வியர்த்திருந்தாள் காரிகை.



“இதயம்... என் இதயம்” என்றான் கண்களால் கண்களை உரசி.

“ஆண்களின் பொய் சுமக்கும் கழுதை எனக்கெதற்கு...? மண்ணில் விழுந்து கிடக்கிறதா என்று பார்.” நதிமல்ரா உதட்டோரம் புன்னகை வழிந்தது.

இடது கையால் குறுவாளை அலட்சியமாய் ஓரம் தள்ளினாள்.

“என்னிடம் அது இதுவென்று உளறிவிட்டு உயிரோடு நின்று கொண்டிருக்கும் ஆண் மகன் நீயாகத்தான் இருக்கும்” என்றாள் சேயிழை நெற்றியில் புரளும் கேசத்தை ஒதுக்கியபடி.

“ம்... உனக்கு பேச்சாற்றலும் இருக்கிறது.”

“இருந்து விட்டு போகட்டும். நீ யார்... உன் பெயர் என்ன...”

“விடிவதற்குள் உனக்கு தெரிந்து விடும்.”

“வாய் நீளம்.”

“என் வாளும் நீளம்தான்.”

“பிழைத்துக் கொள்வாய். உன்னிடம் பேசினால் என் இதயத்தைத்தான் தொலைத்து விடுவேன் என்று பயமாயிருக்கிறது. நீ என் உயிரை காப்பாற்றியிருக்கிறாய். என் பெயர்...”

“நதிமல்ரா” அருண்மொழி வர்மன் வார்த்தையில் அதிர்ந்து போனாள் நதிமல்ரா.

"என் பெயர் உனக்கு எப்படி."

"தெரிந்திருக்கிறது...?"

"நீ...?"

"நீங்கள்." வார்த்தையில் அழுத்தம் கொடுத்தான் சோழ இளவல்.

"ம்... நீங்கள்...?"

"சோழ வீரன்."

"வீரரே..."

"ம்..."

"இன்னொரு முறை உங்களை சந்திக்க விரும்பு கிறேன்" என்றாள் நதிமல்ரா கண்களில் கனவுடன்.

"இந்த சந்திப்பு முடிவுக்கு வந்து விட்டதா...?"

"முடிவுக்கு வந்து விட்டதாகத்தான் நினைக்கிறேன். என் பெயர் உங்களுக்கு தெரிந்திருப்பதே எனக்கு ஆபத்துதான். ஆனால் ஆபத்து உண்டாக்கும் நோக்கம் உங்களிடம் இருப் பதாகத் தெரியவில்லை. அதற்கான காரணமும் எனக்குத் தெரியவில்லை. அதிகம் பேசுகிற நேரமும் இதுவல்ல."

"நதிமல்ரா..."

"நீங்கள் என் பெயரை உச்சரித்தும், என் எதிரி பாசறையில் இருக்கும் சோழ வீரனாய் இருந்தும் உங்கள் இதயம் தொட என் குறுவாளுக்கு விருப்பம் இல்லை. அதற்கான காரணமும் தெரியவில்லை."



"நதிமல்ரா நான்..."

"நீங்கள்தான். எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

"உதவியா...?"

"உதவிதான். வைகைக் கரையில் எனக்கு ஒரு செய்தி காத்திருக்கிறது. அங்கே செல்ல எனக்கு ஒரு குதிரை வேண்டும்."

"தருகிறேன்... ஆனால்..."

"என்ன ஆனால்..."

"நீ இறங்கியதும் குதிரை திரும்பிவிடும்."

"நல்ல குதிரை. நல்ல எஜமான்" நதிமல்ரா முகத்துக்கு உற்சாகம் வந்திருந்தது.

அருண்மொழிவர்மன் உதடு குவித்து ஒலி எழுப்பி னான் இரவுப் பறவையாய். இருட்டிலிருந்து ஓடிவந்தது சோழ இளவலின் குதிரை. அந்த குதிரையின் காதில் ஏதோ கிசுகிசுத்தான்.

எஜமானனின் வார்த்தைக்கு பலமாய் தலையாட்டியது அந்தப் புரவி.

"குதிரையிடம் பேசுவீர்களா...?" வியப்பாய் வந்தது கேள்வி அந்த ஆரணங்கிடமிருந்து.

"மனிதர்களை நம்பித்தான் எதையும் பேச முடியாது."

"குதிரையிடம் என்ன சொன்னீர்கள். நான் திருடி என்றா...?"

“இந்த பெண் உன் எஜமானுக்கு வேண்டியவள். முன் அழகை அதிகமாய் குலுக்கி விடாதே... பின் அழகை ரொம்பவும் அலுக்கி விடாதே... மொத்தத்தில் உலுக்கி விடாதே என்று சொல்லியிருக்கிறேன்.”

“குறும்புதான்” குதிரையில் அலட்சியமாய் ஏறி அமர்ந்தாள் நதிமல்ரா.

“நதிமல்ரா.”

“மம்.”

“குதிரையிடம் சொல்லியிருக்கிறேன். ஆற்றங்கரைக்கு மட்டுமல்ல. கடற்கரைக்கு போவதாயிருந்தாலும் குதிரை அழைத்துச் செல்லும்.”

“கடற்கரைக்கா...?” ஆச்சர்யத்தால் இமை உயர்த்தினாள்.

“விடை பெறலாம்.”

“வருகிறேன் வீரரே.”

“வர வேண்டாம்.”

“நிச்சயம் வருவேன். உங்கள் பெயரை தெரிந்து கொள்வதற்கு.” வார்த்தைகளை காற்று இழுத்துச் சென்றிருந்தது.

நதிமல்ராவை சுமந்து கொண்டு குதிரை ஓட ஆரம்பித்திருந்தது நிதானமாய். பெரு மூச்சொன்று தாலாட்டியது அருண்மொழிவர்மன் நெஞ்சகத்தை. எங்கிருந்தோ வந்து முளைத்திருந்தான் கம்பன் மணியன். அவன் வலது கரத்தில் குறுவாள் ஒன்று முளைத்திருந்தது.

அந்த குறுவாளின் குறி -



ஓடுகின்ற குதிரையின் முதுகில் அமர்ந்திருந்த நதிமல்ராவின் முதுகில் இருந்தது.

கடைசி இமைமூடு பொழுதில் -

குறுவாள் வீச்சை தடுத்து நிறுத்தினாள் சோழ இளவல்.

“அவள்...”

“நதிமல்ரா.”

“தெரிந்துமா குறுவாளை வீச விடாமல் தடுத்தாய்...?”

“இனி அவளால் எதுவும் செய்ய முடியாது. அவளோடு வந்த ஆறு சிங்களவர்களையும் இந்நேரம் வல்லவரையர் வந்தியத் தேவன் நடக்க விடாமல் முடமாக்கியிருப்பார். பாவம் பெண். தப்பித்து போகட்டும். மீண்டும் வர மாட்டாள்.” அருண்மொழிவர்மன் வார்த்தைகளில் கவலை மிதந்தது.

நதிமல்ராவும் குதிரையும் இருட்டில் தொலைந்தது....

ரவிதாசன் கோபத்தின் உச்சத்துக்கு சென்று குறுவாளை குறி வைத்து நீலமதியை நோக்கி வீச எத்தனித்ததும், எங்கிருந்தோ பறந்து வந்த குறுவாள் ஒன்று தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த தூங்கா விளக்கை அறுந்து விழச் செய்ததும், அதைத் தொடர்ந்து அந்தக் கூடம் இருட்டின் பிடியில் சிக்கிக் கொண்டதும் மின்னல் வேகத்தில் நடந்து முடிந்திருந்தன.

அதே விநாடிகளில் -

இருட்டுக்குள் இருந்து ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டது.

அடுத்த சில இமை மூடு பொழுதுகள் கரைந்த பின் -

அந்த கூடத்தில் தீப்பந்தம் ஒன்று பிரவேசித்திருந்தது.

அதே நேரம் -

ரவிதாசனின் நெஞ்சை குறி வைத்து மெல்லிய வாள் ஒன்று நீண்டிருந்தது. பதற்றமாய் நிமிர்ந்தான் சதிகாரன்.

மெல்லிய வாளின் கைப் பிடியை மெல்லிய கரம் ஒன்று பிடித்திருந்தது.

அந்த கரத்துக்கு சொந்தக்காரி -

சோழ இளவரசி குந்தவை. உதட்டோரச் சிரிப்பில் கோபம் இருந்தது.

"முட்டாள்களே... இவளைப் பிடித்து கட்டுங்கள்" கோபத்தில் வெடித்தான் ரவிதாசன்.

அவன் கட்டளைக்கு பாண்டிய வீரர்கள் யாரும் ஓடி வராததால் திரும்பிப் பார்த்தான் அவசரமாய். அந்த கூட மெங்கும் சோழ காவல் வீரர்கள் நின்று கொண்டிருந்தனர் கூர் ஈட்டியுடன். பாண்டிய வீரர்கள் யாரையும் காணவில்லை. திகைத்துப் போனான் ரவிதாசன். கண்களில் பயம் வந்திருந்தது.

"ரவிதாசா... உன்னுடன் வந்த பாண்டிய வீரர்கள் இந் நேரம் எங்கள் வசம் இருக்கும் வடக்குச் சிறையை நோக்கி சென்று கொண்டிருப்பார்கள்..." என்றாள் சோழ இளவரசி குந்தவை.

அவளுக்கு பின்னால் குறுவாளுடன் நின்று கொண் டிருந்தாள் கயல்விழி.



எதோ ஒரு பெண்ணின் வலி முனகல் சத்தம் கேட்க -

அத்தனை கண்களும் அந்த திசைக்கு திரும்பின. நக்கன் சுந்தரி வலியால் துடித்துக் கொண்டிருந்தாள். நீலமதியைக் குறி வைத்து வீசப்பட்ட ரவிதாசனின் குறுவாளை குறுக்கே விழுந்து மார்பில் ஏத்தியிருந்தாள் சுந்தரி.

அருகில் அமர்ந்திருந்தனர் நீலமதியும் அவள் தாயும்.

"கூத்தரசா... உடனே வைத்தியரை அழைத்து வா" கட்டளை வந்தது சோழ இளவரசியிடமிந்து.

அந்த இடத்தை விட்டு ஓட எத்தனித்தான் ரவிதாசன். குந்தவை கை வாள் சற்று அழுத்தியது அவன் மார்பில்.

"ரவிதாசா... வீணாய் ஓட எத்தனிக்க வேண்டாம். விசாரிக்காமலே கொன்று விடுவேன். உன் உயிரை நீயே தொலைத்து விடாதே" என்றாள் குந்தவை எச்சரிக்கும் குரலில்.

"ரவிதாசா... உனக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்."

"எதற்கு...?" என்று கேட்டான் மெலிதான குரலில்.

"நடந்தது ஒன்று விடாமல் தெளிவாய் சொன்னாயே அதற்கு... புல்லுருவியாய் இருந்த பரமேசுவரனையும், சோமனையும் சோழ தேசத்துக்கு அடையாளம் காட்டினாயே அதற்கு... என் அண்ணன் ஆதித்த கரிகாலன் இறந்ததற்கு பாண்டியர்களின் தூண்டுதல்தான் காரணம் என்று தெரிவித் தாயே அதற்கு... ரவிதாசா... சரியான தருணத்தில் உன் முகமூடி கிழிந்து நிஜமுகம் காட்டினாயே அதற்கு... எங்களுக்கு இதுவரை நிஜ முகம் காட்டாத ரேவதாச கிரமவித்தனை

பிடித்து தந்திருக்கிறாயே அதற்கு..." என்றாள் மன்னன் மகள் புன்னகையுடன்.

மௌனமாய் தலை குனிந்து நின்றான் ரவிதாசன்.

அந்த விநாடிகளில்...

குந்தவைக்கு பின்னால் கையில் குறுவாளுடன் நின்று கொண்டிருந்த கயல்விழியின் கழுத்தை தொட்டது குறுவாள் ஒன்று.

O



# இருபத்தைந்து

**கை**வாளை ரவிதாசன் மார்பில் தொட்டபடி - அலட்சியமாய் மன்னன் மகள் குந்தவை நின்று கொண்டிருக்க - சோழ இளவரசியின் மெய்க் காவல் படை வீராங்கனை போல கையில் குறுவாளுடன் கயல்விழி பின்னால் நின்று கொண்டிருக்க - அவள் சற்றும் எதிர்பார்க்காத விநாடியில் கயல்விழியின் கழுத்தை உரசியது உயிர் குடிக்க வந்தது போல்.

உரசியதோடு நின்று விடாமல் -

"ம்" என்று மிரட்டவும் செய்தது ஒரு ஆண் குரல்.

அந்த மிரட்டலே அதட்டலாய் தெரிந்தது கயல்விழிக்கு. அவள் கரத்திலிருந்து குறுவாள் நழுவி தரையில் விழுந்தது.

"ட்டணங்" தரையில் விழுந்த குறுவாள் சப்தம் எழுப்பி நிசப்தத்தை கலைத்தது.

"ஆ" என்று அலற எத்தனித்த கயல்விழிக்கு குரல் தொண்டைக்குள் அமுங்கியது. முதுகுக்குப் பின்னால் கேட்ட சத்தங்களில் சிறிதும் அசைந்து கொடுக்காத குந்தவை

- சற்றும் அதிராமல் - திரும்பிப் பார்க்காமல் வாய் அசைத்தாள்.

"அருண்மொழிவர்மன் விளையாடுகிற விளையாட்டா இது...?" குரல் அதட்டியது உரிமையுடன்.

"அக்கா மன்னிக்க வேண்டும். கயல்விழி கையில் குறுவாளைப் பார்த்ததும்..."

"பார்த்ததும்...?"

"..............."

"அருண்மொழி... கதை முடிவுக்கு வந்து விட்டது. இதோ ரவிதாசன். பரமேசுவரனும், ரேவதாச கிரமவித்தனும்..."

"இந்நேரம் இருவரும் மதுரையில் தங்கியிருக்கிற மாளிகையை கம்பன் மணியன் காவல் படையுடன் சென்று முற்றுகையிட்டிருப்பான்."

"நல்லது. சோமன்...?"

"தஞ்சாவூரில் சோமன் கதையை பரமன் மழபாடி முடித்திருப்பார். நல்ல செய்தி எதிர்பார்க்கிறேன் விடிவதற்குள்."

"திருப்பரங்குன்றத்துப் பெண்...?"

"சிறையில்."

"நதிமல்ரா" கேள்வியில் கொக்கி இருந்தது.

"தப்பி விட்டாள்." என்றான் சோழ இளவல் தயக்கத்துடன்.

"தப்பி விட்டாளா... தப்ப விட்டாயா..."



"இரண்டும்தான்."

"சிங்களர்கள் ஆறு பேர்...?"

"சாகும் வரை சிறையில்."

"அடுத்து...?"

"இன்று இரவே தஞ்சைக்கு போய் விடலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். தந்தையையும், வல்லவரையர் வந்தியத் தேவரையும் சந்தித்தாக வேண்டும்."

"ம்... புதிர் ஒன்று அவிழ்ந்திருக்கிறது. ஒற்றர்கள் நம் எதிரிகளிடமிருந்து கைப்பற்றும் ஓலைகளில் 'சோபரரே' என்று இருக்கும். என்ன இது என்ற குழப்பம் இருந்தது. சோ - சோமன், ப - பரமேசுவரன், ர - ரவிதாசன், ரே - ரேவதாசன் என்று தெளிவாகி விட்டது" என்றாள் குந்தவை உணர்ச்சி மிதக்காத குரலில்.

அருண்மொழிவர்மன் பார்வை ரவிதாசன் மீது திரும்பியிருந்தது.

"ரவிதாசா... உன்னையும், உன் சகோதரர்களையும் சுந்தரச் சோழ தேவரின் அமைதியான ஆட்சியில் தண்டிக்க கூடாது. என் ஆட்சியில்தான் தண்டிக்க வேண்டும். உங்களுக்கு அளிக்கப்படும் தண்டனை பொது மக்களுக்கும் தெரிய வேண்டும். நீங்கள் பெறப் போகும் தண்டனையை -

'கல்வெட்டு ஒன்றில் செதுக்கி வைக்க வேண்டும் -

---

* *சோமன், ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராசன், பரமேசுவரனான இரு முடிச் சோழ பிரமாதிராசன், ரேவதாசக் கிரம வித்தன். பின் இரண்டு பேர் சிறந்த அரசியல் பட்டம் பெற்றோர். காட்டுமன்னார் கோயிலுக்கு அருகிலுள்ள உடையார் குடி கல் வெட்டு.*

ம்... இவனை இழுத்துச் சென்று பாதாள சிறையில் அடையுங்கள். எந்த நேரமும் காவல் பலமாக இருக்கட்டும்'' என்றான் அருண்மொழிவர்மன்.

ரவிதாசனை இழுத்துச் சென்றனர் சோழ காவல் வீரர்கள்.

வைத்தியருடன் உள்ளே நுழைந்தான் வீரன் கூத்தரசன். அவரச சிகிச்சை ஆரம்பித்தது நக்கன் சுந்தரிக்கு.

நீலமதியின் பார்வை சோழ இளவலை தொட்டு தொட்டு திரும்பியது. கயல்விழியின் கயல்விழிகளோ நீலமதியைக் கடித்தது.

நிலைமையின் விபரீதம் உணர்ந்த அருண்மொழி வர்மன் - ''வருகிறேன்'' என்ற ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டு காணாமல் போனான்.

மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் குந்தவை.

**மே**ன் மாடத்து சாளரத்தின் வழியே வானம் பார்த்தான் அருண்மொழிவர்மன்.

காற்று காதல் சுமந்திருந்தது. மேகம் துரத்தும் நிலவு தெரிந்தது. நீல வானம் கறுத்து போய்க் கிடந்தது. நிலவோ மஞ்சளாய்... இல்லை இல்லை... நீலமாய் தெரிந்தது மன்னன் மகன் கண்களுக்கு.

நீல நிலவு... நிலவுக்குள் மஞ்சளாய் முகம் தெரிந்தது... நீல மதி... தன்னை அழைப்பது போலிருந்தது சோழ இளவலுக்கு.



''அருகிலிருக்கும் என் முகத்தை பார்க்காமல் வானத்தில் என்ன பார்க்கிறீர்கள்...?'' கோபமாய் வந்தது கேள்வி கயல் விழியிடமிருந்து.

''நட்சத்திரங்கள்.''

''பொய்.''

''நிலவைப் பார்க்கிறேன்.''

''உங்கள் பாட்டி, எங்கள் பாட்டி காலத்திலிருந்து வானத்தில் மிதக்கிற அதே மஞ்சள் நிலவு தானே... ம்... அதே நிலவு தானே...?''

''அன்று வந்தது அதே நிலா... இன்று வந்தது...''

''இன்று வந்திருக்கும் நிலவுக்கு என்ன ஆயிற்று...?''

''நிலவைப் பார்.''

''பார்த்தேன்.''

''நிலவின் நிறம்...?''

''மஞ்சள்.''

''என் கண்ணுக்கு நீலமாய் தெரிகிறதே...''

''தெரியும்... தெரியும்... என் மடியில் படுத்துக் கொண்டு நீலமதியைத் தேடுகிறீர்களா...?'' கோபத்தில் எழுந்து கொண்டாள் கயல் விழி.

மஞ்சத்தில் உருண்டான் அருண்மொழிவர்மன்.

''சோழ தேசத்து ஆண் மக்கள் மட்டும் பைத்தியக் காரர்கள். ஒரே ஒரு மனைவியோடு மட்டும் வாழ்ந்தாக

வேண்டும். நீங்கள் ராஜாக்கள் நூறு மனைவி வைத்துக் கொள்வீர்கள் அப்படித்தானே...'' கேள்வி சவுக்கை வீசினாள் ஆரணங்கு.

''அவர்கள் ராஜாக்கள். நான் அருண்மொழிவர்மன். என்னுடைய காதல் சாம்ராஜ்யத்தில் ஒரே ஒருத்திக்குத்தான் இடம்.''

''பொய் சொல்கிறீர்கள்'' என்றாள் பொய்யாய் சிணுங்கி.

''பொய் சொல்லும் வழக்கம் எங்க பரம்பரைக்கே கிடையாது'' என்றான் அந்த வாலிப வீரன் அவரசமாய்.

''இப்படித்தான் சுந்தரச் சோழ தேவரும் உங்கள் அம்மாவிடம் வாக்கு கொடுத்து விட்டு தேசங்களுக்கு இடையில் பகை வந்து விடக் கூடாது என்று சொல்லி விட்டு தேசத்துக்கு ஒரு மனைவியை அழைத்து வந்து அந்தப் புரத்தை நிரப்பி விட்டார்.''

''அதிகம் பேசுகிறாய்.''

''அடிமை ராணிகளில் ஒருத்தியாய் இருக்க வேண்டுமா..?''

''என் வானத்தில் ஒரே நிலவு இந்த மஞ்சள் நிலவுதான்'' மன்னன் மகன் கண்களில் நீல நிலவு சிரித்தது.

''தட்... தட்... தட்...'' கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

ஓடிப் போய் கதவை திறந்தான் அருண்மொழிவர்மன்.

வாசலில் குந்தவை.

''இரவோடு இரவாக தஞ்சாவூர் போவதாகச் சொன்னாய்.''



''சொன்னேன்'' ஒற்றை வார்த்தையும் தடுமாறியது.

''இங்கே என்ன செய்கிறாய்...?'' குந்தவை கேள்வியில் கொக்கி இருந்தது.

''கயல்விழியுடன்...''

''கண்ணா மூச்சியா...''

''தொட்டுப் பிடித்து விளையாடுகிறேன்.''

''ம்... ம்... புறப்படு. உனக்காக கம்பன் மணியன் காத்திருக்கிறான்.''

''வருகிறேன் குந்தவை'' என்றான் எரிச்சலுடன்.

''அக்கா'' வார்த்தையில் அழுத்தம் கொடுத்தாள்.

''வருகிறேன் அக்கா. கயல் விழி வருகிறேன்'' வாசலை நோக்கி நடந்தான் போக மனமில்லாமல்.

''நிலவு மஞ்சளாய் இருக்கட்டும். நீலம் பூச வேண்டாம்'' என்றாள் கயல்விழி எச்சரிக்கும் குரலில்.

''ஆகட்டும் ஆகட்டும்.'' சோழ இளவலின் குரலும் தலையாட்டியது.

''என்னடி கயல்விழி உளறுகிறாய். காதல் பித்தம் தலைக்கு ஏறி விட்டதா...?''

''போங்கள் குந்தவை.''

''இந்த மழை இரவில் நான் எங்கே போவது... உன்னோடு தான்.'' என்றாள் குந்தவை புன்னகை மாறாமல்.

அவசரமாய் திரும்பி அக்காவுக்கு தெரியாமல் காதலியை நோக்கி கண்ணடித்து விட்டு காணாமல் போனான் அருமைத் தம்பி.

கயல் விழி தங்கியிருந்த மேன் மாடத்தை விட்டு தட தடத்து இறங்கிய சோழ இளவல் - நீலமதியை தங்க வைத்திருந்த மாளிகையை நோக்கி நடக்க ஆரம்பித்தான் திருடனைப் போல.

“அரசாளும் பரம்பரைக்கு இதுவும் ஒரு வேலையாய் இருக்கிறது” தலையில் அடித்துக் கொண்டே இருட்டில் நடக்க ஆரம்பித்தான் - ஒற்றர் படைத்தலைவன் கம்பன் மணியன்.

அடுத்த சில நிமிடங்கள் கரைந்த பின் -

நீலமதி தங்கியிருந்த மாளிகையின் மேன் மாடத்து படிகளில் ஏறிக் கொண்டிருந்தான் சோழ இளவரசன் அருண்மொழிவர்மன்.

மேகத்துக்குள் சிக்கியிருந்த நிலவு வெளியே வந்து எட்டிப் பார்த்தது. கதவை தட்டினான். திறந்து கொண்டது கதவு தயக்கமாய்.

மூடிக் கொண்டது அவரசமாய்.

“நீலமதி.”

“ம்...?”

“நீ அழகாய் இருக்கிறாய்.”

“ம்...”



“நான் இங்கு ஏன் வந்தேன் தெரியுமா...?” குறுக்கே தலையசைத்தாள் நீலமதி. தெரியாது என்பது போல்.

“எனக்கும் தெரியாது” என்றான் அருண்மொழிவர்மன்.

நீலமதி சிரித்தாள் இரவுப் பூக்களாய்.

“இந்த சிரிப்புதான்... இந்த சிரிப்புதான்.”

“உங்களுக்கு பிடித்து விட்டதாக்கும்...?” என்று கேட்டாள் முதன் முதலாய் வாய் திறந்து.

“உன் பெயரும் பிடித்திருக்கிறது.”

“ஆண்கள் பொய் சொல்ல பிறந்தவர்கள்.”

“யாரோ கவிஞன் சொன்ன பொய்.”

“அவனும் ஆண்.”

“உனக்கு என்னை பிடிக்கவில்லையா நீலமதி.”

“பிடித்திருக்கிறது. என் கற்பை காப்பாற்றிய வீரம் பிடித் திருக்கிறது. என்னை தூக்கி சுமந்த கரங்களை பிடித்திருக் கிறது.”

“இந்த கரங்களையா...?” எந்த நிமிடத்தின் எந்த இமை மூடு பொழுதிலோ நம் கண்களுக்கு தப்பி மன்னன் மகனின் கரங்களில் சிக்கியிருந்தாள் நீலமதி.

“இது முறையல்ல.”

“எது...?”

“தனியாய் இருக்கும் இளம் பெண் அறைக்குள் ஒரு ஆண் மகன் புகுந்து...”

"புகுந்து..." நீலமதியை பேசவிடாமல் தடுத்தது வெட்கம்.

அருண்மொழி வர்மன் வானம் பார்த்தான். நிலவு மஞ்சளாய் சிரித்தத. கைகளுக்குள் சிக்கியிருந்த நிலவு நீலமாய் சிரித்தது.

நீலத்தில் பதித்திருந்த கறுப்பு திராட்சைகளாய் அங்கும் இங்கும் ஓடி சிரித்தன கண்கள். நீலத்தில் பதித்திருந்த முத்துக்களாய் வெண் நிறம் காட்டி சிரித்தன பற்கள். நீலத்தில் பதித்திருந்த சிவப்பு பவழமாய் சிரித்தன அழகு உதடுகள்.

மன்னன் மகன் உதடுகள் கறுப்பு திராட்சைகளை தடவி -

வெண் முத்துக்களை எடுக்க முயன்று -

சிவப்பு பவழத்தில் மோதி...

உதடுகளும் உதடுகளும் நகராமல்...

மஞ்சள் நிலவு மேகத் துணி எடுத்து முகம் மறைத்தது வெட்கத்தில். அவர்களோ வெட்கமில்லாமல்....

○✻○